CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தென்னன்

திருப்பெருந்துறை

திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான

திருப்பெருந்துறையான ஆளுடையார் கோயில்

அருள்மிகு யோகாம்பிகை உடனாய ஆத்மநாத சுவாமி திருக்கோயில்

குடமுழுக்கு விழா மலர் - 2006

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

C.S.S.

உ

சிவமயம்

உ
திருவாவடுதுறை ஆதீனம்
சீர்-வளர்-சீர்
குரு மகா சன்னிதானம் அவர்கள்
வாழ்த்தி அருளியது.........

தென்னன்

திருப்பெருந்துறை

திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான

ஆவுடையார் கோயில் (எ) திருப்பெருந்துறை

அருள்மிகு யோகாம்பிகை உடனாய ஆத்மநாத சுவாமி

ஆலயத்தின் தலவரலாற்றை விளக்கும் இந்நூல் மேற்படி

ஆதீன குருமகாசந்நிதானம்

சீர்வளர்சீர் **சிவப்பிரகாச தேசிக பரமச்சாரிய சுவாமிகள்** அவர்கள்

திருவுளப்பாங்கின் வண்ணம் எழுதப்பட்டது.

மங்கலநிறை விய ஆண்டு ஆனித் திருமஞ்சனப் பெருவிழாவின் ஏழாம்நாள் (28-6-2006) புதன்கிழமை அருள்நிறை மாணிக்கவாசகப் பெருமான் பரமாகாச வெள்விடையில் எழுந்தருளிக் காட்சியளித்த நல்வேளையில் குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கரத்தால் வெளியிடப்பட்டது

வெளியிடுவோர்

திருஆதிரை திருமுறை மன்றம்

B1, பாலகணேஷ் அப்பார்ட்மெண்டஸ், 2, ஸ்டேஷன் ரோடு

மேற்கு மாம்பலம், சென்னை – 600 033.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நூலின் விவரம்

நூலின் பெயர்	-	தென்னன் திருப்பெருந்துறை
நூலின் ஆசிரியர்	-	பூசை. ச. அருணவசந்தன்
பதிப்பு ஆண்டு	-	முதல் பதிப்பு - 2006
உரிமை	-	ஆசிரியருக்கு
பதிப்பாளர்	-	திருமதி. நாகபூஷணம் சுதர்சன்
முகவரி	-	B-1, பாலகிருஷ்ண அப்பார்ட்மெண்ட்ஸ், 2 ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை-33.
பக்கங்கள்	-	80 பக்கங்கள்
நூல் அளவு	-	கிரௌன் 1/4 - 24 c.m. × 18.2 c.m.
அச்சிட்டுள்ள பரப்பளவு	-	21.5 c.m. × 15.2 c.m.
பயன்படுத்தப்பட்ட அச்சுத்தாள்	-	பலாப்பூர் H.B. டபுள் கிரௌன் 11.6 kg.
பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்துக்கள்	-	9.2 தமிழ்-13 Pts.
மின் அச்சுக் கோர்வை	-	ஸ்ரீசீனிவாசா கிராபிக்ஸ், சென்னை. - 41.
மறுதோன்றி அச்சகம்	-	ஸ்ரீ ஆப்செட் பிரிண்டர்ஸ், # 3, பழைய சிறைச்சாலைத் தெரு, தங்கசாலை, சென்னை-1. போன் 25283554
நூலின் பொருள்	-	திருப்பெருந்துறையைப் பற்றி - புராணங்கள் - வடமொழி தமிழ் வேதங்கள் - தல வரலாறுகள் ஆகிய வற்றிலிருந்து தொகுக்கப்பட்ட செய்திகள் - தனித்தனி தலைப்புகளில்.
விலை	-	ரூபாய் 60/-
நூலகக் குறியீட்டு எண்	-	

நூலின் முகப்பில் : திருபெருந்துறை மாணிக்கவாசகர் வெள்விடைக்காட்சி

இந்நூலில் இடம்பெற்றுள்ள படங்கள் உதவி : கணேஷ் கேமிரா, மயிலாடுதுறை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையில் சிவஞான
போத நெறிகாட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பானுவாகிக்
குயிலாரும் பொழில் திருவாவடுதுறை வாழ்
குரு நமச்சிவாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ!!

சிவயோக நாயகி பிள்ளைத் தமிழ்

முச்சதுர மூவட்ட மீரெட்டு மோரெட்டு
முளரி இதழ் சூழ்ந்ததற்குள் முதனையிற்
பதினான்கு பத்துடன் பத்தெட்டு முக்கோண
நடுவிந்து வாய்
சச்சபுட முதலான தாளங்கள் தாள் பொரச்
சதகோடி திருமாதரார் சந்தத நடம்புரியும்
நாற்பத்து முக்கோண சக்கர நாயகி வருகவே
மங்கை நாயகி வருகவே
கச்சைத் தலத்திலே பஞ்சபாணத்தொடு
கருப்புவில் பாசாங்குசம் கடிதடத்தில்
காஞ்சிக் கொங்கையில் குங்குமம் கண்களில்
கருணை வாரி
வச்சதொரு வெயிலிளங் கதிரென எனக்குமுன்
வந்த நாயகி வருகவே!
வாதவூரன் பணிவிடைப் பெருந்துறை யோக
மங்கை நாயகி வருகவே!!

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam: Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம்
சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாடுதுறை ஆதீனம்
23–ஆவது குரு மகாசன்னிதானம்
சீர் வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்
திருவாடுதுறை – 609 803 நாகை மாவட்டம்
தொலைபேசி எண் : 04364 – 232021

முகாம் : தலைமையிடம்
நாள் : 26–6–2006

பெறுநர் : திரு. **பூசை. ச. ஆட்சிலிங்கம்** அவர்கள், **சிவசுந்தரி கலைக்கூடம்,**
29–பீமண்ணமுதலி தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை – 600 018.

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க !
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க !

அருள் வாழ்த்துரை

வாத வூரர்தம் பாத தாமரைப்
போத அவாம் மனம் ஏதம் நீங்குமே.
– திருப்பெருந்துறைப் புராணம்.

ஆன்மாக்களின் பக்குவத்திற்கேற்ப இறைவன் அருவ, அருவுருவ, உருவத் திருமேனி கொள்வான். திருப்பெருந்துறை இறைவன் அருவத் திருமேனி கொண்டுள்ள தலம். பிற தலங்கள் அருவுருவ, உருவத் திருமேனி விளங்கும் தலங்கள். இத் தலத்தில் இறைவன் அருவமானதால் நந்தி, கொடிமரம், என்பன இல்லை. உற்சவமும் மாணிக்கவாசகருக்கே.

இந்தப் புனித தலத்துக்குக் குடமுழுக்கு விழா 3–5–2006 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. மண்டலாபிஷேகப் பூர்த்தி 20–6–2006 அன்று நடைபெற்றது. இத்தலத்தில் ஆனித் திருமஞ்சனப் பெருவிழா 22–6–2006 முதல் தொடங்கி 2–7–2006 அன்று நிறைவு பெறுகிறது. இவ்விழா நாளில் ஏழாம் திருநாளன்று (28–6–2006) தென்னன் திருப்பெருந்துறை என்னும் நூல் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 23–வது குருமகா சன்னிதானம் சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களால் வெளியிடப்பெறுகிறது.

இந்நூலில் திருப்பெருந்துறை ஆலய அமைப்பு, நிவேதனச் சிறப்பு, குருந்தமரம், மூர்த்தி தல தீர்த்தங்களின் மறுபெயர்கள், முந்நூற்றுவர், மாணிக்கவாசகர் திருவுருவம் மணிவாசகர் சந்நிதிகள், கொடுங்கைகள், என்பன போன்ற பல்வேறு செய்திகள் இடம்பெற்றுள்ளன.

இந்நூலைச் சென்னை மேற்கு மாம்பலம் திருஆதிரை திருமுறைமன்றம் வெளியிடுவது மகிழ்ச்சிக்குரியது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நமது பேரன்புக்கு உரியவர்களும் திருஆதிரை திருமுறை மன்றத்தின் நிறுவனர் மற்றும் செயலாளர்களான திரு. எஸ். நாகபூஷணம் – சுதர்சன் ஆகியோர்களின் பணி பாராட்டிற்குரியது இந்நூலைத் தொகுத்திட்ட நமது அன்பிற்குரிய திரு. பூசை. ச. அருணவசந்தன் (எ) ஆட்சிலிங்கம் அவர்கள் ஆன்மீகத் தொண்டாக பல நூல்கள் வெளியிட்டு வருவதும் அவருடைய பணியைப் பாராட்டி நமது ஆதீனத்தில் அருள்திரு நமசிவாயமூர்த்திகள் மகரத் தலைநாள் குருபூசை விழாவில் 31–1–2001 அன்று சிவமஞ்சரி செம்மல் என்னும் விருது வழங்கிச் சிறப்பித்திருப்பதும் சைவப் பேருலகம் நன்கறியும்.

இந்நூலிலை யாவரும் பெற்று பயன்கொளவும், இந்நூலை வெளியிடும் திருவாதிரை திருமன்றமும், அதன் செயலாளர்களாளன திரு. எஸ். நாகபூஷணம்–சுதர்சன் ஆகியோர் நலம் யாவும் பெற்றுச் சிறக்கவும், நூலைத் தொகுத்திட்ட திரு. பூசை. ச. அருணவசந்தன் (எ) ஆட்சிலிங்கம் அவர்கள் பணி மேன்மேலும் தொடரவும் நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப் பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

திருவாவடுதுறை ஆதீனம்
★ ★
திருவாவடுதுறை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பதிப்பாளர் உரை...



அருள்மிகு மணிவாசகப் பெருமான்மீது அன்புகொண்ட அன்பர்களால் நிறையப் பெற்றுள்ள எமது திருஆதிரை திருமுறை மன்றம் திருவாதிரைதோறும் திருவாசக முற்றோதலை நடத்தி வருகின்றது. அதனை ஒரு தவமாகப் போற்றி வருகிறது. அதன்சார்பில் மணிவாசகப் பெருமான் அருளுபதேசம் பெற்ற திருப்பெருந்துறையின் திருப்பணிகள் நிறைவு பெற்று குடமுழுக்கு விழா நடைபெறும் வேளையில் ஒரு நூலை வெளியிட வேண்டுமென்று விரும்பினோம். அவ்வேளையில் எமது அன்பிற்கினிய தம்பி திரு. பூசை. ச. ஆட்சிலிங்கம் திருவாடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம் அவர்கள் திருப்பெருந்துறையின் பெருமைகளை விளக்கும் வகையில் நூல் எழுதி வெளியிடுமாறு பணித்துள்ளதைக் கூறினார்.

அந்த நூலையே எமது திருஆதிரை திருமுறை மன்றம் மூலமாக வெளியிட விரும்பினோம். துறைசையில் கொலு வீற்றிருந்து சைவசித்தாந்த சிவஞானபானுவாகச் செங்கோல் ஓச்சிவரும் குருமகாசந்நிதானம் அவர்கள் அதற்கு அனுமதி அளித்தார்கள். அவர்களுடைய அருளாணையைப் போற்றி வணங்கி இந்நூலை வெளியிடுவதில் பெருமை கொள்ளுகிறோம்.

இந்நூலுக்கு அனுமதி அளித்ததுடன், தமது திருக்கரத்தால் உவந்துவெளியிட்டருளிய சீர்வளர் சீர் குருமகாசந்நிதானம் அவர்களுடைய திருவடிகளைப் போற்றித் தலை வணங்கி நன்றி செலுத்துகிறோம். இந்நூலை சிறப்புடன் எழுதித்தந்த எனது தம்பிக்கு எனது ஆசிகள். எமது மன்றத்தின் அன்பர்களுக்கும் இப்பணிக்குத் துணை நின்றவர்களுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

B1, பாலகணேஷ் அப்பாட்மெண்டஸ்,
2, ஸ்டேஷன் ரோடு
மேற்கு மாம்பலம்,
சென்னை – 600 033.

இவ்வண்
சிவப்பணியியல்
S. நாகபூஷணம் - சுதர்சன்
நிறுவனர் & செயலாளர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



சிவமகா புராணம் கூறும் ஷட்விதார்தமும் திருப்பெருந்துறையும்

சிவமகாபுராணத்தில் ஷட்விதார்த்தம் என்ற தலைப்பில் ஆறு பொருட்கள் கூறப்பட்டுள்ளன. இவை மந்திரம், யந்திரம், தேவதை, பிரபஞ்சம், குரு, சீடன் என்பனவாகும். இவற்றை அறிவதே முத்தி இன்பம். இந்த ஆறுவடிவிலும் இறைவன் ஆவுடையார் கோயிலில் வீற்றிருக்கிறான். ஆத்ம நாதர் மந்திர வடிவமாக இருக்கிறார். மந்திரங்களின் மூலவேரான "ஓம்" என்ற பிரணவ வடிவினராக விளங்குகிறார். இத்தலத்தில் கூறப்படும் மந்திரராஜம் என்ற துதியில் முதல் இருபது நாமங்களில் அவருடைய பிரணவ ரூபம் சிறப்பிக்கப்பட்டுள்ளது. முச் சதுரம் மூன்று மலர் வட்டங்களுடன் 43 கோணங்களைக் கொண்ட யந்திரம் அம்பிகை சந்நிதியில் அமைந்துள்ளது. இங்கு மந்திரம், யந்திரம் ஆகியவற்றின் தேவதைகளாக தட்சிணாமூர்த்தி விளங்குகிறார். பிரபஞ்ச தத்துவமான ஆறு அத்துவாக்களும் இங்கு விதான சிற்பங்களாகவும், தீபங்களாகவும் உள்ளன. குருபிரானாகச் சிவபெருமான் குருந்த மரத்தடியில் வீற்றிருக்கிறார். சீடர்களில் சிரோன்மணியான மாணிக்கவாசகர் உள்ளார். இந்த ஆறுவித பொருள்களையும் ஆன்ம ஞானிகளுக்கு உணர்த்தும் மூர்த்தியாக முருகப்பெருமான் விளங்குகிறார். இத்தகைய ஆறுபொருள்களையும் விளக்கி நிற்கும் தலம் வேறெதுவுமில்லை.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நன்றி மலர்கள்

இறைவன் மண்மீது கனிந்துவந்து மாணிக்கவா சகரை ஆட்கொண்ட அற்புதத்தலம் சீரார் பெருந்துறை யாகும். அதன் பெருமைகளை விளக்கும் இந்நூல் வெளி வரும் நல்லவேளையில் இந்நூலுக்குத் துணைநின்ற அனைவரையும் போற்றிப் பணிந்து வணங்குகிறேன்.

எமது கலைக்கூடம் மணிவாசகப் பெருமான் அடிச் சுவட்டில் நின்று ஆண்டுதோறும் திருவாசக முற்றோ தலை நடத்தி வருகின்றது. ஒரு முற்றோதலின்போது மணிவாசகர் தொடர்புடைய அனைத்து செய்திகளையும் தொகுத்து "மணிவாசக மஞ்சரி" என்ற நூல் வெளியிட முனைந்தேன். அவ்வேளையில் அது கைகூடவில்லை. சிறிய அளவில் தொகுத்து மணிவாசகர் வரலாற்றை மட்டும் வெளியிட்டு நிறைவு பெற்றுக்கொண்டேன். ஆனாலும் அம்முயற்சியை கை விடவில்லை தொடர்ந்து செய்திகளைச் சேகரித்துத் தொகுத்து வந்தேன்.

இந்நிலையில் திருப்பெருந்துறையின் புராண வரலாறு களையும், கோயில் சிற்பச் சிறப்புகளையும் விளக்கி "தென்னன் திருப்பெருந்துறை" என்ற நூலை எழுதி னேன். அதைக்கண்ணுற்ற குருமகா சந்நிதானம் அவர்கள் குடமுழுக்கு விழாமலராக வெளியிட அருளாசி வழங்கி அருள்புரிந்தனர். குருமகாசந்நிதானம் அவர்களின் பொன்னார் திருவடிகளைப் போற்றி வணங் குகிறேன். இவ்வேளையில் எனது பணிகளுக்கு நல்லாதரவு வழங்கிவரும் குருஜி திருப்பணிச்செல்பர் சிவஸ்ரீ குருஜி ஆர். துரைராஜன் (எ) பத்மநாபன் அவர்களை போற்றி மகிழ்கிறேன்.

இந்நூலை எனது அன்பிற்கினிய சகோதரி, திருமதி நாகபூஷணம்-சுதர்சன் அவர்கள் தமது திருஆதிரை திரு முறை மன்றத்தின் மூலம் பதிப்பித்து வெளியிட முன் வந்தனர். அவர்களுக்கு எனது நன்றி உரித்தாகுக.

இந்நூலுக்கு வேண்டிய விவரங்களைத் திரட்ட முனைந்தபோது முன்வந்து செய்திகள் பலவற்றை அளித் தவர் எனது வணக்கத்திற்குரிய அன்பர் திருவாசக மாமணி திருவையாறு வே. ரமணன் அவர்கள். மேலும் திருப்பெருந்துறை முன்னூற்றுவரில் ஒருவரான பிரம்ம ஸ்ரீ பாலசுப்பிரமணிய நம்பியார் அவர்களிடம் ஆற்றுப் படுத்தினார்.

திருப்பெருந்துறையில் பிரம்மஸ்ரீ நம்பியார் அவர் களைச் சந்தித்தேன். அவர் அனேக விஷயங்களைத் தெரிவித்தார். அத்துடன் ஒவ்வொரு சிற்பத்தையும் பற்றி விளக்கிக் கூறினார்கள். அங்கு திருமடத்தில் திருப் பணித் தொடர்பாளராகப் பணியாற்றிவரும் திரு சுப்பையாப்பிள்ளை அவர்கள் பலவாறு உதவினார்கள்.

ஆவுடையார் கோயிலுக்கு விவரம் திரட்டச் சென்ற போது ஸ்பீகல் பிரிண்டர்ஸ் திருமிகு பாலசுப்பிரமணியம் (குமார்) அவர்கள் உடன்வந்து உதவினார்கள். அவர் நமது பணிகள் அனைத்திலும் துணை நிற்பவர். அவரு டைய தந்தையார் கற்பகம் கார்டன்ஸ், பிரம்மஸ்ரீ ஜி. நடராஜன் அவர்கள் படிகளைத் திருத்துவதுடன் மேலான ஆலோசனைகளை வழங்கி நமது எழுத்துக்களைச் செம்மைப்படுத்தி வருகின்றார். இவர்களுக்குப் பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

எனது பணிகள் அனைத்திற்கும் துணை நின்று வரும் எனது அருமைத் தங்கை திருமதி. அனந்தலட்சுமி திரு. வீரராகவன் தம்பதியர், எனது மனைவி திருமதி. வசந்தா திருமிகு. எம்.வி. ஜெய்சங்கர் (சிவசுந்தரி அறக்கட்டளை) ஆகியோருக்கு எமது நன்றி உரித்தாகுக.

இந்நூல் அச்சுப்பணியில் உதவிய ஸ்ரீனிவாசா கிராபிக்ஸ் மின்னச்சக உரிமையாளர்கள் திரு. T. செந்தில், திரு. M. பாலாஜி, தட்டச்சர் திரு ஜெ. ரமேஷ்குமார், நிழற்படப் பிரதியாளர் சத்யாபிராசஸ் திரு. இராதா கிருஷ்ணன் ஸ்ரீ மறுதோன்றி அச்சகத்தினர் திரு. செல்வராஜ், திரு. சுந்தரமூர்த்தி ஆகியயாவருக்கும் எமது நன்றி உரித்தாக.

அன்பர்கள் யாவருக்கும் ஓங்கார ஒண்சுடராக விளங்கும் ஆத்மநாதரும், சிவயோக நாயகியும் சகல செல்வ யோகமிக்கப் பெருவாழ்வை அளித்து அருள் பாலிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

நல்லாதரவு அளித்து அருள்பாலித்துவரும் குருபிரான் திருக்கயிலாயப் பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம் அவர்களின் பொன்னார் திருவடி களை மீண்டும் பணிந்து நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வாழி நலம் சூழ!!

இங்ஙனம்
சிவப் பணியில் மீளா அடிமை

பூசை.ச. ஆட்சிலிங்கம்

பூசை.ச. அருணவசந்தன்
(எ) ஆட்சிலிங்கம்

சிவசுந்தரி கலைக்கூடம், 29, பீமண்ண முதலி தோட்டத் தெரு, ஆழ்வார்பேட்டை, சென்னை–18.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இருப்பிடம்

இலக்கியங்களில் திருப்பெருந்துறை என்று போற்றப்படும் இத்தலம் கோயிலின் பெருமையால் இந்நாளில் "ஆவுடையார் கோயில்" என வழங்குகிறது. மயிலாடுதுறை (திருவாரூர் வழியாக) காரைக்குடி செல்லும் இருப்புப் பாதையில் உள்ள அறந்தாங்கியிலிருந்து 13 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. புதுக்கோட்டை, அறந்தாங்கி, மீமிசல் முதலிய ஊர்களிலிருந்து பேருந்து வசதிகள் உள்ளன.

நூலின் பெயர்

"தென்னன்" என்ற சொல் தென்முகமாக அமர்ந்திருப்பவரும், வலிமை உள்ளவரும், ஆற்றல் நிறைந்தவருமான சிவபெருமானைக் குறிக்கிறது. தென்னன் என்பது பாண்டியனுக்கு உரியதாக இருந்தாலும் திருவாசகத்தில் சிவபெருமானுக்கே உரியதாகத் திரும்பத் திரும்ப குறிக்கப்பட்டுள்ளது. வடமொழியிலும் சிவபெருமான் தட்சணாமூர்த்தியாகப் போற்றப்படுகிறார். அச்சொல்லுக்கும் மேலே சொல்லப்பட்டிருப்பதே பொருளாகும். இங்கே அவன் தட்சணாமூர்த்தியாகப் விளங்கி அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றான்.

மணிவாசகர் சிவபெருமானை (தென்னா என்னாமுன்னம் தீசேர் மெழுகாப்பாய், செந்தாப் பொழில் புடைசூழ் தென்னன் பெருந்துறையான் மந்தார மாலையே பாடுதுங்காண் அம்மானாய், தென்பாலைத் திருப்பெருந்துறை உறையும் சிவபெருமான் என்று பல இடங்களில் திருவாசகத்தில் குறிப்பிடுகிறார். இப்படி அவர் சிவபெருமானைத் "தென்னன் பெருந்துறையான்" என்று பலமுறை கூறிப் போற்றுவதால் இந்நூலுக்குத் "தென்னன் திருபெருந்துறை" என்ற பெயர் சூட்டியுள்ளோம்.

பெருந்துறை

பெருந்துறை என்ற பெயர்களில் தென்னக மெங்கும் பல ஊர்கள் உள்ளன. சோழநாட்டில் ஒன்றும், கொங்குநாட்டில் ஒன்றும் இப்போதும் சிறப்புடன் விளங்கிவருகின்றன. சோழநாட்டுப் பெருந்துறை பேணு பெருந்துறை என்று தேவாரத்தில் குறிக்கப்படுகிறது. கொங்குநாட்டுப் பெருந்துறை அப்பெயரிலேயே உள்ளது. பாண்டிய நாட்டுப் பெருந்துறையான தென்பெருந்துறை சிறப்புக் கருதி திருப்பெருந்துறை என்றழைக்கப்படுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

திருச்சிற்றம்பலம்

: ஓம் :

உலகம் தோன்றி நடைபெற்று ஒடுங்குவதற்கு உரிய இடமாக இருப்பது தட்சிணாமூர்த்தியின் திருவடிகளாகும். தட்சிணா என்பதற்கு ஞானம் என்பது பொருள். தட்சிணாமூர்த்தி உயிர்களின் அறியாமையை நீக்கி மோட்சத்தை அடையச் செய்வதால் ஆன்ம நாதர் எனப்படுகிறார். ஆத்மவித்யா தத்துவத்தை (ஆன்மாக்கள் உய்ய வேண்டிய அறிவுவை) உபதேசித்து சம்சார பந்தங்களிலிருந்து விடுவிப்பவரும், அழிவற்றவரும் ஆன அவர் ஓங்கார வடிவில் கமலாசனத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்.

– சிவ மகாபுராணம்



ஓங்கார ஆலயம்

பேரண்டப் பெருவெளியில் அண்ட சராசரங்களும் அதில் உயிர்த்தொகுதிகளும் தோன்றி நிலைபெற்று ஒடுங்குவதற்குக் காரணமாக இருப்பது "ஓம்" என்ற மந்திர ஒலியாகும். அதை அனைத்து சமயங்களும் சிறப்புடன் போற்றுகின்றன. அதனை பிரணவம் என்பர். அதுவே இறைவனின் திருவடிவமாகும். அவ்வடிவில் மெல்லிய தங்கநிறமான ஜோதிரூபமாக அவர் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார். இதுவே உலகிலுள்ள அனைத்து மந்திரங்களுக்கும் மூலமாகும். எனவே மூலமனு என்று கூறுகின்றனர்.

சிவபெருமான் ஆதியில் பிரம்மதேவனுக்கு ஓங்கார ஒளி வடிவில் காட்சியளித்தார். பிறகு திருவுருவம் தாங்கி வந்து அருள்பாலித்தார். அவனுக்கு சகல வேத, ஆகமங்களையும் உபதேசித்துப் படைப்புத் தொழிலை நடத்தும் வல்லமையைத் தந்தார். அந்த ஒப்பற்ற தலமே திருப்பெருந்துறை ஆகும்.

சிவானந்தம் என்ற பேராற்றில் இறங்கி உயிர்கள் ஆடி இன்பம் பெறும் தலமாக அமைந்திருப்பதால் பெருந்துறை எனப்பட்டது. இதன் பெருமைகளை நோக்கிச் "சீரார் பெருந்துறை", "திருவார் பெருந்துறை" எனப்பலவாறு அழைக்கப்படுகிறது. இத்தலத்தில்தான் ஓர் உருவம் ஒரு நாமம் இல்லாது திருஉருவம் கடந்து நிற்கும் இறைவனுக்கு அவனுடைய அருவநிலையைப் போற்றும் வகையில் அற்புதமான ஆலயம் அமைந்து உள்ளது. அதில் ஓங்கார பீடத்தில் பெருமான் சூட்சமச் சுடரொளியாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தலபுராணம் அவனை ஓங்கார வடிவினன் என்றும்; மந்திரராஜம் ஓங்கார நவமணி மாளிகையில் கொலு விற்றிருக்கும் மன்னன் என்றும்; திருவாசகம், அருவாய் அந்தணனாய் ஆண்டு கொண்ட தேவன் என்றும் அரு வாய் உருவமும் ஆயபிரான் என்றும் போற்றுகின்றன. அவன் அனைத்து ஆன்மாக்களிலும் விற்றிருந்து பிரகா சிப்பதால் ஆத்மநாதர் என்றழைக்கப்படுகிறான்.

அவன் தேவைப்படும்போது வெளிப்பட்டு உயிர் களுக்கு குருவாக இருந்து அருள் உபதேசம் செய்கின் றான். பிரமன், திருமால், உருத்திரர் முதலான எண்ணிலிதேவர்களும் மக்களும் அவரிடம் இங்கு உபதேசம் பெற்று ஞானத்தில் நிலைபெற்று உயர் நிலையை அடைந்துள்ளனர்.

இப்படி ஞானம் பெற்றவர்களில் மேம்பட்டவராக மணிவாசகர் விளங்குகின்றார். பாண்டிய மன்னனிடம் அமைச்சராக இருந்த மணிவாசகப்பெருமான் மன்னனின் ஆணைப்படி குதிரைகள் வாங்க இவ்வழியாகச் சென்றார். அவ்வேளையில் இறைவன் அவரை ஆட்கொண்டு அருள்பாலித்த தலம் இதுவே.

அவர் இத்தலத்தில் இருந்த பழைய ஆலயத்தைப் புதுப்பித்து அனேக திருப்பணிகளைச் செய்ததுடன் பூஜை முறைகளையும் வகுத்தார். அவர் செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேனுக்கு (திருவா, குலாப்பத்து 10) என்று கூறுவது காண்க. இங்கு விற்றிருந்து ஞான நிலையில் திளைத்து அவ்வப்போது திருவாசகம் என்ற நூலைப் பாடி அருளினார். அவருக்காகச் சிவபெருமான் மண்மேல் வந்து பல திருவிளையாடல்களைப் புரிந்துள்ளார்.

அவருக்குப் பிறகு இத்தலத்தின் மேன்மையை உணர்ந்த மாமன்னர்களும், பெரும் கனதனவான்களும் இங்கு பலவிதமான திருப்பணிகளைச் செய்தனர். அவை உன்னத கலைசெல்வங்களாகத் திகழ்ந்து உலக அரங்கில் பாரத தேசத்தின் பெருமையை நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றன. இங்கு படைக்கப்பட்டிருக்கும் கருங்கல் சிற்பங்களும், ஓவியங்களும். நமது கருத்துக்கும் கற்பனைக்கும் எட்டாத அற்புதப் படைப்புகளாகும். அவை உயிர் ஓவியங்கள். கல்லில் படைக்கப்பட்ட கவிதைகள், சொல்லோவியங்களால் விவரிக்க முடியாதவை. கண்டு களித்து மகிழ வேண்டியவை.

இந்த தலத்தின் ஒப்பற்ற பெருமைகளையும், தலபுராணச் செய்திகளையும், சிற்ப அற்புதங்களையும் இயன்றவரையில் விளக்க இந்நூலில் முயன்றிருக் கின்றோம்.

முதலில் திருக்கோயிலின் அமைப்பு விளக்கப்பட்டு உள்ளது. தொடர்ந்து இதில் இடம் பெற்றிருக்கும் ஒவ்வொரு சந்நிதி பற்றியும் விளக்கப்பட்டுள்ளன. அதன் பிறகு தலத்தின் திருப்பெயர்கள், தீர்த்தங்களின் சிறப்புகள் மூர்த்திகளின் சிறப்புகள், மணிவாசகர் வரலாறு ஆகியவை இடம் பெற்றுள்ளன.

இவற்றை அறிந்து மகிழத் தங்களை அன்புடன் அழைக்கிறோம்.



ஸ்ரீ குருந்தமூலம், நடராஜர், யோகநாயகி, ஆன்மநாயகர், ஸ்ரீ விமானங்கள்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



ஆவுடையார் கோயில் எனவழங்கும் திருப்பெருந்துறை திருக்கோயில் அமைப்பு

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி வட்டத்தில் ஆவுடையார் கோயில் உள்ளது. ஊரின் மையத்தில் தெற்கு நோக்கியவாறு திருக்கோயில் அமைந்து உள்ளது. கோயிலைச் சுற்றி நான்குபுறம் மடவிளாகமும், அதைச் சுற்றி தேரோடும் வீதிகளும் அமைந்துள்ளன.

திருக்கோயிலின் முன்புறம் இருப்பது தெற்கு ரதவீதி ஆகும். அதனை யொட்டி கோயிலுக்கு முன்புறம் பெரிய மண்டபத்தைக் காண்கிறோம். இது ரகுநாதபூபாலன் மண்டபமென்றும் ஆயிரக்கால் மண்டபமென்றும் அழைக் கப்படுகிறது. இதன் முகப்புத் தூண்களில் ஊர்த்துவ தாண்டவர், காளி, வில்லேந்திய முருகன், அரியர்த்தர் (சங்கர நாராயணர்), ரிஷபாந்திகர் ஆகிய பெரிய சிற்பங்கள் உள்ளன. இவர்களைக் கண்டு மகிழ்ந்த பின் மண்டபத்திற்குள் செல்லலாம். இங்கு இரண்டு பெரிய நெடிய வீரபத்திரர்கள் தூண்சிற்பங்களாக உள்ளனர். இவர்களுக்கு நேர்ந்து கொண்டு வழிபாடுகள் செய்கின் றனர். இம் மண்டபத்திற்கு முன்பாக விநாயகர் சந்நிதி கிழக்கு நோக்கியவாறு உள்ளது. இவரை வணங்கியே உள்ளே செல்ல வேண்டும்.

இந்த மண்டபத்தின் நடவாணத்தின் இருபுறமும் அமைந்த தூண்களில் நான்கு குதிரை வீரர்களின் சிற்பங்கள் உள்ளன. இந்த மண்டபத்தோடு இணைந்த வாறு மேற்கில் கிழக்கு நோக்கியவாறு அமைந்த தனிச்சந்நிதியில் மணிவாசகர் எழுந்தருளியுள்ளார். இவரை நந்தீசுவர மணிவாசகர் என்று அழைக்கின்றனர். இந்த மண்டபம் முழுவதும் மாபெரும் கலைக் கூடமாகத் திகழ்கிறது. உலகப்புகழ் பெற்ற கொடுங்கைகள் இதில் தான் இடம்பெற்றுள்ளன.

இதைக் கடந்ததும் ஏழுநிலைக் கோபுரம் கொண்ட திருவாசலைக் காண்கிறோம். இதன் வழியாக உட் சென்றதும் மூன்றாம் பிரகாரமாகிய பெரிய பிரகாரத் தை அடைகிறோம். இதில் கருவறைக்கு நேராக இடம் பெற்றுள்ள பெரிய மண்டபம் பஞ்சாட்சர மண்டபம் என்ற அழைக்கப்படுகிறது.

இதிலிலுள்ள தூண்களில் குதிரைச் சாமி, மணி வாசகர், அரிமர்த்தனபாண்டியன், குறுநிலமன்னன் ஆகியோர் பெரிய சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளனர். குதிரைசாமிக்கும் மணிவாசகருக்கும் தினப்பூஜைகள் நடைபெறுகின்றன.

இந்த மண்டபத்தின் விதானத்தில் ஆகமங்கள் கூறும் அத்துவாக்களைக் குறிக்கும் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. நாயன்மார்களின் வரலாற்று ஓவியங்களும் தலவரலாற்று ஓவியங்களும் அணிசெய்கின்றன. தல புராணக் காட்சிகளில் ஒன்றான சிவபெருமான் நிலத்தை வெட்டி கீழ்நீர்காட்டும் ஓவியம் சிறப்புடன் திகழ்கிறது.

இந்த சபையின் மேற்கில் அமைந்த பெரிய சந்நிதியில் மாணிக்கவாசகர் அமைந்துள்ளார். இவரை சிவானந்த மாணிக்கவாசகர் என்பர். இவருடைய சந்நிதி மாபெரும் ஓவியக்கலைக் கூடமாகத் திகழ்கிறது. இதன் முகப்பில் உள்ள தூண்களில் நவக்கிரகங்கள், சிவராத்திரி கதை, மங்களவிநாயகர் ஆகிய சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றை மக்கள் வழிபடுகின்றனர்.

இனி வலமாக வரும்போது முதலில் தலவிநாயகரான வெயிலுவந்த விநாயகரைக் கண்டு தொழுகிறோம். மேற்குப்பிராகாரத்தில் பெரிய திருக்குளமாக அக்னி தீர்த்தம் அமைந்துள்ளது. இதுவே இத்தலத்தின் முதன் மைத் தீர்த்தமாகும். இதனைக் கடந்து தியாகராஜ மண்ட பத்தை அடைகிறோம். மாபெரும் மண்டபமாகிய இதில் துறவியானபின் இறைவன் ஆணைப்படி மந்திரி கோலம் கொண்ட மணிவாசகர், முத்துவிநாயகர் ஆகியோரைக் காண்கிறோம். இங்குள்ள இரண்டு பெரிய குதிரைச் சிற்பங்கள் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன.

இம்மண்டபத்தின் மேற்கில், மதில் சுவரில், ஒருமாடத் தில் மகாலிங்க சுவாமி எனப்படும் முனீசுவரர் எழுந்தரு ளியுள்ளார். இவரை ஆகாசமூர்த்தி எனவும் அழைப்பர். இவர் பலகுடும்பங்களுக்குக் குலதெய்வமாக விளங்கு கிறார்.

தியாகராஜ மண்டபத்தின் வடக்கில் அதையொட்டிய

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வாறு உயர்ந்த மேடையில் ஊஞ்சல் மண்டபம் அமைந்து உள்ளது. இதிலுள்ள தூண்களில் மன்மதன், ரதி, ரம்பை ஆகியோர் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

இந்த மண்டபத்தைக் கடந்தும், வடமேற்கு முனையில் செழித்து வளர்ந்துள்ள குருந்த மரத்தைக் காணலாம். அதன் கீழ் விநாயகர் நாகப்பிணையல்கள் உள்ளன. இவரை வணங்கி அடுத்துள்ள மண்டபத்தைக் காண்கி றோம். அதில் பெரிய பாறை மீது குருவடிவில் சிவ பெருமான் அமர்ந்திருக்கிறார். எதிரே கைகட்டி நின்று மணிவாசகர் உபதேசம் கேட்கிறார். இது பெரிய அளவி லான தலஐதீகக்காட்சியாகும்.

இவர்களை வணங்கி வடகிழக்கு முனையில் அமைந் துள்ள விநாயகர் சந்நிதியை அடையலாம். இவரை தரிசித்த பின் தீர்த்தத்தொட்டியை தரிசிக்கலாம். தென் கிழக்கு முனையில் அலுவலகம் திட்டிவாசல், வெள்ளித் தேர் மண்டபம் ஆகியன உள்ளன.

மீண்டும் முன்சொன்ன பஞ்சாட்சர சபையை அடைந்து அதன் வழியாக இரண்டாவது திருவாயிலைக் கடந்து செல்லலாம். இவ்வாயில் மீது ஐந்து நிலை கோபுரம் உள்ளது. இந்த வாசல் இடைக்கட்டு என்று அழைக்கப் படுகிறது.

இதைக் கடந்தால் இரண்டாம் பிராகாரத்தை அடையலாம். இங்கு கருவறைக்கு நேராக தில்லை சபை என்னும் மண்டபத்தைக் காண்கிறோம். இதிலுள்ள முகப்புத்தூண்களில் குறவன், குறத்தி, பள்ளன் அவன் மனைவி ஆகியோர் சிலைகள் உள்ளன. நடுத்தூணில் மணிவாசகரின் துறவி, மந்திரி ஆகிய இரண்டு கோலங்களும், பதஞ்சலி, வியாக்ரபாதர் வடிவங்களும் இடம் பெற்றுள்ளன.

இனி இந்தப் பிராகாரத்தை வலம் வரும்போது தென்மேற்கு முனையில் அன்னபூரணியுடன், விநாயகர், வடமேற்கு முனையில் அமர்ந்த விநாயகர், வடகிழக்கு முனையில் நடனகணபதி, தென்கிழக்கு முனையில் யோக விநாயகர் என்று மூலைக்கொரு கணபதியாரைக் காண்கிறோம். தென் கிழக்கு முனையில் மடைப்பள்ளி உள்ளது. இனி தில்லை சபையில் அமைந்துள்ள மூன்றாவது வாயிலின் வழியாக உள்ளே செல்லலாம். இவ்வாயிலின் இருபுறமும் விநாயகர் உள்ளனர். இந்த வாயிலின் மீது மூன்று நிலை கோபுரம் அமைந்து உள்ளது. இதையடுத்து பிராகாரத்தில் நேர் எதிரில் வாயில் இருந்தாலும் அதன் மூலம் செல்லும் வழக்க மில்லை. (கிழக்கிலும் மேற்கிலும் அமைந்துள்ள வாயில் களையே பயன்படுத்துகின்றனர்.)

இனி உட்பிரகாரத்தை வலம் வருகிறோம். தென் மேற்கு முனையில் வடக்கு நோக்கியவாறு அருள் மூலஸ் தானம் எனப்படும் மாணிக்கவாசகர் சந்நிதி உள்ளது. இதில் உலாத் திருமேனியாக மணிவாசகர் எழுந்தருளி யுள்ளார். இந்த சந்நிதிக்கு அருகில் சொக்க விநாயகர் என்னும் தலவிநாயகர் சந்நிதி உள்ளது.

தொடர்ந்து மாணிக்கவாசகருக்கு நேர் எதிரில் அமைந்துள்ள அம்பிகை யோகநாயகியின் சந்நிதியைக் காண்கிறோம். இதில் அம்பிகை திருவடிகளை மட்டுமே காட்டி அருவுருவமாக விளங்குகிறாள். சந்நிதிக்கு முன்பாக அமைந்துள்ள ஜன்னல் மூலமே அவளைத் தரிசிக்க முடியும். ஜன்னலின் இருபுறமும் விநாயகர், வீரபத்திரர், பத்ரகாளி முருகன் ஆகியோர் புடைப்புச் சிற்பமாக அமைந்துள்ளனர். ஜன்னலின் இருபுறமும் உள்ள இரண்டு பெரிய மாடங்களில் உலோகத்தலான துவாரபாலகியர் உள்ளனர்.

இச்சந்நிதியில் அபிஷேக தீர்த்தம் வெளியேறி விழும் அபிஷேக தீர்த்தத் தொட்டி கலைச் சிறப்புடன் அமைந்து உள்ளது. வலம் வந்து அம்பிகை சந்நிதியை வணங் கியபின் கருவறைக்கு நேர்பின்புறமுள்ள குருந்த மூலத் தைக் காண்கிறோம். இதுவே ஆதிமூலஸ்தான மாகும். இதில் குருந்த மரத்தின் கல் திருமேனி அமைந்துள்ளது. அம் மரத்தின் அடியில் மணிவாசகர் திருவடி தீட்சை யுடன் உபதேசம் பெறுதலும் உடன் ரௌட்சாயன முனிவர் திருமேனியும் அமைக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து ஆன்ம கூபம் என்னும் தீர்த்தக் கிணறு உள்ளது. அதன் அருகில் திருவாசகக் கோயிலும் அடுத்து நடராஜர் சந்நிதியும் உள்ளன. இதில் நடராசர் சிவகாமசுந்தரியுடன் கல்திருமேனியாக எழுந்தருளியு உள்ளார். இவரை வணங்கி தென்கிழக்கில் அமைந் துள்ள சந்நிதியில் விளங்கும் உற்சவ முருகனைக் கண்டு தொழலாம்.

அடுத்து தெற்கு வாயில் வழியாக தேவசபையை அடைகிறோம். தேவசபை தேவர்கள் கூடி வணங்கு மிடமாகும். இதில் நித்தியாக்கினியும் சிறப்பு வழிபாடு களும் செய்யப்படுகின்றன.

இந்த மண்டபத்தினை அடுத்து உட்செல்லும் வாயிலில் வெள்ளிக்கதவு இடப்பட்டுள்ளது. இதனைத் தாண்டி உள்ளே இருப்பது சத்சபையாகும். இதன் நடுவில் பெரிய படைகல் உள்ளது. இதில் உணவுப் பொருட்களைப் பரப்பி சுவாமிக்கு நிவேதனம் செய்கின்றனர்.

இதை அடுத்துள்ள இடைநாழியே சிற்சபையாகும். சிற்சபையில் நின்றுகொண்டு தீபாராதனை செய்யப் படுகிறது. இதனை அடுத்திருக்கும் கருவறை ஆனந்த சபை என்றழைக்கப்படுகிறது. இதனுள் பிரணவபீடம் அமைந்துள்ளது. சுவரில் நட்சத்திரமாலை மூவண்ண வண்ணச் சுடர் விளக்குகள் உள்ளன. முன்புறம் பஞ்ச கலா தீபம் உள்ளது. பீடத்தின் மீது லிங்கம் போன்ற குவளை வைத்துள்ளனர். இந்த பீடத்தில் ஓங்கார ரூபமாக கண்ணுக்குப் புலப்படாத ஆத்மஜோதியாகச் சிவபெருமான் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆவுடையார் கோயிலில் கணபதி வழிபாடு

அனைத்து பூஜைகளின் தொடக்கத்திலும் மக்கள் விநாயகரை வழிபடுகின்றனர். அவர் வாழ்வில் உண்டாகும் தடைகளை நீக்குவதுடன் மேற்கொள்ளும் செயல்கள் சிறப்பாக நடைபெற அருள்பாலிக்கிறார்.

அருவ வழிபாட்டின் தலைமையகமாக ஆவுடையார் கோயில் இருந்தாலும் அங்கேயும் விநாயகர் வழிபாடு தனிச்சிறப்புடன் விளங்குகிறது.

திருக்கோயிலின் முன்புறமுள்ள நெல்லியடி தீர்த்தக் குளத்தின் (தேவ தீர்த்தம்) கரையில் கிழக்குநோக்கியவாறு வல்லபை கணபதி வீற்றிருக்கின்றார். பதினோரு கரங்கள் கொண்டுள்ள அவர் மடிமீது வல்லபை அமர்ந்திருக்கிறாள்.

மூன்றாம் பிராகாரமான வெளிப்பிரகாரத்தில் தென்மேற்கு முனையில் வெயிலு வந்த விநாயகரும், தியாகராஜ மண்டபத்தில் முத்து விநாயகரும், வடமேற்கு முனையில் குருந்தடி விநாயகரும், வடகிழக்கு முனையில் யோக விநாயகரும் அமைத்துள்ளனர். (இவருடன் இரண்டு விநாயகர்கள் உள்ளனர்)

இவர்களில் முதன்மை விநாயகர் வெயிலுவந்த விநாயகர் ஆவார். இவரைத் தலபுராணம் "வெயிலு வந்த மழக்களிறு" என்றுபோற்றுகிறது. இவர் விமானத்துடன் கூடிய நான்கு கால் மண்டபத்தில் எழுந்தருளியுள்ளார்.

முத்துவிநாயகர் சந்நிதி தியாகராஜர் மண்டபத்தில் மேற்கு நோக்கியவாறு சிறிய விமானத்துடன் அமைந்துள்ளது. தென்பாண்டி நாட்டில் முத்துக்களை இறைவன் முன்னே கொட்டி அளந்து கொடுப்பது வழக்கம். அந்த இறையுருவங்களை முத்துக்கந்தர், முத்து லிங்கம், முத்து விநாயகர், முத்துக்கருப்பர் எனப் பலவாறு அழைக்கின்றனர். இது முத்துக்களை அளந்த சந்நிதியாக இருப்பதால் இதிலுள்ள கணபதி முத்து கணபதி என்றழைக்கப்படுகிறார்.

இரண்டாம் பிரகாரத்தில் நான்கு முனைகளிலும் நான்கு விநாயகர்கள் அமர்ந்துள்ளனர். தென்மேற்கு முனையில் வடக்கு நோக்கியவாறு அன்னபூரணியுடன் விநாயகர் உள்ளார். இவரை அன்னபூரணி விநாயகர் என்றழைக்கின்றனர். இவரை வணங்கி வடமேற்கு முனையில் தெற்கு நோக்கி அமைந்துள்ள பெரிய விநாயகரை வணங்குகிறோம். இவர் கோபாலக் கட்டளை விநாயகர் என்றழைக்கப்படுகிறார். வடகிழக்கு முனையில் தெற்கு நோக்கியவாறு நடனகணபதியும் தென்கிழக்கு முனையில் அழகிய விநாயகரும் உள்ளனர். இங்குள்ள வாயிலின் இருபுறமும் இரண்டு விநாயகர்கள் உள்ளனர்.

ஸ்ரீ வல்லபை விநாயகர்

முதல் பிராகாரத்தில் அருள்மூலஸ்தானமெனப்படும். உற்சவ மாணிக்கவாசகர் சந்நிதிக்கு அருகில் கிழக்கு நோக்கியவாறு சொக்க விநாயகர் அமர்ந்துள்ளார். இவரை அனைத்து சடங்குகளிலும் முதன்மையானவராகப் போற்றி வழிபடுகின்றனர். தலபுராணம் இவரைச் சம்சர்க்க விநாயகர் என்று போற்றுகிறது.

அம்பிகை சந்நிதி ஜன்னலையொட்டி அழகிய விநாயகர் உள்ளார். நம்பியார்கள் செய்யும் வழிபாட்டின் போது இவரிடம் அனுக்ஞை பெறுதல் முதலான சடங்குகளை நடத்துகின்றனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தெய்வச் செழுமலர்க் குருந்தம்

ஸ்ரீ குருந்தமூலம், திருப்பெருந்துறை

தமிழர் வாழ்வு மரங்களோடு தொடர்பு கொண்டுள்ளது. சில மரங்கள் தெய்வீகத் தன்மை பெற்றுள்ளன. அவற்றைத் தலமரங்கள் என்று போற்றுகின்றனர். தென்பாரதத்தில் ஒவ்வொரு தலத்திற்கும் ஒவ்வொருமரம் தலமரமாக இருந்து வருகிறது. அம்மரத்தின் பெயரால் அத்தலங்களுக்குப் பெயர் அமைகிறது. எடுத்துக்காட்டாக கதலிவனம் (திருக்கழுக்குன்றம்), பாரிஜா தவனம் (திருக்களர்), தில்லைவனம் (சிதம்பரம்) என்று தலங்கள் போற்றப்படுகின்றன. இவ்வகையில் திருப்பெருந்துறை குருந்தமரத்தின் பெயரால் குருந்தவனம் என்று அழைக்கப்படுகிறது.

திருப்பெருந்துறையில் சிவபெருமானே குருந்த மரமாக இருக்கிறான் என்று தலபுராணம் கூறுகின்றது. ஆதியில் பிரமதேவனுக்கு உபதேசம் செய்த பின் சிவபெருமான் இத்தலத்தில் ஒளிபொருந்திய குருந்த மரமாக நின்றான். புதியதாகத் தோன்றிப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் அந்த மரத்தைக் கண்டு பிரமன் அதிசயித்தான் அப்போது ஆகாயவாணி சிவபெருமானின் திருமேனியாக விளங்கும் இந்த குருந்த மரத்தைப் பூசித்து வருக என்று கூறினாள்.

இம்மரம் பலவிதமான நிறங்களில் ஒளிர்வது. இந்திர நீலம், கோமேதகம், சுவர்ணம் ஆகிய மூன்று வண்ணங் களில் ஒளிரும் மூன்று பெருங்கிளைகளைக் கொண்டது. வேதங்கள், ஆகமங்கள் சிறுகிளைகளாகவும், ஸ்மிருதிகள் நிழலாகவும், ஓங்காரமே பாதாளத்தையும் கடந்து செல்லும் வேராகவும் இருக்கிறது. தருமம் இலைகளாகவும் ஞானம் மலராகவும், யோகாம்பிகை மலரின் மணமாகவும் ஆன்ம நாதர் அதிலுள்ள தேனாகவும் இருக்கிறார். முக்தி என்ற கனிகள் பழுத்துள்ளன. ஞானிகள் என்னும் பறவைக் கூட்டங்கள் இக்கனிகளைப் புசித்து பிறவா நிலையை அடைகின்றன. இந்த மரம் ஆன்மநாதரின் திருவடிவமாகவே விளங்குகிறது.

இம்மரம் ஆதியில் பொன்னாகவும், பின்பு வெள்ளியாகவும், தொடர்ந்து செம்பாகவும் இருந்ததென்றும். கலிகாலத்தில் இயல்பான மரமாகி விட்டதென்றும் கூறப்படுகிறது.

பலவிதமாகப் புராணங்களில் சிவமாகவே எண்ணித் துதிக்கப்பட்ட குருந்த மரம் இப்போது நாம் காணுமாறு இல்லை அந்த பீடத்தில் கல்லால் புடைப்புச் சிற்பமாக மரத்தையும் அதன்கீழ் குருவடிவான சிவபெருமானையும் திருவடி தீட்சை பெற்றுக்கொள்ளும் சீடனாக மாணிக்க வாசகப் பெருமானை யும் அமைத்துள்ளனர். சுற்று மண்டபம் கட்டி மேலே செப்போடு வேய்ந்த விமானம் அமைத்து உள்ளனர்.

இவ்விடம் குருந்தடி எனப்படுகிறது. இங்கு அமைந்துள்ள வடிவம் இறைவன் ஆணைப்படி விசுவகர்மாவால் செய்யப் பட்டது என்பர்.

தினமும் இங்கு ஆறுகால பூஜைகளும், சிறப்பு வழிபாடு களும் செய்யப்படுகின்றன.

★ ஆனிமாதப்பெருந்திருவிழாவிலும், மார்கழி மாதப் பெருந்திருவிழாவிலும் மாணிக்கவாசகரை இங்கு எழுந் தருளிவைத்து உபதேசக்காட்சி நடத்துகின்றனர்.

★ குருந்த மரமும் அதன்அடியும் திருவாசகத்தில் அனேக இடங்களில் சிறப்பித்துக் கூறப்பட்டிருக்கின்றன.

★ இங்குள்ள மண்ணை உடலில் பூசிக்கொண்டால் உடல் உபாதைகளும், நோயும் நீங்கும். சகலசெல்வங்களும் உண்டாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆன்ம நாதர்

திருக்கோயிலின் இருதயப் பகுதியாக விளங்குவது கருவறை. இதுவே இறைவன் உறையுமிடமாகும் மற்ற ஆலயங்களில் அக்கோயிலுக்குரிய தெய்வங்களின் திருஉருவங்கள் நிலைப்படுத்தப்பட்டு வணங்கப்படுகின்றன.

இக்கோயிலில் இறைவன் பேரண்டப் பெருவெளியாக இருப்பதால் வடிவம் இல்லை. இறைவன் அருவமாகவே விளங்குகின்றான். அவனுடைய இருப்பிடத்தை உணர்த்தும் வகையில் ஒரு பீடம் மட்டுமே உள்ளது. இதுவே பிரணவ பீடமாகும். இதன்மீது குவளை ஒன்றை வைத்து வழிபடுகின்றனர்.

இந்தக் கருவறை "ஆனந்தசபை" என்று அழைக்கப்படுகிறது.

இந்தக் கருவறை உலகம் தோன்றி நிலைபெற்று ஒடுங்குவதற்கு ஆதாரமாக உள்ள பேரண்டப் பெருவெளியைக் குறிப்பதாகும். இதனைக் கடுவெளி சிதாகாசம் சோடசாந்தம் என்று பல பெயர்களால் குறிப்பர். இதன் குறியீடு நட்சத்திரங்கள் ஆகும்.

அண்டவெளியில் நட்சத்திரங்கள் கோடானுகோடி உள்ளன. அவை அனைத்தையும் காட்டமுடியாது என்பதால் நாம் போற்றிவரும் 27 நட்சத்திரங்களை இங்குத் தீபங்களாக அமைந்துள்ளனர்.

அகில அண்டங்களை படைத்துகாத்து அழித்து வழிநடத்துவோராக பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் ஆகிய மும்மூர்த்திகள் விளங்குகின்றனர். இவர்கள் சூரிய, சந்திர, அக்னி மண்டலங்களில் வீற்றிருக்கின்றனர் இந்த முச்சுடர் மண்டலங்களைக் குறிக்கும் வகையில் மூன்று விளக்குகள் அமைந்துள்ளன. இவை செஞ்சுடர், வெண்சுடர், பசுஞ் சுடர் என்ற வகையில் வெண்மை, சிவப்பு, பச்சை வண்ண கண்ணாடிக் கூடுகளில் வைக்கப்பட்டுள்ளன.

ஓங்கார பீடம், சக்தி பாதங்கள் உண்டான வரலாறு

ஆதியில் சிவபெருமான் குருந்த மரமாகவே பிரமனுக்குக் காட்சியளித்தான். அதையே அவன் வழிபட்டான். ஒரு சமயம் அவன் அன்பர்கள் அபிஷேகித்து அர்ச்சித்து மகிழக் குறியீடு ஒன்றும் இல்லையே என்று எண்ணினான். அவன் கருத்தை உணர்ந்த பெருமான் தான் அமர்ந்து உபதேசிக்கும் யோகபீடத்தையும், பதுமராகச் சோதி விரியும் அம்பிகையின் திருவடிகளையும் அளித்தான். பிரமன் யோக பீடத்தைக் குருந்த மரத்தின் தெற்கிலும், அம்பிகையின் பாதங்களை மேற்கிலுமாக அமைத்தான். அவை மூன்றையும் மக்கள் வழிபட்டுவந்தனர்.

பின்னாளில் புரூருவச் சக்ரவர்த்தி அங்கு ஆலயத்தை அமைத்து வழிபாடுகளை உண்டாக்கினான். பின்னாளில் மாணிக்கவாசகர் இங்குத் திருப்பணிகள் செய்தபோது சுவாமியின் அரூபத்திருமேனியை எல்லோராலும் தியானித்து வழிபடமுடியாது என்பதால் அங்குக் குவளையை அமைத்தார். தங்கத்தால் அமைந்த குவளைக்கு பிரபாவளியும் அமைக்கப்பட்டது. அம்பிகையின் பாதங்களுக்கு (பாதக்குறடுகள்) பீடமாகச் சுவர்ணமயமான ஸ்ரீ சக்கரம் அமைக்கப்பட்டது.

இச்சந்நிதியில் முதலில் ஒரு முறை தீபாராதனை செய்து ஒளிவடிவமாக விளங்கும் ஓங்காரரூப சிவபெருமானை எழுந்தருளச்செய்வர். பின்னர் மறுமுறை தீபாராதனையை வழக்கம் போல் செய்யப்படுகிறது.

இங்குள்ள மூர்த்திக்கு மந்திரராஜம் என்ற அருச்சனை செய்து வழிபடுகின்றனர். மந்திர ராஜத்தில் பெருமான் ஓங்கார வடிவமாக விளங்குவது முதல் இருபது நாமங்களால் துதிக்கப்படுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருப்பெருந்துறையில் சக்திவழிபாடு



திருப்பெருந்துறை யோகசக்தி பீடமாகும். இங்கு அம்பிகை தவயோக தேவியாக விளங்குகிறாள் புராணங்கள் சிவயோக நாயகி என்றழைக்கின்றன. தவசீலர்கள் யோக பாலா என்றழைக்கின்றனர். அவள் பதும ராகச் சோதிச் சுடர்விடும் திருப்பாதங்களை மட்டும் காட்டி அருள் புரிந்து கொண்டிருக்கிறாள். இப்பாதங்கள் இறைவனால் அளிக்கப்பட்டவை ஆகும்.

ஆனந்த சபையாக விளங்கும் கருவறைக்கு வடமேற்கில் தெற்கு நோக்கியவாறு இவளுடைய சந்நிதி அமைந்துள்ளது. உயரமான மேடைமீது அமைந்துள்ள இச்சந்நிதிக்குக் கிழக்கில் வாயிலும் தெற்கில் பெரிய ஜன்னலும் உள்ளன. கிழக்கு வாயில் அர்ச்ச கர் பூசை செய்ய உள்ளே செல்லப் பயன்படுகிறது. இதன் வாசலில் நின்று தீர்த்தம், சந்தனம், குங்குமம் ஆகிய பிரசாதங் களை வழங்குகின்றனர்.

இறைவன் பிரம்மதேவனுக்கு ஓங்கார பீடத்தை அளித்தபோது தனது அருள் உருவான பராசக்தியின் பதுமராகச் சோதிவிரியும் திருவடிகளையும் அளித்தான் என்றும் பிரம்மதேவன் ஓங்கார பீடத்தைக் குருந்த மூலத்திற்குத் தெற்கிலும், அம்பிகையின் பாதுகைகளை மேற்கிலும் நிலைப்படுத்தினான் என்றும் தலபுராணம் கூறுகிறது. தலபுராணத்தில் யோக பாலா என்று சிறப்பிக்கப் பெறுகிறாள். திருவாசகத்தில் பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன் பாதங்கள் என்று இவை குறிக்கப்பட்டுள்ளன.

கருவறையுள் உயர்ந்த பீடத்தில் திருவடிகள் தங்கத் தாலான ஸ்ரீசக்கரத்தின் மீது நிலைப்படுத்தப்பட்டுள்ளன. வெள்ளியாலான கூர்ச்சம் ஒன்றும் உள்ளது. நடைமுறையில் உள்ள ஸ்ரீ சக்கரத்தினின்று இச்சக்கரம் வேறுபாடானது.

இந்த ஸ்ரீசக்கரம் 43 முக்கோணங்களையும் மூன்று பூவட்டங்களையும் மூன்று சதுரங்களையும் கொண்டதாகும். கோணங்களில் அட்சரங்கள் எழுதப்பட்டுள்ளன. ரகசிய பூஜையில் உள்ளதால் இதனை அன்பர்கள் பார்க்க முடியாது. இதன் பிரதியாக அம்பிகை சந்நிதியின் முன்பாக விதானத்தில் புடைப்புச் சித்திரமாக இதன் வடிவம் அமைக் கப்பட்டுள்ளது. இதன் பெருமைகளையும் வடிவையும் சிவயோகநாயகி பிள்ளைத் தமிழ் விளக்குகிறது.

இதே போன்ற ஸ்ரீ சக்கரம் ரகுநாத பூபால மண்டப விதானத்திலும் பொறிக்கப்பட்டுள்ளது. இந்த பீடத்தின் காவலராக வீரபத்திரர் விளங்குகிறார்.

தேவி தன்னைத் தான் பூசித்தது

இறைவன் மதுரை, திருவிடைமருதூர், திருவையாறு முதலிய தலங்களில் தன்னைத் தானே வழிபட்டு அடியவர்களுக்கு சிவபூஜையின் பெருமையை விளக்கியுள்ளார். அது போன்று தேவி தனது திருவடிகளைத் தானே பூசித்ததை ஆவுடையார் கோயிலில் காண்கிறோம்.

பார்வதிதேவி இமயமன்னனின் மகளாக அவதாரம் செய்தபோது சிவபெருமானைப் பதியாக அடையக் கடுந்தவம் புரிந்தாள் அப்போது நாரதர் அவளிடம் தவம் விரைவில் நிறைவேற குருந்தவனம் சென்று தவம்புரியுங்கள் என்றார். அதன்படியே இங்குவந்த அவள் குருந்தமூலத்தையும், ஓங்காரபீடத்தையும், சக்தியின் திருவடிகளையும் வணங்கினாள் அந்தத் திருவடிகள் தம்முடையதே என்றாலும் அதன் சிறப்பை உலகினருக்கு உணர்ந்த அதை வழிபட்டாள் இப்படிச் சக்தி தன்னைத் தானே வழிபட்ட பெருமை உடையது இந்தச் சக்திபீடமாகும்.

★ சாக்த தந்திரங்களில் மன்மதனும், விநாயகரும் சிறப்பிடம் பெறுகின்றனர். மன்மதன் மலர்க்கணை களைத் தொடுக்கும் கோலத்தில் ஊஞ்சல் மண்டபத்தில் பெரிய தூணில் சிறப்பாக அமைக்கப்படுள்ளான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மாணிக்கவாசகர் சந்நிதிகள்

ஆவுடையார்கோயிலில் மாணிக்கவாசகருக்கு மூன்று சந்நிதிகள் உள்ளன. இரண்டில் கல் திருமேனிகளாகவும் ஒன்றில் உலோகத் திருமேனியாகவும் அவர் காட்சியளித்துக் கொண்டிருக்கிறார். முதலில் சொல்லப் பட்ட இரண்டு சந்நிதிகள் கலைக்கோயில்களாகத் திகழ மூன்றாவது அருட்கோயிலாகத் திகழ்கிறது.

முதல் சந்நிதி கோபுரத்திற்கு முன்புறமுள்ள ரகு நாத பூபால மண்டபத்தின் மேற்குப் பகுதியில் கிழக்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. இந்த மண்டபத்தில் கலைச் செல்வங்கள் நிறைந்துள்ளன. மூன்றுநிலை விமானத்துடன் இச்சந்நிதி சிறப்புடன் உள்ளது.

இதில் கல்லாலான திருவாசியுடன் மணிவாசகர் நின்றுவாறு காட்சியளிக்கிறார். இவரை நந்திகேச மாணிக்கவாசகர் என்றழைக்கின்றனர். இக்கோயிலில் இவரே நந்திதேவர் ஆவார்.

முதற்பிராகாரத்தில் அமைந்துள்ள கனக சபைக்கு மேற்கில் கிழக்கு நோக்கியவாறு (இரண்டாவது) மாணிக் கவாசகர் சந்நிதி உள்ளது. இவருடைய ஆலயம் ஓவியக் கலைக் கூடமாகத் திகழ்கிறது. சுற்றுச்சுவர்களில் சிவ பெருமானின் மகேஸ்வர மூர்த்தங்கள். பெரியதாக வரையப்பட்டுள்ளன. அதன்கீழ் திருஞானசம்பந்தர், அப்பர், மாணிக்கவாசகர் முதலிய நாயன்மார்களின் வர லாற்று ஓவியங்கள் மூன்று வரிசைகளில் இடம் பெற்றுள் ளன. படம் பற்றிய குறிப்புகளும் கீழே விளக்கி எழுதப் பட்டு உள்ளன.

இங்குள்ள சந்நிதிக்கு வடக்கிலும் தெற்கிலும் பெரிய ஜன்னல்கள் அமைந்துள்ளன.

இதில் சிவானந்தமாணிக்கவாசகர் என்ற பெயருடன் அவர் விளங்குகிறார். அவரைச் சுற்றி அழகிய பித்தளைப் பிரபை அமைந்துள்ளது. சந்நிதி முகப்பில் திருவாவடு துறை ஆதீனத்தில் 16வது பட்டமாக வீற்றிருந்தருளிய மேலகரம் சுப்பிரமணிய தேசிகர், அம்பலவாணத் தம்பி ரான், மடத்தில் கட்டளை விசாரணையாக இருந்த சுப்பிரமணியத்தம்பிரான், காறுபாறு வைத்திய நாதத் தம்பிரான் ஆகியோரின் திருவுருங்கள் தூண்களில் உள்ளன. இந்த சந்நிதியில் சாயரட்சையில் சோடச உப சார தீபாராதனைச் சிறப்புடன் நடைபெறுகிறது.

(இந்த சந்நிதி முதலில் முருகனுக்கென்று ஏற்படுத் தபட்டதாகும். ஆத்மநாதர் மாணிக்கவாசரையே எழுந் தருளி வைக்க வேண்டுமென்று திருவுள்ளம் பாலித்த தால் மாணிக்கவாசகரை அங்கு எழுந்தருளுவித்து சிவா னந்த மாணிக்கவாசகர் என்று பெயர் சூட்டினர் என்பர்.)

அருள் மூலஸ்தானம் மாணிக்கவாசகர்

முதற்பிராகாரத்தில் அம்பிகை சந்நிதிக்கு நேர் எதிரிலுள்ள தனிச்சந்தியில் உருத்திராட்ச மண்டபத்தில் பொற்பிரபையுள் உலோக உலாத்திருமேனியாக மாணிக்க வாசகர் எழுந்தருளியுள்ளார். இந்த இடம் அருள் மூலஸ் தானம் என்றழைக்கப்படுகிறது.

ஆதியில் சோழ, பாண்டிய மன்னர்கள் இங்கு விழா நடத்த விரும்பினர். அவர்கள் தில்லைக்குச் சென்று நடராசரை வணங்கி எங்களுக்கு மாணிக்கவாசகரைத் தந்தருள வேண்டுமென்று கேட்டனர். நடராசர் அவர்கள் முன்னே தோன்றி, திருவாதவூரன் நம்மோடு ஐக்கியமாகிவிட்டான். அவனைத் தருதல் இயலாது. நீங்கள் திருப்பெருந்துறைக்குச் செல்லுங்கள். அங்கு அவனுடைய திருவுருவத்தைத் தருகிறோம் என்றுகூறி மறைந்தார்.

அவர்கள், மிகுந்த மகிழ்ச்சியுடன் திருப்பெருந்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவானந்த மாணிக்கவாசகர்

துறைக்கு வந்தனர். அக்னிதீர்த்தத்தில் நீராடி குருந்த மூலத்தை அடைந்து பெருமானைப் பிரார்த்தித்தனர். சிவபெருமான் யோகாம்பிகை, கணேசர், முருகன் வீரபத்திரர் முதலிய கணங்களோடு அங்கே தோன்றினார்.

தமது அருளைத்திரட்டி சிரத்தினில் உருத்திராட்ச வடம், மார்பில் பூணூல் அரையில்கௌபீனம், கடிசூத்திரம். இடது கையில் புத்தகம் வலது கையில் சின்முத்திரை ஆகியவற்றுடன் கூடிய அருள்மேனியாக விளங்கும் மாணிக்கவாசகர் உருவத்தைச் செய்து அவர்களிடம் அளித்தான்.

அன்பர்களே, நான்வேறு மாணிக்கவாசகன் வேறல்ல. நமது அஷ்டாஷ்ட, மகேஸ்வர விக்கிரகங்களுக்கும் மேலானது இந்த மாணிக்கவாசகர் வடிவம் இவரை எம்மையாகவே பாவித்து சகல உபசாரங்களுடன் பூசை செய்யுங் கள். இவருக்கு சர்வாலங்காரம் செய்து அணிமணிகள் பூட்டி வாகனங்களி லும் தேரிலும் அமர்ந்து உலாவரச்செய்து மகிழுங்கள் என்றார்*.

பாண்டிய மன்னனே! நீ தட்சணாயனத்தில் பூஜை செய்து மார்கழி உற்சவத்தை நடத்துக, சோழமன்னனே நீ உத்தராயணத்தில் பூஜை செய்து ஆனிமாத உற்சவத்தை நடத்துக. இத்தலத்தில் மணிவாசகர் நானே. அது போன்று நந்தி, சண்டீசர் முதலான மூர்த்திகளும் இவரே என்று கூறினார்.

இறைவனின் அருள் திரண்டு உருவானதால் மாணிக்கவாசகர் அருள் மூலஸ்தான மாணிக்கவாசகர் என்று அழைக்கப்படுகிறார். இவருக்கே சகல விழாக்களும் நடத்தப்படுகின்றன.

*இந்த இடத்தில் தலபுராணத்தில் முக்கியமான இடம் வருகிறது. இது மணிவாசகரின் அளவில்லாத பெருமையையும், உயர்ந்த தன்மையையும் விளக்குகிறது.

இந்தத் தலத்தில் மாணிக்கவாசகருக்கு மட்டுமே அனைத்து திருவிழாக்களையும் நடந்த வேண்டுமென்று இறைவன் சோழ, பாண்டியர்களிடம் சொன்னார்.

அவ்வேளையில் விநாயகர் தந்தையே எனக்கு விழாவில் முதலிடமில்லையா? என்று கேட்டார். அவர் இல்லை என்று மறுத்ததும் வெளியில் போய் வெய்யிலில் அமர்ந்து கொண்டார். குமரன் தாய் தந்தையிடம் இந்த தென்தமிழ்நாடு எனதல்லவா எனக்கு விழாவில் பங்குவேண்டும் என்றார். சிவபெருமான் உனக்கு செந்திலில் எல்லா வைபவங்களும் நடக்க அருள்புரிந்துள்ளேன். எனவே உனக்கும் இங்கு விழாவில் பங்கில்லை என்றார். அவர் கோபித்துக் கொண்டு கோபுரத்து மாடத்தில் அமர்ந்து கொண்டார்.

தேவி, ஐயனே ஏன் இப்படிக் கூறுகிறீர்கள். இவர்கள் உலகத்தின் பிரதான மூர்த்திகளில்லையா, நமக்கு விழா இல்லாவிட்டாலும் இவர்களுக்காவது இங்கு சிறப்பளிக்கலாமே என்றார்.

அதைக்கேட்ட சிவபெருமான், யோகாம்பிகையே! நீ இந்த மணிவாசகனின் பக்திப் பெருமையை அறிந்திருந்தும் இப்படிச் சொல்லக்கூடாது. என் சொருபத்தை நன்கு அறிந்தவன் இவனே. இவன் மட்டுமே நான் வேறு பிரபஞ்சம் வேறு என்று எண்ணாமல் எல்லாவற்றையும் ஒன்றாகவே பார்த்து ஆன்மேச ஜோதியில் லயித்திருப்பவன்.

இவ்வுலகில் அன்பர்கள் எல்லோரும் கூடி நமக்குச் சிறப்பான உற்சவங்களை நடத்துகின்றனர். நாம் உற்சவம் செய்து பார்த்து மகிழ்வதற்குரிய பக்தசிரோன்மணி இவன் ஒருவனே. மேலும் இவனைப் பெருமைப்படுத்த எனது விடை வாகனத்தையும் இவனுக்குத் தந்தேன் என்றார்.

சிவபெருமான் விரும்பி விழாக் கொண்டாடிச் சிறப்பித்து மகிழும்படியான உயர்ந்த பதத்தில் மாணிக்கவாசகர் விளங்குவது அவருடைய சிவபக்தியின் பெருமையை உணர்த்துகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தூண்களிலுள்ள மாணிக்கவாசகர் திருஉருவங்கள்

ஆவுடையார் கோயிலில் மாணிக்கவாசகரின் துறவிக்கோலம், மந்திரி கோலம், இவை இரண்டும் இணைந்த கோலம் என மூன்று விதமான திருக்கோலங்கள் தூண்சிற்பங்களாக இடம்பெற்றுள்ளன. இவற்றின் சிறப்பியல்புகளை அறிந்து கொள்ளலாம்.

பஞ்சாட்சர மண்டபத்தில்

பஞ்சாட்சர மண்டபத்தில் குதிரைச் சாமிக்கு எதிரிலுள்ளதூணில் மாணிக்கவாசகரின் திருஉருவம் சுவாமியை நோக்கியவாறு அமைக் கப்பட்டுள்ளது. இங்குள்ள தூண்களில் குறுநிலமன்னன் அரிமர்த்தன பாண்டியன் ஆகியோர் வடிவங்களும் அமைந்துள்ளன.

தில்லைசபை

இங்கு தூண்களில் கருவறை நோக்கியவாறு மந்திரியாகவும், உபதேசம்பெற்றுத் துறவியாகவும் விளங்கும் இரண்டு மாணிக்க வாசகர் திருஉருவங்கள் உள்ளன. மந்திரிகோலம் கொண்ட மாணிக்க வாசகர் தலையில் கீரிடம் அணிந்துள்ளார். இடையில் பட்டு பீதாம்பரங் கள் சட்டை அணிந்து கம்பீரமாக உள்ளார். காதில் குண்டலங் களையும் மார்பில் தங்கச்சங்கிலிகளுடன் பதக்கமும் தரித்துள்ளார். வலது கை சுட்டுவிரலால் ஆணையிடும் கோலத்தில் கையில் பொற் கிழி கொண்டுள்ளார். அரசனின் முத்திரை மோதிரம் அணிந்துள்ளார்.

அருள் உபதேசம் பெற்ற மணிவாசகர் வடிவம் அன்பும் அடக்கமும் திரண்டெழுந்தது போல் அமைந்துள்ளது. அரையில் முழங்காலுக்கு மேலாக முண்டு உடுத்தி வெண்ணீறு பூசி தலையிலும் திருமேனி யிலும் உருத்திராட்ச வடங்களைத் தரித்துள்ளார். கைகளைக் கட்டிக் கொண்டுள்ளார். இடுப்பில் விபூதிப்பை உள்ளது.

இந்த இரண்டு திருஉருவங்களின் முகஅமைப்பும் ஒரே மாதிரி யாக வடிக்கப்பட்டு ஒருவரே இரண்டு கோலங்களிலும் விளங்குவதை இச்சிற்பங்கள் குறிக்கின்றன. இது கலைஞனின் அற்புதத் திறமையை வெளிப்படுத்துவதாகும்.

இரண்டாம் பிராகாரத்தில்

தில்லை மண்டபத்தினைத் தொடர்ந்து வலம்வருகையில் அன்ன பூரணி, விநாயகருக்கு அருகில் தூணில் கிழக்கு நோக்கியவாறு மணிவாசகர் உள்ளார். அரசனுக்குரிய கிரீடம் தரித்து மார்பில் நான்கு வட்ட பதக்கம், முத்து மாலைகள் அணிந்து இடையில் மூன்று வட்ட பட்டாடை உடுத்தி வலதுகை சின்முத்திரையுடன் ஜபமாலை கொண்டிருக்க இடதுகையில் திருச்சிற்றம்பலம் என்ற எழுதப்பட்ட சுவடியை ஏந்தி உள்ளார். இது மந்திரியும் துறவியும் இணைந்த கோலமாகும்.

தியாகராஜ மண்டபத்தில்

மூன்றாம் பிராகாரத்தில் பெரிய மண்டபமாக இருப்பது தியாகராஜ மண்டபமாகும். இதன் கீழ்ப்புறத்து வரிசையில் அமைந்த ஒரு தூணில்

அன்னபூரணி, விநாயகருக்கு
அருகிலுள்ள தூணில்
இடம்பெற்றுள்ள மாணிக்கவாசகர்

மேற்கு நோக்கியவாறு மாணிக்கவாசகர் அமைக்கப்பட்டுள்ளார். இவருக்கு முன்புறம் அமைந்த துணைத் தூணைக் குடைந்து பிரபா வளியாக அமைத்துள்ளனர். இந்த மணிவாச

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கர் வடிவம் கலை உலகில் தனிச்சிறப்பு கொண்டதாகும்.

இதில் அவர் தலையில் கிரீடமணிந்து மார்பில் பொன்னாபரணங்களைப் பூண்டு இடையில் அலை அலையாக மடிப்புகளுடன் கூடிய பட்டாடைகள் அணிந்து கம்பீரமாக உள்ளார். அதே சமயம் வலது கரத்தில் ஜபமாலையையும், இடது கையில் ஓலைச்சுவடியையும் தாங்கியுள்ளார். சுவடியில் திருசிற்றம்பலம் என்று பொறிக்கப்பட்டுள்ளது. இங்கு முன்புறமுள்ள பிரபாவளி கலைநயம் மிகுந்த தாகும்.

இதுவும் மணிவாசகர் ஒரே நேரத்தில் மந்திரியாகவும் துறவியாகவும் இருக்கும் கோலத்தை உணர்த்துகிறது.

★ சமய உலகில் தீட்சையும் துறவறமும் பெற்ற பிறகு ஆடம்பரமான ஆடைகளை அணியக் கூடாது என்பது கடுமையான விதியாகும். குருந்தடியில் இறை வன் மணிவாசகரை ஆட்கொண்டு அருள் உபதேசமும் செய்தார். அதைப் பெற்ற மணிவாசகர் யாவற்றையும் துறந்தார்.

இப்படி இருக்கும் நாளில் பாண்டியன் மணிவாச கரை அழைத்துவர ஆள் அனுப்பினான். அதையறிந்த இறைவன் மணிவாசகரை மீண்டும் மந்திரிகோலம் புனைந்து செல்லும்படிக் கூறினார். அதன்படி குரு வருளை ஏற்று மணிவாசகர் மந்திரிகோலம் புனைந்து மதுரைக்குச் சென்றார். அந்த நிலையை உணர்த்தும் சிற்பமாதலின் இவை தனிச்சிறப்புப் பெற்றுள்ளன.

அம்பிகை சந்நிதி மாணிக்கவாசகர்

யோகாம்பிகை சந்நிதிக்கு முன்புறம் இரண்டு வரிசையாக தூண் சிற்பங்கள் உள்ளன. இவற்றில் காளி, ஊர்த்துவ தாண்டவர், பிட்சாடனர், துவாரபாலகர்கள் முதலிய பெரிய சிற்பங்கள் கலையழகுடன் திகழ்கின்றன.

இவற்றில் எதிரெதிர் தூண்களில் மாணிக்கவாசக ரையும் அரிமர்த்தன பாண்டியனையும் அமைத்துள்ளனர். மணிவாசகர்பெருமான் கையில் ஓலைச் சுவடியுடன் கௌபீனம் தரித்து விளங்குகிறார். இது மாணிக்க வாசகர் துறவறம் பெற்றபின் கவந்தியுடன் நிற்கும் கோலமாகும். திருமேனியில் உருத்திராக்க வடங்களைத் தரித்து உள்ளார். எதிரே பாண்டியன் உயர்ந்த கிரீடம் தரித்து இடையில் பட்டாடை அணிந்து நின்று அவரைச் சிறப்பிக்கும் கோலத்தில் உள்ளான். ★

புடைப்புச் சிற்பங்களில்

மூன்று இடங்களில் சுவரில் அமைந்த புடைப்புச் சிற்பங்களாக உபதேசக் காட்சிகள் இடம்பெற்றுள்ளன. இதில் மாணிக்கவாசகர் உபதேசம் பெறும் கோலத்தில் உள்ளார்.

சுதைச் சிற்பங்களில்

தியாகராஜ மண்டபத்தில் முகப்பின் மீது மூன்று உபதேசக் காட்சிகள் இடம் பெற்றுள்ளன. ஒன்று திருவடி தீட்சை தருவதையும் மற்றது தலையைத் தொட்டுத்தரும் ஸ்பரிச தீட்சை செய்வதையும், மூன்றாவது நயன தீட்சை யுடன் வாசக தீட்சை தருதலையும் குறிக்கின்றன.

இக் கோயில் முகப்பில் மண்டபத்தின்மீது உபதேசக் காட்சியை விளக்கும் அழகிய பெரிய சுதைச் சிற்பம் உள்ளது. இதில் சிவபெருமான் ஜடா மகுடத்துடன் காட்சியளிக்கிறார். இவை சுதையால் செய்து வண்ணம் தீட்டப்பட்டுப் பொலிவுடன் விளங்குகின்றன.

தலவிருட்சமான குருந்த மரத்தின் கீழ்

ஒருகாலத்தில் இந்த இடம் முழுவதும் கொன்றை வனமாகவும் அதன் நடுவில் குருந்த மரங்கள் செழித்து வளர்ந்தும் இருந்தன. இப்போது பெயருக்காக வெளிப்பிராகாரத்தில் தென்மேற்கு முனையில் ஒரே ஒரு குருந்தமரம் மட்டும் செழித்து வளர்ந்துள்ளது. அதன் கீழ் மாணிக்கவாசகர் சிவபெருமானிடம் உபதேசம் பெறும் காட்சி பெரிய சிற்பமாக அமைக்கப்பட்டுள்ளது. இங்கு மாணிக்கவாசகர் கையைக்கட்டியவாறு சீடனாக நிற்க, எதிரே உயர்ந்த பீடத்தின் மீது சிவபெருமான் குருவடிவில் அமர்ந்து உபதேசித்துக் கொண்டிருக்கும் வடிவில் அமைந்துள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குதிரைச் சேவகன்

சிவபெருமான் மாணிக்கவாசகர் பொருட்டு குதிரை வாணிகனாகத் தோன்றினார். நரிகளைக் குதிரைகளாக்கி பெருந்திரளாக மதுரை வீதிகளில் நடத்திவந்தார். பாண்டியனிடம் மன்னனே உயர்ந்த இந்த ஜாதிக்குதிரைகளை உமக்காகக் கொண்டு வந்துள்ளேன் என்றார். அவன் மனம்மகிழ குதிரை களை ஐந்து கதிகளில் நடத்திக் காண்பித்தார் அவன் மனமகிழ்வுடன் தந்த வெகுமதிகளை ஏற்றுக் கொண் டார்.

அதனால் அவரைக் குதிரைச் சேவகன் என்று அழைக்கின்றனர். ஆவணி மூல நாளில் இறைவன் குதிரைகளை நடத்தி வந்தான் என்று புராணம் கூறுகிறது.

ஆவுடையார் கோயிலிலுள்ள பஞ்சாட்சர மண்டபத்தில் பெரிய தூண்சிற்பமாகப் பெருமாள் குதிரைச் சேவகனாக அமைந்துள்ளார். இவரை குதிரைச்சாமி என்று அழைக்கின்றனர். வடமொழியில் அசுவநாதர் என போற்றப்படுகிறார். தாவிவரும் குதிரைமீது சலாகை (ஈட்டி) ஏந்தி வரும்தோற்றம் வனப் புடன் திகழ்கிறது.

இவருக்கு எதிரிலுள்ள தூணில் மாணிக்கவாசகர் சின்முத்திரை ஓலைச்சுவடி தாங்கி நின்றவாறு காட்சியளிக்கிறார்.

இவ்விரு மூர்த்தங்களையும் சைவப்பிள்ளை மரபில் வரும் ஓதுவார்கள் பூஜை செய்து வருகின்றனர்.

குதிரை மீது வந்த கணநாதர்கள்

சிவபெருமான் வேதத்தைக் குதிரையாக்கி அதன்மீது ஏறி மதுரைக்கு வந்தார். அவர் நரிகளை யெல்லாம் குதிரைகள்ாக்கி, கணங்களைச் சேவர் களாக்கி அவற்றை நடத்திவரும்படிச் செய்தார். அவருடன் இவ்வகையான ஏராளமான குதிரைகளும் சேவகர்களும் உடன் வந்தனர். அதைக்குறிக்கும் வகையில் ஆறு பெரிய குதிரைவீரர் சிற்பங்கள் ஆவுடையார். கோயிலில் இடம் பெற்றுள்ளன. ஆயிரக் கால் மண்டபத்தில் நான்கும், தியாகராஜ மண்டபத் தில் இரண்டும் உள்ளன. இவை கடும்புறவி, ஆடல்மா என்று பலவாறு சிறப்பிக்கப்படுகின்றன. இதிலுள்ள வீரர்கள் கிரேக்கம், அரபு முதலிய நாட்டு வீரர்களைப்போல் தலைமுடி நகைகள் ஆகியவற்றைத் தரித்துள்ளனர்.

குதிரை சேவகன் பஞ்சாட்சர மண்டபம்

குதிரைச்சாமியை முஸ்லீம் அன்பர்கள் வந்து வழிபடுகின்றனர். இவ்வகையில் குதிரைச்சாமி வழிபாடு மதநல்லிணக்க வழிபாடாக விளங்குகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அன்னபூரணி



அன்னபூரணியும் விநாயகரும் இரண்டாம் பிராகாரம்

ஆவுடையார் கோயிலில் இறைவன் ஞான பூரணனாக விளங்குகிறான். அவனுடைய சக்தியாகிய அன்னபூரணி உயிர்களுக்கு உணவு ஊட்டி உடற்பசியைப் போக்கியும் ஞானத்தை ஊட்டி ஆன்ம தாகத்தைத் தணித்தும் அருள் பாலித்துக் கொண்டிருக்கிறாள்.

கருவறைக்கு முன்னுள்ள சத்சபையில் அமைந்துள்ள படைகல்லில் அவள் மந்திரப் பூர்வமாக நிலைப்படுத்தப் பட்டுள்ளாள். இந்தப் படைகல் அன்னபூரணியின் திருமேனியேயாகும். அது வற்றாத அமுதசுரபியைக் குறிக்கிறது. படைக்கல்லில் இடப்பட்டு நிவேதிக்கப்படும். அன்னம், அன்னபூரணியின் பிரசாதமேயாகும். அதை உண்பர்களுக்கு நோய் அணுகாது.

★ அம்பிகை சந்நிதியின், முன்புறமுள்ள பலகணிக்கு முன்புறமாகவும் அன்னபூரணியின் திருவுருவம் நிலைப் படுத்தப்பட்டுள்ளது.

இரண்டாம் பிரகாரத்தில் விநாயகருடன் அன்னபூரணி காட்சியளிக்கிறாள். நெல்லைச் சேமித்து வைக்கும் கோட்டையில் அன்னபூரணியும் தான்யலட்சுமியும் நிலைபெற்றுள்ளனர். திருமடைப்பள்ளியில் அவள் தீர்த்த வடிவில் விளங்குகிறாள். அந்தத் தீர்த்தம் அன்னபூரணி தீர்த்தமென்றும் அன்னலட்சுமி தீர்த்தமென்றும் அழைக்கப்படுகிறது.

நிவேதனங்கள்

ஆவுடையார் கோயிலில் இறைவனுக்கு பலவிதமான நிவேதனங்கள் படைக்கப்படுகின்றன. காலைச் சந்தியில் புட்டுடன் தேன்குழல், அதிரசம், வடை, அப்பம், தோசை ஆகியவை நிவேதிக்கப்படுகின்றன. இதனைப் புட்டுக் கூடை நிவேதனம் என்று கூறுவர்.

மதுரையில் புட்டுவாணிச்சி வந்தி அம்மை அளித்த புட்டை சுவாமி விருப்பமுடன் உண்டதால் புட்டு சிறப்பு நிவேதனமாகும்.

திண்போர் விடையான் சிவபுரத்தார் போரேறு
மண்பால் மதுரையினில் பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட
(திருப்பூவல்லி 16) என்றும்
பிட்டு நேர்பட மண்சுமந்த பெருந்துறைப் பெரும் பித்தன்
(திருக்கழுக்குன்றம் 2) என்றும்

இது திருவாசகத்தில் குறிக்கப்பட்டுள்ளது. தினந் தோறும் நடைபெறும் ஆறுவேளை பூஜையிலும் புழுங்க லரிசி சாதமும் உப்பிடாது சுண்ட வைத்த முளைக்கீரை, புளிசேர்த்த பாகற்காய்க் குழம்பு ஆகியன நிவேதிக்கப் படுகின்றன. படைகல் மீது சாதத்தைப் பரப்பி அதன் ஆவிபறக்க நிவேதனம் செய்யப்படுகிறது. பிற ஆலயங்களில் நிவேதனத்தை மூடி நிவேதனம் செய்வார்கள். இங்கு பலரும் காணப் படைக்கல்லில் பரப்பி நிவேதிக்கின்றனர்.

யோக மார்க்கத்தில் இருப்பவர்கள் பச்சரிசி சாதம் உண்பதில்லை. அது வாயுப்பிடிப்பை உண்டாக்கும் என்று கருதுகின்றனர். புழுங்கலரிசிச் சோற்றையே விரும்பி உண்கின்றனர். இங்கு பெருமான் தவயோகத்தில் திளைத்துக் கொண்டிருப்பதால் அவருக்கும் புழுங்கலரிசி சாதம் நிவேதிக்கப்படுகிறதென்பர்.

யோகப் பயிற்சியாளனுக்கு பித்தம் தலைசுற்றல் கபம் கட்டுதல் முதலிய நோய்கள் அண்டும். அவற்றை விலக்கப் பாகற்காய்க் குழம்பையும்; தூதுவளை (அ) முளைக்கீரை மசியலையும் பத்திய உணவாக ஏற்பர். அம்முறையே இங்கு நிவேத்தியத்திலும் கடைப்பிடிக்கப் படுகிறது. என்பர் அம்பிகைக்குத் தினமும் பாயசம் நிவேதிக்கப்படுகிறது.

வீரபத்திரருக்கு வெண்ணெய் காப்பு, செய்து வடைமாலைகள் சாற்றி வடை நிவேதனம் செய்கின்றனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



எல்லாம் வல்ல சித்தர் அலங்காரத்தில்
அருள் தரும் மாணிக்கவாசகர்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருப்பெருந்துறை வீரபத்திரர் வழிபாடு

தட்சப்பிரஜாபதி ஒரு சமயம் பெரிய வேள்வியைச் செய்தான். அதற்கு அவன் மகாதேவனும் வேள்வியின் தலைவனும் தனது மருமகனும் ஆன சிவபெருமானை அழைக்கவில்லை. அதைக்கேட்க அங்கு சென்ற தாட்சாயணியையும் அவமதித்தான். அதனால் அவள் யாகத்தீயில் குதித்து தேகத்தை விடுத்து ஒளிமயமாக மறைந்தாள்.

அதைகேட்ட சிவபெருமான் மிகுந்த கோபம் கொண்டார். தனது சடைக் கற்றையிலிருந்த ஒரு சடையைப் பறிந்து பூமியிலிட்டார். அதைத் தனது நெற்றிக் கண்ணால் நோக்க அந்த சடையிலிருந்து வீரபத்திரர் தோன்றினார்.

வீரபத்திரரிடம் சிவபெருமான் தட்சனுடைய யாகத்தை அழித்து வருமாறு கூறினார். அவர் தன்னிலிருந்து பத்திரகாளியையும் அனேக வீரபத்திரர்களையும் உருவாக்கினார். கணக்கற்ற சேனைகளை உண்டு பண்ணினார். மிகுந்த சினத்துடன் சென்று தட்சனுடைய யாகத்தை அழித்தார். அதன் பிறகு சிவன் ஆணைப்படி சிவாலயங்களுக்கும் அம்பிகை ஆலயங்களுக்கும் காவலாக அமர்ந்தார்.

அவரை வழிபடும் பக்தர்கள் பெருகினர். அதற்கேற்ப வழிபாட்டு முறைகளும் விரிந்தன. தென் பாண்டி நாட்டில் இவருடைய திருவுருவம் பெரிய அளவில் அமைக்கப்பட்டு வழிப்படப்படுகிறது. குறிப்பாக ஆவுடையார் கோயில் வீரபத்திரருக்குரிய வீரத் தலமாக விளங்கி வருகிறது. இங்கு உக்கிரமயமான நான்கு வீரபத்திரர் உருவங்கள் வழிபடப்படுகின்றன.

அக்னி வீரபத்திரர் - அகோர வீரபத்திரர்

பிள்ளையார் வழிபாட்டில் இரட்டைப் பிள்ளையார்களை வழிபடுவதுபோல வீரபத்திர வழிபாட்டிலும் இரட்டை வீரபத்திரர்கள் வழிபாடு உள்ளது. பாண்டிய நாட்டில் ஆலயத் தூண்களில் இரண்டு வீரபத்திரர்களை அடுத்தடுத்து அமைத்து வழிபடும் வழக்கம் பரவலாக உள்ளது. மதுரையில் கம்பத்தடி மண்டபத்திற்கு அருகில் இரட்டை வீரபத்திரர்களைக் காணலாம். அங்கு சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. தென்காசியிலும்

அகோர வீரபத்திரர் – அக்கினி வீரபத்திரர், திருப்பெருந்துறை, ரகுநாதபூபால மண்டபம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இரட்டை வீரபத்திரர்கள் தூண்களில் உள்ளனர்.

ஆவுடையார் கோயிலில் கோபுரத்திற்கு முன்னுள்ள இரகுநாத பூபால மண்டபம் என்னும் ஆயிரக்கால் மண்டபத்தில், வாயிலை ஒட்டி அமைந்த தூண்களில் வடக்கு நோக்கியவாறு அளவால் பெரிய இரண்டு வீரபத்திரர் உருவங்கள் உள்ளன. பெரிய தூணில் ஏறத்தாழ பத்து அடி உயர முடையதாக இவ்வடிவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவர்களை அக்னி வீரபத்திரர், அகோர வீரபத்திரர் என்றழைக்கின்றனர்.

வாயிலின் கிழக்குப்புறம் அமைந்துள்ள அகோர வீரபத்திரர் பத்து கரங்களுடன் விளங்குகின்றார். இடது முன்கை தொடைமீது அழுத்திப் பிடிக்கப்பட்டுள்ள தட்சப் பிரஜாபதியின் தலையைப் பற்றிக் கொண்டுள்ளது. வலது கையிலுள்ள வாளால் அவன் கழுத்தை அரிகிறார். எஞ்சிய கைகளில் மழு, சூலம், வில், மான் ஆகியவற்றை ஏந்தியுள்ளார். மேல் வலதுகரம் அம்பராத் தூளியிலிருந்து அம்பை இழுக்கிறது தலையின் பின்புறம் பிரபாவளி உள்ளது. கால்களில் பாதுகை தரித்துள்ளார்.

அக்னி வீரபத்திரன் தலைமீது தழல்கள் காட்டப்பட்டுள்ளன. முன்னிரண்டு கைகளில் நீண்ட சூலத்தை கவிழ்த்துப் பிடித்து காலடியில் கிடக்கும் எச்சனை (வேள்வித்தலைவனை) குத்துகிறார். கரங்களில் டமரு, கத்தி, கேடயம், மணி, பாசம் ஆகியன உள்ளன.

இந்த இரண்டு வீரபத்திரர்களுக்கும் அன்பர்களின் வேண்டுதலின் பேரில் பெரிய அபிஷேகமும் ஆராதனைகளும் நடைபெறுகின்றன. கோயில் கொத்தனார்கள் எனும் வகுப்பார் இவர்களைப் பூசிக்கின்றனர்.

★ அம்பிகை சந்நிதியின் முன்புறமுள்ள ஜன்னலுக்கு இருபுறமும் வீரபத்திரரும் பத்திரகாளியும் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளனர்.

பெருந்துறை வீரபத்திரர்

அம்பிகை சந்நிதிக்கு முன்பாக மேற்குநோக்கியவாறு ஒரு தூணில் பெருந்துறை வீரபத்திரர் எழுந்தருளியுள்ளார். இத்தூண் மண்டபத்தோடு இணைந்ததல்ல தனியான தூண் ஆகும். இப்போது இதைச் சுற்றி மண்டபம் அமைத்துள்ளனர்.

பார்வதிதேவி தவம்செய்ய இங்குவந்தபோது அவளுடன் இமயமலையிலிருந்து வந்தவர். அவளுடைய தவத்திற்குக் காவலாக இருந்த பின்னர் இங்கேயே தங்கிவிட்டார் என்று கூறுகின்றனர்.

இவருக்குச் சிவாச்சாரியார் பூசை செய்கிறார். ஆறுகால பூஜை நடைபெறுகிறது. பிரார்த்தனை நிறைவேற வடைமாலை அணிவிக்கின்றனர். சந்தனக்காப்பு, வெண்ணைக்காப்பு முதலியன செய்யப்படுகின்றன. இவரை வழிபடுவதால் பில்லி சூனியம் முதலான கண்காணாதத் தொல்லைகள் விலகும். மனதில் தோன்றும் இனம்புரியாத அச்சம் தீரும் என நம்புகின்றனர்.

இவர் பெருமைகளை வீரமாலை, வீரபத்ர சத்ரு சங்கார மாலை முதலிய துதி நூல்கள் விளக்கமாகக் கூறுகின்றன இதில் வீரமாலை தோன்றிய வரலாற்றைத் தொடர்ந்து காணலாம்.

புதுக்கோட்டை சமஸ்தானத்தில் "ஸ்ரீ கேசவபாரதி" என்பவர் சமஸ்தானப் புலவராக இருந்தார். அஷ்டசகவரம் எனும் அந்தணர் வகுப்பைச் சேர்ந்த இவர் பெரும்புலமையும், நிறைந்த சிவபக்தியும் உடையவர்.

சமஸ்தானாதிபதியான தொண்டைமான் மன்னரிடம் முடி திருத்துபவர் ஒருவர் இருந்தார். அவர் அதில் சிறந்த தேர்ச்சி பெற்றிருந்தார். ஒரு சமயம் அவருடைய பணியைப் பாராட்டிய தொண்டைமான் "உனக்கு வேண்டியதைக் கேள் தருகிறேன்" என்றார். அவர் "மன்னரே உமது அவைக்களத்திலிருக்கும் பாரதியாரைக் கொண்டு என்னைப் புகழ்ந்து ஒரு பாடல் இயற்றித் தர வேண்டும்" என்றான். மன்னரும் "அதற்கென தடை? இப்போதே பாரதியாரிடம் உன்னைப் போற்றி ஒருபாடல் பாடித் தரும்படிச் செய்கிறேன்" என்றார்.

அதன்படியே, பாரதியாரை அழைத்துத் தமது பணியாளர் பேரில் ஒரு பாடலைப் பாடித்தரும்படி கூறினார். அதைக் கேட்ட பாரதியார் துணுக்குற்றார். மன்னரே நான் ஆண்டவனைத் தவிர யாரையும் பாடுவதில்லை என்பதை அறிவீர் அப்படியிருந்தும் இப்படிக் கேட்பது புதுமையாக உள்ளதென்றார்.

அதைக்கேட்ட மன்னர் "எமது சொல்லை மதித்து நான் கேட்டபடி என் பணியாளர் மீது ஒரு பாடல் இயற்றித்தாருங்கள். இல்லாவிட்டால் எமது நாட்டை விட்டு இன்றே அகன்றுவிடுங்கள்" என்றார்.

பாரதியார் எதுவும் பேசாமல் தன் குடும்பத்துடன் புறப்பட்டார். ஆவுடையார் கோயிலுக்கு அருகில் தம் இனத்தவர்கள் அதிகம் வாழும் கீழ்க்குடி எனும் ஊரில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

குடியேறி வசிக்கத் தொடங்கினார். அவர் மனம் பெரிதும் புண்பட்டிருந்தது. தினமும் ஆவுடையார் கோயிலுக்குச் சென்று அங்குத் தூணில் எழுந்தருளியிருக்கும் வீரபத்திர மூர்த்தியை வழிபட்டு வந்தார்.

இதற்கிடையில் மன்னர் பலவாறு கூறியும் தம்மீது பாடமறுத்து ஊரை விட்டுச் சென்றுவிட்ட பாரதியார் மீது அந்த முடிதிருத்துபவன் மிகுந்த கோபம் கொண்டான். அவன் எண்ணத்தை அன்பர்கள் மூலம் கேள்விப்பட்ட பாரதியார் அச்சம் கொண்டார்.

ஆவுடையார் கோயில் வீரபத்திரரைத் தஞ்சம் அடைந்து தம்மைக் காக்குமாறு வேண்டினார். அவர்மீது "வீரமாலை" என்னும் நூலை மணிப்பிரவான நடையில் பாடி உள்ளம் கசிந்து கண்ணீர் மல்க முறையிட்டார். வீரபத்திரர் அவருக்கு அருள்புரிந்தார்.

அந்த வேளையில் புதுக்கோட்டை அரண்மனையில் அரசருக்கு முடிதிருத்தும் பணியை முடித்துவிட்டு அந்தப் பணியாளர் நின்றிருந்தார். அரசரிடம் பாரதியாரைப் பற்றிக் கோள் சொல்ல நேரம் பார்த்துக் கொண்டிருந் தான். அப்போது வானில் ஒரு கருமேகம் தோன்றியது. இருண்டு கருத்து வரும் அந்த மேகத்தைக் கண்டு அனைவரும் அதிசயித்தனர்.

அதிலிருந்து கடுமையான இடிசத்தத்துடன் மின்னல் தோன்றி அவன் மீது பாய்ந்து அவனை இரண்டாகப் பிளந்தெறிந்தது. அனைவரும் அதைக் கண்டு அஞ்சினர். தொண்டைமான் பாரதியாரின் பெருமைகளை உணர்ந்தார். அவரை மீண்டும் அழைத்து வந்து உரிய சிறப்புகளைச் செய்தார்.



அருள்மிகு வீரபத்திரர் திருப்பெருந்துறை

காளியோடாடி கனகாசலத்தாடி... பெருந்துறையில் ஆடும்பிரான்...

காளிதேவி தாருகனை அழித்துவிட்ட வெற்றிக்களிப்பால் அகங்காரம் கொண்டு திரிந்தாள் அவளைச் சிவபெருமான் ஊர்த்துவ தாண்டவம் ஆடி அடக்கியது நாடறிந்த தொன்மையான கதையாகும். அக்கதையை நினைவூட்டும் வகையில் பாண்டிய நாடெங்கும் ஆலயத்தூண்களில் பெரிய அளவில் ஊர்த்துவ தாண்டவரையும் காளியையும் அடுத்தடுத்த தூண்களில் அமைத்துள்ளனர்.

மதுரை மீனாட்சி ஆலயம் தொடங்கி எண்ணற்ற ஆலயங்களில் காளியையும் ஊர்த்துவ தாண்டவரையும் எதிரெதிராகவோ அடுத்தடுத்தோ தூண்களில் காண்கிறோம்.

ஆவுடையார் கோயிலில் காளியையும் ஊர்த்துவ தாண்டவரையும் மாபெரும் தூண்சிற்பங்களாக அமைத்துள்ளனர். ஆயிரக்கால் மண்டபத்திலும், அம்பிகை சந்நிதியிலும் அமைத்துள்ளனர். சிவபெருமான் ஆட்டத்தின் நடுவில் காதிலிருந்து நழுவி விழுந்த குழையை காலால் எடுத்து அணிந்து கொள்ளும் பாவனையில் உள்ளார். வலது முன்கை மணியை ஒலிப்பதால் இது காப்புத்தாண்டவம் என்பர்.

★ மார்கழி மாதத்தில் நடைபெறும் பெருந்திருவிழாவின் ஆறாம் நாள் காலையில் மாணிவாசகரை ஊர்த்துவ தாண்டவராக அலங்கரித்து உலாவரச் செய்கின்றனர். இது வேறெந்த தலத்திலும் செய்யப்படாத அலங்காரமும் விழாவுமாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருப் பெருந்துறைக் குமரர் வழிபாடு

தமிழரின் தொன்மைமிகு கடவுள் முருகப்பெருமான். தமிழக ஆலயங்கள் அனைத்திலும் முருகப்பெருமான் முதன்மைத் தெய்வமாகவோ துணைத் தெய்வமாகவோ இடம் பெற்றுள்ளார். ஆவுடையார் கோயிலிலும் முருகன் வழிபாடு உள்ளது. ராஜ கோபுரத்தின் வடகிழக்கு முனையில் வடக்கு நோக்கியவாறு குமரர் மூல மூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். கோபுர மாடத்தில் வீற்றிருப்பதால் இவரை கோபுரக்குமரர் என்றழைக் கின்றனர். இவருக்கு தினசரி வழிபாடுகள் நடைபெறு கின்றன.

உள்பிராகாரத்தில் தென்கிழக்கு முனையில் வடக்கு நோக்கியவாறு அமைந்துள்ள சந்நிதியில் குமரர் உலாத்திருமேனியாக எழுந்தருளியுள்ளார். பெரிய சப்பர மஞ்சத்தில் நின்றவாறு காட்சியளிக்கும் இந்த பாலசுப்பிரமணிய முருகப்பெருமானுக்கு. கிருத்திகை, சஷ்டி முதலிய நாட்களில் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படு கின்றன. மாதந்தோரும் கார்த்திகை நட்சத்திரத்தில் குமரர் உள்வலம் வந்து அருள்பாலிக்கின்றார்.

ஐப்பசி மாதம் கந்தர் சஷ்டி உற்சவம் சூரசம்ஹார விழாவாக ஏழுநாட்கள் சிறப்புடன் கொண்டாடப்படு கிறது.

குமரர் பவனிவர அழகிய வெள்ளி மயில் வாகனம் உள்ளது.

அருணகிரிநாத சுவாமிகள் இவர்பேரில் நான்கு திருப்புகழ்ப் பாடல்களை அருளிச் செய்துள்ளார் அதில் குருந்தடி அமர்ந்த குருபிரானான சங்கரருடன் திருப் பெருந்துறை உறையும் பெருமான் என்றும். ஜெகத் குருவாகிய தந்தை மனங்களிக்க ஞானப்பிரசங்கம் செய்யும் குமரனென்றும் துதித்துள்ளார்.

திருப்பெருந்துறைப் புராணத்தில் சிவபார்வதியர் திருமணத்தைத் தொடர்ந்து முருகனின் தோற்றம் சூரசங்காரம் செய்தல் முதலிய வரலாறுகள் இடம் பெற்றுள்ளன.

மீனமாதமும் ஆவுடையார் கோயிலும்...

மேஷமாதம் மதுரையிலும்; வ்ருஷப, மிதுன (வைகாசி, ஆனி) மாதங்களில் குருக்ஷேத்திரத்திலும் கடகமாதம் (ஆடி) இராமேஸ்வரத்திலும் ; சிம்ம (ஆவணி) மாதத்தில் கோதாவரியிலும் ; கன்னி (புரட்டாசி) மாதத்தில் நர்மதையிலும் விருச்சிக மாதத்தில் யமுனையிலும் தனுஸ் (மார்கழி) மாதத்தில் சிதம்பரத்திலும் ; மகர (தை) கங்கையிலும் கும்பமாததில் (மாசி) பிரயாகையிலும் மீனமாதத்தில் குருந்தவனமான திருப்பெருந்துறையிலும் வாசம் செய்ய, மிகவும் புனிதம் அடையலாம் என்று தலபுராணம் தலத்தில் வாசம் செய்வதின் பெருமையை விளக்குகிறது. மீனம் – பங்குனி மாதமாகும். இங்கே இராசிக்கட்டங்களில் மீனுக்கு முதன்மை தந்துள்ளதும் குறிப்பிடத் தக்கதாகும்.

தொட்டி தீர்த்தம்

ஆவுடையார் கோயிலில் யோகாம்பிகை சந்நிதியில் கிழக்கு நோக்கி இருக்கும் நிர்மால்ய அபிஷேக நீர் விழும் தொட்டி சிறப்புடன் போற்றப்படுகிறது. சக்திவாய்ந்த அம்பிகையின் பாதங்களுக்கும் அதன் பீடத்திலுள்ள சக்கரத்திற்கும் அபிஷேகம் செய்யப்படும் நீர் கோமுகியின் வழியாக இதில் விழுகிறது. இந்த நீர் தலையில் படும்படி அன்பர்கள் அதில் தலையை நீட்டுகின்றனர். தலையில் விழும் அபிஷேக நீரால் பேய் பிசாசுத் தொல்லைகளும், மனக்கலக்கமும் தீருமென்று நம்புகின்றனர். இந்தத் தொட்டியைச் சிங்கங்கள் தாங்குவது போல் அமைந்துள்ளனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆறுசபை அழகர் (ஷட்சபாரமணர்)

சிதம்பரத்தில் பஞ்ச சபைகள் இருப்பது போல ஆவுடையார் கோயிலில் ஆறு சபைகள் உள்ளன. சிதம்பரத்தில் சபைகள் வெவ்வேறு இடங்களில் ஆலயத்தில் விரவியுள்ளன. ஆவுடையார் கோவிலில் ஒரே வரிசையில் ஒன்றன் பின் ஒன்றாக ஆறுசபைகளும் அமைக்கப்பட்டுள்ளதால் ஒரே நேரத்தில் ஆறுசபைகளின் வழியாகவும் பெருமானைக் கண்டு களிக்கலாம்.

ஆறுசபைகளிலும் விரும்பி உறைவதால் சிவபெருமானைத் தல புராணம் "ஷட்சபா ரமணர்" என்று அழைக்கிறது.

கனகசபை

ராஜகோபுரத்தைக் கடந்ததும் சிறு வெட்டவெளி உள்ளது. அதையடுத்து அமைந்தது கனக சபை இதன் நடுவில் சபாமண்டபமும் சுற்றிலும் நடவாணமும் உள்ளன. மத்தியில் நான்கு பெருந்தூண்கள் உள்ளன. ஒன்றில் அசுவநாதர் (குதிரைமீது வந்த பெருந்துறைப் பெருமான்) அமைந்துள்ளார் இவரை குதிரைச்சாமி என்றழைக் கின்றார். இவருக்கு எதிரில் அமைந்துள்ள தூணில் இவரை நோக்கியவாறு துறவறம் பூண்ட மாணிக்கவாச கர் உள்ளார். இவர்களுக்கு இணையாக அரிமர்த்தன பாண்டியன். அவனுக்கு எதிரில் குரும்ப வேளாளன் ஆகியோர் திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இம்மண்டபத்தின் மைய விதானத்தை சுற்றி அமைந்த நடவாண விதானத்தில் கிழக்கில் வித்யாகலை, சாந்தி கலை, சாந்தியாதீதகலை, பிரதிஷ்டாகலை, நிவிர்த்தி கலை ஆகிய பஞ்சகலைகள் புடைப்புச்சிற்பங்களாக பெயர்களுடன் அமைக்கப்பட்டுள்ளன.

தென்கிழக்கு முனையில் பதினோரு மந்திரங்களும் தெற்கில் 81 கட்டங்களில் எழுத்துக்களுடன் பதங்களும் அமைந்துள்ளன. தென்மேற்கில் 51 கட்டங்கள் உள்ளன. இவை வர்ணத்தை (எழுத்துக்களை) குறிப்பதாகும். மேற்கில் அமைந்துள்ளன 224 கட்டங்கள் புவனங்களைக் குறிக்கின்றன வடக்கில் 36 தத்துவங்களைக் குறிக்கும் வட்டங்கள் உள்ளன.

கனக சபையைக் கடந்து உள்ளே இரண்டாம் பிரா காரம் செல்லும் வழியில் உள்ள கோபுர வாசல் இடைக் கட்டு வாசல் எனப்படும். இதில் 81 தீபங்களைக் கொண்ட பதம் என்ற வாசல் மாலை தீபம் உள்ளது.

நடனசபை

இரண்டாம் பிராகாரத்தில் அமைந்துள்ளது. நடன சபையாகும். இதன் கொடுங்கைகளில் தில்லைச் சிற்றம் பலத்திலுள்ளது போலவே கருங்கல்லால் ஓடுகள்போல செதுக்கப்பட்டுள்ளது. இதையொட்டியது தில்லைச் சபை என்று அழைக்கப்படும். இங்கு அளவால் சிறிய பதஞ்சலி, வியாக்ரபாதர் வடிவங்கள் உள்ளன. மந்திரி

அரிமர்த்தன பாண்டியன் பஞ்சாட்சர சபை

கோலத்திலும், துறவறம் பூண்ட கோலத்திலும் மாணிக்கவாசகர் வடிவங் கள் உள்ளன. (இந்த வடிவங்களைச் சிவயோக மூர்த்தி, புரூருவசக்ரவர்த்தி எனவும் ஒரு சிலர் கூறுகின்றனர்.)

இந்த மண்டபத்தைக் கடந்து முதல் பிராகார்த்திற்குச் செல்லும் வழியில் 224 தீபங்களைக் கொண்ட தீபமாலை உள்ளது. இவற்றைப் புவன தீபங்கள் என்றழைக்கின்றனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

தேவசபை

நடனசபை வழியாக உட்சென்றால் முதற்பிராகாரத்தை அடையலாம் முதலில் இருப்பது இடைக்கட்டு இதன் மேற்புறம் மாணிக்கவாசகர் எழுந்தருளியுள்ள அருள் மூலஸ்தானமும் கீழ்ப்புறம் பெருந்துறைக் குமரர் சந்நிதியும் உள்ளன. இங்குள்ள வாயில் வழியாக தேவசபையை அடைகிறோம்.

இந்த மூன்றாம் வாசலில் பதினோரு தீபங்கள் மந்திர தீபங்கள் என்ற பெயரில் உள்ளன. இதனைக் கடந்தால் தேவசபை உள்ளது. இது தேவர்கள் தொழும் மன்றமாகும். இதுவே பக்தர்கள் ஆத்மநாதரைத் தொழுமிடம். விழாநாட்களில் மாணிக்கவாசகர் எழுந்தருளும் இடமும் இதுவே. விதானத்தில் நடுவில் மாணிவாசகருக்கு இறைவன் குருந்தடியில் வீற்றிருந்து உபதேசிக்கும் காட்சி புடைப்பு சிற்பமாக அமைந்துள்ளது. சுற்றியுள்ள கட்டங்களில் நிலம், நிலா, சூரியன், சந்திரன், ஆன்மா, நீர், காற்று, ஆகாயம் என்னும் பெருமானின் அஷ்டமூர்த்தங்கள் புடைப்புச் சிற்பங்களாக உள்ளன.

இந்த சபைக்கு இருபுறமும் கிழக்கிலும் மேற்கிலும் வாயில்கள் உள்ளன. எதிரேயுள்ள தெற்குவாயில் வழியாக உள்ளே செல்லும் வழக்கமில்லை. பக்க வாயில்கள் வழியாகவே அன்பர்கள் சென்று வழிபடுகின்றனர்.

சத்சபை

சத்சபை, சித்சபை, ஆனந்தசபை ஆகியமூன்றும் ஒன்றின் பின் ஒன்றாக அமைந்ததாகும். சத்சபை முகமண்டபமாகவும், சித்சபை, இடைக்கட்டு மண்டபமாகவும், ஆனந்தசபை கருவறையாகவும் உள்ளன. சத்சபைக்கு அப்பால் நம்பியார் (எ) முன்னூற்றுவர் மட்டுமே செல்ல முடியும்.

தேவசபையை அடுத்திருப்பது சத்சபையாகும். இதன் வாசலில் வெள்ளிக் கதவுகள் பொறுத்தப்பட்டுள்ளன. இதன் நடுவில் ஏறத்தாழ ஏழடி நீள அகலம் கொண்ட சதுரமான கல் அமைக்கப்பட்டுள்ளது. இதனை படைகல் என்றழைக்கின்றனர்.

இதில் அன்னபூரணி மந்திரரூபமாக ஆவாகனம் செய்யப்பட்டுள்ளாள். இங்கு மேற்கில் ஜன்னல் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன் வழியாக அன்னப் படையலின் புகை அம்பிகை சந்நிதியை அடைகிறது என்பர் படைகல்லின் மீது பூஜை வேளை களில் அன்னம் படைக்கப்படுகிறது.

இங்குள்ள நான்காவது வாயிலில் 36 தீபங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இது தத்துவதீபம் என்றழைக்கப் படுகிறது.

சிற்சபை

படைகல் உள்ள மண்டபத்தைத் தாண்டி அமைந்து உள்ள இடை நாழி மண்டபமே சிற்சபை இதிலிருந்த வாறே தீபாராதனை செய்யப்படுகிறது. இங்குள்ள ஐந்தாம் படியில் 51 தீபங்களை கொண்ட வர்ணதீபம் என்னும் வாசமாலை உள்ளது.

ஆனந்தசபை

இதன் உள்செல்லும் வாசலில் 5 விளக்குகளை கொண்ட கலாதீபம் உள்ளது. ஆனந்தசபையான கருவறையின் நடுவில் பீடம் உள்ளது. இதுவே ஓங்கார பீடமாகும். இதன் பின்னணியில் இருபத்தேழு தீபங்களைக் கொண்ட நட்சத்திர மாலை அமைந்துள்ளது. அதன் மீது சிவப்பு, மஞ்கள், பச்சை ஆகிய மூன்று வண்ணக் கண்ணாடிகளின் பின்புறம் விளக்குகள் ஏற்றப் படுகின்றன. இவை மூன்றும் சூரிய சந்திர, அக்னி மண்டலங்களையும் அதில் வீற்றிருக்கின்ற உருத்திரா் பிரம்ம தேவன் திருமால் ஆகியோரையும் குறிக்கின்றன.

நடராஜர்

தென்பாண்டி நாட்டுச் சிவாலயங்களில் கல்திருமேனியாக நடராசரை சிவகாமியுடன் எழுந்தருளிவைத்து வழிபடுகின்றனர். இவருக்குச் சந்தனத்தை அப்பிவைப்பது வழக்கம் இதையொட்டி சந்தன சபாபதி என்று அழைக்கப்படுகிறார். திருப்பெருந்துறையில் கல்திருமேனியாக நடராசர் எழுந்தருளியுள்ளார். இவருக்குத் தினசரி வழிபாடு நடைபெறுகிறது. இவருடன் சிவகாமி எழுந்தருளியுள்ளார். இவருக்கு அருகில் புதிய மாணிக்கவாசகர் உலாத்திருமேனி உள்ளது.

திருவாசகக் கோயில்

நடராஜர் சந்நிதிக்கு வலப்புறம் திருவாசகக் கோயில் உள்ளது. இதில் உயர்ந்த பீடத்தில் திருவாசக ஏடுகள் ஏழுந்தருளி வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் திருப்பெருந்துறை புராணமும், மதுரைப் புராணமும் வைக்கப்பட்டுள்ளன. இச் சந்நிதியில் தினசரி வழிபாடு நடைபெறுகிறது. திருவிழாவின் போது நடைபெறும் திருவாசகக் காட்சியில் இந்த ஏடுகள் மாணிக்கவாசரின் திருக்கரங்களில் வைத்து பூசிக்கப்படுகின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆன்ம நாதரின் அருட்பெயர்கள்

சீரார் பெருந்துறையில் சிவபெருமான் அருவ வடிவில் அமைந்துள்ளான். அவன் ஒருருவம் ஒருநாமம் இல்லாதவன். என்றாலும் ஆயிரமாயிரம் பெயர்களால் துதிக்கப்படுகிறான். அவற்றில் சிறப்புடைய பெயர்கள் பதினெட்டைத் தொகுத்து அளித்துள்ளனர். இதில் ஒன்றை எக்காலமும் செபித்தும் மனதில் சிந்தித்தும் வந்தால் வாழ்வில் சிறப்பும் மனதில் அமைதியும் உண்டாகும். இவற்றை அறிந்து மகிழலாம்.

1. ஆன்மநாதர்

அண்ட சராசரங்களிலுள்ள சகல ஜீவராசிகளைத் தன் அங்கங்களாக உடைய விராட் புருஷனுக்கும் மூலமாக இருப்பதாலும், ஆன்மாக்களால் அறியப்பட வேண்டிய தலைவன் என்பதாலும் ஆன்மநாதர் என்றழைக்கப்படுகின்றார்.

2. பரமசுவாமி

திருப்பெருந்துறையில் வசிக்கும் 300 அந்தணர் களுக்கு நடுவே பெருமான் தோன்றினார். அவர்கள் அவருடைய பெயரைக் கேட்டபோது பரமசுவாமி என்றார். அவரே சொன்ன பெயராதலின் அது அதிகச் சிறப்புப் பெறுகிறது. மேலும் அனைத்து தெய்வங்களுக்கும் மேலாக இருப்பதாலும் பரமசுவாமி எனப்படுகிறார்

3. திரிமூர்த்திதேசிகன்

ஆதியில் பெருமான் மும்மூர்த்திகளுக்கு இத்தலத்தில் மந்திரோபதேசம் செய்ததால் மும்மூர்த்தி தேசிகன் என்றழைக்கப்படுகிறார்

4. சதுர்வேத புரசேர்

யுகத்தின் தொடக்கத்தில் பிரம்ம தேவனுக்கு ஆன்மநாதர் நான்கு வேதங்களை உபதேசித்து படைப்புத் தொழிலைச் செய்யுமாறு கூறியதால் இது சதுர்வேதபுரம் என்றும் இங்கு வீற்றிருந்து அருள்புரிவதால் சதுர் வேதபுரீசர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

அந்தணச் சிறுவர்களுக்கு வேதத்தை விளக்கிப் பயிற்றுவித்ததாலும் சதுர்வேதபுரீசர் என்று பெயர் பெற்றார்.

5. சிவயோக வனாதீசர்

சிவயோக வனத்தின் தலைவனாகவும். யோகியர் களுக்குச் சிவயோகம் கைகூடி நிட்டையில் நிலைபெற்று பேரின்பத்தில் திளைக்கச் செய்வதாலும் சிவயோக வனாதீசனாகப் பெருமான் என்று குறிக்கப்படுகிறார்.

6. குந்த வனேசர்

குருந்த மரத்தின் கீழ் வீற்றிருப்பதாலும் தானே குருந்த மரமாக விளங்குவதாலும் குருந்தவனேசர் என்றழைக்கப்படுகிறார்.

7. சிவக்ஷேத்ர நாதர்

பாண்டிய மன்னனிடம் இது தங்களுக்குரிய நிலம் என்று கூறி முன்னூற்றுவரின் நிலத்தை மீட்டு உரிமையை அளித்ததால் இப்பெயர் பெற்றார்.

8. சந்நவனேசர்

சூரியன் ஒளிக்கதிர்கள் நுழையாதபடி அடர்த்தியாக மரக்கூட்டங்கள் நிறைந்த வனமாக இருந்ததால் பெருந்துறை சந்நவனம் எனப்பட்டது. அதனிடையே நீங்காது உறைவதால் சந்நவனேசுவரர் என்று அழைக்கப்படுகிறார்.

9. ஜனவந்நாதர்

பஞ்ச கிருத்தியங்களைச் செய்யும் மூர்த்திகளுக்கு ஜனவான் என்று பெயர் அத்தொழிலைச் செயல்பட வைப் பதுடன் அவர்களுக்குத் தலைவனாகவும் இருப்பதால் ஜனவந்நாதராகப் பெருமான் விளங்குகிறார்.

10. மாயாபுரேசர்

இறைவன் தனது திருவுருவம் இன்னதென்று விளங்காது நின்று அருள்புரிவதால் இத்தலம் மாயாபுரம் என்றும் அதன் தலைவனாக இருப்பதால் மாயாபுரேசர் என்றும் அழைக்கப்படுகின்றார். மகாமாயையான சக்தியின் வடிவமாக இருப்பதாலும் இத்தலம் மாயாபுரி என்று அழைக்கப்படுகிறது.

11. விப்ரநாதன்

பாண்டியனிடத்தில் முன்னூறு அந்தணர்களுக்குத் தானே தலைவன் என்றுரைத்ததாலும் பழைய நிலையை எடுத்துரைத்து அவர்கள் உரிமையை மீட்டுக் கொடுத்தாலும் விப்ரநாதன் என்று அழைக்கப்படுகிறார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

12. சப்தநாதர் (சப்தம் – வேதம்)

ஒளிவடிவான வேதங்களை வாய்மொழியாக ஆதியில் பிரம்ம தேவனுக்கு அருளிச்செய்ததாலும் பின்நாளில் இங்கு மறைச் சிறுவர்களுக்கு வேதத்தைப் பயிற்றுவித்த தாலும் சப்தநாதர் என்றழைக்கப்படுகிறார்.

13. ப்ருகத் தீர்த்தேசுவரர் (பெருந்துறையான்)

பாண்டிய மன்னனிடம் நிலத்தின் உரிமையை நிலைநாட்ட அடையாளம் காட்டி அங்கு வெட்டிய இடங்களில் எல்லாம் நீர்வரும்படிச் செய்து 66 கோடி தீர்த்தங்களை இங்கு வரும்படிச் செய்தார். அத்துடன் இத்தலம் பெரிய தீர்த்த புரியாக விளங்குவதால் இப்பெயர் பெற்றார்.

14. திரிசதைக்கர் (முன்னூற்றொருவர்)

முன்னூற்று அந்தணரில் ஒருவனாக இருப்பதால் இப்பெயர் பெற்றார். (திரிசதை – முன்னூறு)

15. அசுவநாதர்

மணிவாசகர் பொருட்டு குதிரைச் சேவனாக எழுந்தருளியதாலும் குதிரைகளைப் பஞ்சகதிகளில் நடத்தி அசுவ இலக்கணங்களைக் குறித்து விவரித் தாலும் அசுவநாதர் என்றழைக்கப்படுகிறார்.

16. சிவபுரபதி

சிவத்தை விரும்புபவர்கள் உறையும் பதியாதலின் தலம் சிவபுரமென்றும் அதன் தலைவன் சிவபுரபதி என்றும் போற்றப்படுகின்றனர்.

17. மகாதேவன்

எல்லா மூர்த்திகளுக்கும் தேவர்களுக்கும் தலைவனாக இருப்பதால் மகாதேவன் என்றழைக்கப் படுகிறார்.

18. திரிஜகத்குரு

மூன்று உலகிலுள்ள எல்லாபிரஜைகளுக்கும் குரு வாக விளங்குவதால் பெருமான் திரிஜகத் குருவாக விளங்குகிறார்.

இந்த பதினெட்டு பெயர்களையும் கூறித் துதிப் பவர்கள் வாழ்வில் வெற்றிபெற்று சகல இகபரசுகத்தை அடைவதால். இவை மந்திர மொழிகளாகும்.

மாயாபுரி

பாரததேசத்தில் முக்திதரும் தலங்கள் என்று அவந்திகா, மாயா, மதுரா, காசி, காஞ்சி, அயோத்தி, துவாரகை ஆகிய ஏழு தலங்களைக் குறிக்கின்றனர். இவை மோட்சபுரிகள் என்று அழைக்கப்பட்டு சங்கல்பங்களிலும் பூஜைகளிலும் சிறப்பிக்கப்படுகின்றன. மாயா என்பது இறைவனின் சக்தி. திருப்பெருந்துறையில் சக்தி பிம்பம் நிறுவப்பட்டுள்ளதால் அதுவே மாயாபுரி எனக்கொள்ளலாம். நடைமுறையில் ஹரித்துவாரை மாயாபுரி என்று அழைக்கிறோம். தனது தீர்த்தச் சிறப்பாலும் மும்மூர்த்திகள் போற்றிய தலச் சிறப்பாலும் சக்தியின் அருவச் சிறப்பாலும் மாயாபுரி என்பது பெருந்துறையே என்பது சான்றோர் கருத்தாகும்.

ஜலப்ரதிஷ்டை

ஆலயங்களில் மூல மூர்த்திகளுக்குக் கீழே யந்திரஸ்தாபனமும், பீடத்தோடு இணையுமிடத்தில் அஷ்டபந்தனமும் செய்யப்படும். குடமுழுக்கு விழாவின் முதன்மை நிகழ்ச்சி அஷ்டபந்தனம் சாற்றுவதேயாகும். ஆவுடையார் கோயிலில் எழுந்தருளியுள்ள சுவாமியின் பீடம் அம்பிகை பாதங்கள் ஆகியவற்றிற்கு அஷ்டபந்தனம் சாற்றுவதில்லை. ஜலத்தாலேயே மந்திரப் பூர்வமாகப் பிரதிஷ்டைகள் நடைபெறுகின்றன.

சிவபுரத்தரசு

சிவபெருமானுக்குரிய மூலஸ்தானம் ஆவுடையார் கோயிலேயாகும். அவருடைய நடனசபை சிதம்பரமாகவும் அரசனாகக் கொலு வீற்றிருக்கும் ராஜசபை திருவாரூராகவும், திருவிளையாடல் ஆடி மகிழும் தலம் மதுரையாகவும் அடியவர்களுக்கு முக்தியளிக்கும் தலமாக காசி நகரும் உள்ளன. மற்ற தலங்கள் எல்லாம் அவர் தோன்றி அன்பர் களுக்கு அருள்புரியும் தலங்களாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பேசுதற்கினிய பெருந்துறையின் பெயர்கள்

கயிலையில் பிறக்கமுத்தி, காசியில் இறக்க முக்தி, தில்லையை தரிசிக்க முக்தி, திருவண்ணாமலையை நினைக்க முக்தி என்று முக்திதரும் தலங்களை வரிசைப்படுத்திக் கூறுகின்றனர். அவற்றைப் போல நினைத்ததும் முக்திதரும் தலமாக பெருந்துறை கூறப்படுகிறது. அப்பெருமை மிகு பெருந்துறையின் சிறப்புப் பெயர்களை சிந்தித்து மகிழலாம்.

திருப்பெருந்துறை வடமொழிப் புராணம் பதினாறு பெயர்களை "சோடச நாமங்கள்" என்று சிறப்பித்துக் கூறுகின்றன. இதனை வரிசைப் படுத்திக் கூறும் தமிழ்ப்பாடல்,

ஆதிகயிலை, தென்கயிலை, அநாதிமூர்த்தம், பூகயிலை
சோதிவனம், சீர்ஞானபுரம். யோகபீடம் யோகவனம்,
தீதுதீர் திரிமூர்த்தி, பராசக்தி, பவித்திரமணி, நாலாம்
வேத, சிவ, உபதேசபுரம், குருந்தவனமாம் பெருந்துறையே – ரமணன்.

இவற்றின் விளக்கத்தைச் சுருக்கமாகக் காணலாம்.

1. ஆதிகயிலை

வடகயிலை தோன்றுவதற்கு முன்பே சிவபெருமான் குருந்தவடிவில் எழுந்தருளி அருள்பாலித்ததால் இது ஆதிகயிலை எனப்பட்டது. இங்கு அருளுபதேசம் செய்த பின்னரே வடமலையான கயிலைக்குப் பெருமான் எழுந்தருளினான் என்பர்.

2. தென்கயிலை

இப்போதுள்ள கயிலைக்கு தென்திசையில் இருப்ப தால் தென்கயிலை எனப்பட்டது. தென், தென்னன் என்ப தற்கு யோகம் என்பது பொருள் பெருமான் யோகநாய கராக வீற்றிருப்பதாலும் தென்கயிலை எனப்பட்டது. இது யோகபுரியாகும்.

3 அநாதிமூர்த்தம்

தனக்குமுன் யாரும் இல்லாத பெருமான் ஜோதிவடிவில் காட்சியளித்ததுடன் குருந்தமர வடிவி லும் காட்சியளித்ததால் அநாதிமூர்த்தம் எனப்பட்டது.

4. பூகயிலாயம்

பிரஞ்சத்தில், இமய கயிலாயம், மந்திரமலை கயிலாயம், எனப்பல கயிலை மலைகளும் சிவத்தலங் களும் உள்ளன. இவற்றில் பூமண்டலத்தில் விளங்கும் ஆதிபுரி என்பதால் இத்தலம் பூலோக கயிலாயம் எனப்பட்டது.

5. சோதிவனம்

சிவபெருமான் ஆதியில் சோதிவடிவாகக் காட்சி யளித்த தலம் ஆதலின் இப்பெயர் பெற்றது. திருவாசகத் தில் பல இடங்களில் பெருமானின் சோதிவடிவம் புகழப்பட் டுள்ளது. இங்குள்ள அம்மையின் திருவடிகளும் பதுமரா கச் சோதி சுடர்விடுவதாகத் தலபுராணத்தில் குறிக்கப் பட்டுள்ளது.

6. சிவ ஞானபுரம்

அன்பர்களுக்குச் சிவஞானத்தை வழங்கும் தலமாத் லின் சிவஞானபுரம் ஆனது

7. யோகபீடம்

யோகபீடத்தில் அம்பிகை அமர்ந்து அருள்பாலிப் பதாலும், சிவயோகம் அருளும் தலமாக இருப்பதாலும் இப்பெயர்பெற்றது.

8. யோகவனம்

சாதகர்கள் கூடிநின்று யோகம் புரிவதற்குரிய இடமாகவும், தவயோகங்கள் சித்திக்கச் செய்யுமிடமாக இருப்பதால் இப்பெயர் பெற்றது.

9. திரிமூர்த்திபுரம்

மும்மூர்த்திகள் வழிபட்டுப் பேறுபெற்றதால் இப்பெயர் பெற்றது மும்மூர்த்திகளும் மூன்று விதமான மரங்களின் அடியில் அமர்ந்து தவம்செய்ததுடன் மூன்று தீர்த்தங் களை அமைந்துள்ளனர். கொன்றை மரத்தடியில் பிரமனும் அரச மரத்தின் கீழ் திருமாலும் மகிழ மரத்தின் கீழ் உருத்திரரும் தவமியற்றியுள்ளனர். அவர்களுக்குச் சிவபெருமான் ஞான உபதேசம் செய்துள்ளார்.

10. பராசக்திபுரம்

சிவனின் திருமேனியாக இருப்பவள். பராசக்தி, அவளே திருப்பெருந்துறை எனும் திருத்தலமாக விளங்குகிறார். அவளுடைய யோகபீடம் இது எனவே

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இத்தலம் பராசக்திபுரம் எனப்பட்டது. அவள் பாலாவாக இங்கே யோகம் புரிகிறாா். அதனால் தென்பாலை (தென் யோகம்; பாலை – பராசக்தி) எனப்பட்டது. திருவாச கத்துள் மணிவாசகர் தென்பாலை என்று இத்தலத்தைப் போற்றுகிறாா். (திருவேசறவு என்னும் பதிகத்தின் ஏழாம் பாடல் தென்பாலைத் திருப்பெருந்துறை என்று குறிக்கிறது.)

11. பவித்திர மாணிக்கபுரம்

புனிதத்துள் புனிதம் வாய்ந்த தலம் ஆதலின் இப்பெயர்பெற்றது. கல்வெட்டுக்களில் பவுத்திரமாணிக்கச் சதுர்வேதமங்கலம் என்ற பெயரால் குறிக்கப்படுகிறது.

12. சதுர்வேதமங்கலம்

இறைவன் தானே வேதம் கற்பிப்போனாய் இருந்து மறையவர் சிறுவர்களுக்கு நான்கு வேதங்களையும் உபதேசித்த காரணத்தால் இப்பெயர்பெற்றது. இது வேதம் தோன்றிய தலம் என்று புராணம் கூறுகிறது. ஆதிப் பிரமனுக்கு வேதம் உபதேசிக்கப்பட்ட தலம் இதுவே.

13. சிவபுரம்

திருவாசகத்தில் திண்போர் விடையான் சிவபுரத்தான் சிவபுரத்தரசே, திருப்பெருந்துறையுறை சிவபெருமானே, தென்பெருந்துறையாய், சிவபெருமானே, சீருடை சிவபுரத்தரசே, என்று திருப்பெருந்துறை சிவபுரம் என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது. இதற்கு மங்களத்தை அருளும் தலம், சிவனுடைய தலம் என்பது பொருளாகும்.

14. உபதேசபுரம்

அவரவர் பக்குவங்களுக்கேற்ப சிவபெருமான் அருளாசிரியராக தோன்றி உபதேசித்த இடமாதலின் இப்பெயர் பெற்றது. பிரம்மனுக்கு பிரம்மமந்திரத்தையும், திருமாலுக்குப் பிரணவ பஞ்சாட்சரத்தையும் உருத்திரர்களுக்கு இரகசிய பஞ்சாட்சரத்தையும் மாணிக்கவாசகருக்கு பிரணவத்தையும் உபதேசித்தது இங்கு எண்ணத்தக்கதாகும்.

15. குருந்தவனம்

அனேக மரங்களுக்கு நடுவில் இறைவன் குருந்த மரமாக எழுந்தருளியிருப்பதால் குருந்தவனம் எனப் பட்டது.

16. பெருந்துறை

சிவாநந்தம் என்ற பேராற்றில் தோய்ந்து ஆடுதற் குரிய துறையாக இருத்தலின் பெருந்துறை எனப்பட்டது. வெட்டிய இடங்களில் எல்லாம் நீர் பெருகிவரச்செய்து நீர் வளமுள்ள பூமியாக இறைவன் அடையாளம் காட்டியதாலும் இப்பெயர்பெற்றது. வடமொழியில் ப்ருகத் தீர்த்தபுரம் என்றழைக்கப்படுகிறது.

இவைதவிர சன்னவனம், சிவக்ஷேத்திரம், மாயாபுரி, ஆறுசபைத்தலம் முதலிய பெயர்களும் உள்ளன. இவையாவும் இறைவனுக்குரிய பெயர்களைப் போலவே மகிமை வாய்ந்தவையாகும். இவற்றை உச்சரிப்பதால் இகபரசுகம் கிடைக்கும்.

நந்தம்பாடி

"நந்தம்பாடியில் நான் மறையோனாய் , அந்தமில் ஆரியனாய் அமர்ந்தருளியும் என்பது திருவாசகம் சிவபெருமான் நான்மறை பயிற்றும் ஆசிரியனாய் எழுந்தருளி இங்குள்ள மறையவர் சிறுவர்களுக்கு வேதங்களைப் போதித்து வந்தான் என்பதை அறிவோம். பாடி என்பது வீரர்கள் படையுடன் இறங்குமிடம். மும் மலப் பகையை மாய்க்கும் வீரனாக அடியவர்கள் சேனையுடன் அவர்களுக்கு ஆன்ம குருவாகப் பெருமான் எழுந்தருளியிருக்குமிடமென்பதால் திருப்பெருந்துறை நம் தம்பாடி (நத்தம்பாடி) எனப்பெயர் பெற்றது.

பிரம்மா, விஷ்ணு, உருத்திரா் ஆகிய மூவரும் ஆதிமூல சிவபெருமானை வழிபடுகின்றனர். அவர்களுடைய அடியவர்களும் திருக்கூட்டத்தினரும் அவர்களுடன் கூடிநின்று வழிபடுகின்றனர். பிரம்மா வழிவந்த பிரம்மஞானிகள் பெருமானை அருவநிலையில் பரப்பிரம்மம் என்று போற்றுகின்றனர். விஷ்ணு பெருமானின் திருவடியைக் காண்பதிலேயே இச்சை கொண்டுள்ளார். அதனால் அவன் அவருக்குத் திருவடிகளைக் காட்டி அருள்புரிந்தான். உருத்திர கணத்தினர் பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபடுவதையே விரும்புகின்றனர் அவர்கள் மனம் மகிழச் சிவபெருமான் லிங்கமேனியாக காட்சியளிக்கிறார்.

இந்த மூன்று நிலைகளிலும் ஆவுடையார் கோயிலில் சிவ பெருமான் அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றான். கருவறையில் பிரம்மா வழிபடும். அருவநிலையிலும், அம்பிகை அம்சமான திருமால் வழிபடும் நிலையில் யோகாம்பிகை சந்நிதியில் திருவடிகளாகவும், வடக்கூரில் உருத்திரர்களுக்கு அருள்புரியும் கயிலாயநாதர் எனும் மகாலிங்கமாகவும் விளங்குகிறான். இதனால் அவனுக்குத் திரிமூர்த்தி என்றும் ஆவுடையார் கோயிலுக்குத் திருமூர்த்திபுரம் என்ற பெயரும் வழங்குகின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

முன்னூற்றுவர்

தெய்வங்களை (ஆகம, வேத. வழக்கங்களின்படி) முறையுடன் வழிபட இறைவனால் படைக்கப்பட்ட குழு வினர் தெய்வத் தலங்களில் பல்வேறு எண்ணிக்கையில் பல்வேறு பெயர்களுடன் விளங்குகின்றனர்.

தில்லை மூவாயிரவர், கடந்தை ஆறாயிரவர், செந்தில் த்ரிசகஸ்ரர், திருவீழிமிழலை ஐநூற் றுவர் என்று பல தலங்களில் குழுக்கள் சிவாலயங்களைப் பரிபாலித்து வருகின்றனர். இதுபோன்று ஆவுடையார் கோயிலில் முன்னூற்றுவர் என்னும் அந்தணர் வகுப்பார் பூஜை செய்து வருகின்றனர். இவர்களைத் திரிசதர் என்று அழைப்பர். இவர்கள் பிரம்ம தேவனின் வழிவந்தவர்கள் என்று புரணாம் கூறுகிறது.

பிரம்ம தேவன் குருந்த வனத்தில் தவம் செய்து சத்திய லோகத்தையும் படைப்பாற்றலையும் பெற்றான், அவன் தன்னுலகத்திலிருந்து அடிக்கடி இங்கே வந்து பூஜை செய்து விட்டுத் திரும்புவது வழக்கம். ஒரு சமயம் அவன் இங்கு பூஜை செய்து கொண்டிருந்தபோது சிவ பெருமானுக்கு இனி நித்திய பூஜைகளை முறைப்படி செய்ய வேண்டுமென்று விரும்பினான்.

அக்னி தீர்த்தத்தில் மூழ்கி ஆத்மேசனை வணங்கி அன்னம், நெய், சமித்துக்களால் மந்திரத்துடன் ஆகுதி செய்து. பெரிய ஹோமம் செய்தான், ஹோமகுண்டத் திலிருந்து மூன்று அக்னிகளும் சேர்ந்ததுபோல் ஜ்வலிக் கும் ஏழு வயது குமரன் தோன்றினான்,

பிரம்ம தேவன் அக்குமாரனை அக்னி தீர்த்தத்தில் மூழ்கச்செய்து ஜாதகர்மா முதலிய வைதீக முறைகளை செய்தான். அவனுக்கு அக்னிவேசர் என்றும் ரௌஷா யணரென்றும் பெயர் சூட்டினான். அவனிடம், குழந்தாய் நம் குலதெய்வமான ஆன்மேசரைப் பூஜித்து வருக என்று கூறி அதற்கான விதிமுறைகளை விளக்கினான்.

அக்னிவேசர் ஆன்மேசரை எட்டு சுலோகங்களாலும், யோகதேவியை எட்டு சுலோகங்களாலும் வணங்கி போற் றினார். அன்று முதல் அவர் தினமும் சிறப்பாக பூஜை செய்து வந்தார். அந்த பூஜாபலத்தால் முன்னிலும் பிரகா சமாக விளங்கினார்.

பிரம்மதேவன் குருந்தவனம் வந்த போது அக்னி வேசரின் பூஜைகளையும் சிரத்தையையும் கண்டு மகிழ்ந் தான். அவனுக்கு துணைபுரிய உதவியாளர் களைத் தோற்றுவிக்க விரும்பினான் பதினோரு குண்டங்களை அமைந்து பெரிய வேள்வியைச் செய்தான். வேள்வியின் முடிவில் குண்டங்களிலிருந்து பதினோரு குமாரர்கள் தோன்றினார்.

அவர்களையும் அக்னிதீர்த்தத்தில் மூழ்க வைத்து ஜாதகாதி கருமங்களை செய்தான். அவர்களுக்கு முன்னேதோன்றிப் பிரசித்தி பெற்றிருந்த முனிவர்களின் பெயர்களான

1. வத்சன் 2. குத்சன் 3. ஆங்கீரசன் 4. கர்கன்
5. முத்கன் 6. அத்ரி 7. ஹரிதன் 8. ப்ருகு
9. பாரத்வாஜன் 10. கபிலன் 11. கண்ணுவன்

என்ற பெயர்களை இவர்களுக்கும் சூட்டினான்.

இரௌக்ஷாயணர் இவர்களுக்காக ஆக்னி வைச்யம் என்ற சூத்திரத்தை உண்டாக்கி அளித்தார் அதன்படி அனைவரும் பூஜைகளைச் செய்து வந்தனர். அவர்கள் நித்திய பிரம்மசர்யத்துடன் மகாதேஜஸ்சுடன் விளங்கினர்.

பிரம்மன் மீண்டும் இங்கு வந்தபோது அவர்களிடம் நீங்கள் கிருகஸ்தன்; வானப்பிரஸ்தன்; சந்நியாசி என்ற நிலைகளையும் அடைந்து ஆன்மநாதரை பூசிக்க வேண்டும். கலியில் கிருகஸ்தராக இருப்பதே நலம் என்றான்.

பிரம்மனே சப்தரிஷிகளில் ஒருவரான அத்திரி முனிவரின் புதல்வியான கலாவதி என்பவளை அக்னி வேசருக்குத் திருமணம் செய்து வைத்தார். அவர்கள் இல்லறம் நடத்திவந்ததுடன் குருந்தவன நாதரைச் சிறப்புடன் பூசித்து வந்தனர். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தனர். மூத்தவனுக்குச் சிவசுவாமி என்றும் இளையவனுக்கு ரோமசன் என்றும் பெயர் சூட்டினார்.

இந்தப் பிள்ளைகளும், யாககுண்டத்தில் தோன்றிய பதினோரு குமாரர்களும் காசிபர் முதலான முனிவர் களின் வழிவந்தவர்களின் பெண்களை மணந்தனர். அவர்கள் யாவரும் பேரன் பேத்திகள் வீடுவாசல்களுடன் நெடுங்காலம் சிறப்புடன் வாழ்ந்துவந்தனர். அக்னி வேசரான ரௌஷாயனர் அவர்களுக்குத் தலைவனாக நட்சத்திரக் கூட்டங்களிடையே சந்திரன் போன்று விளங் கினார். அவர்கள் யாவரும் குருந்தடி மூலத்தையும் அம்பிகையையும் பூசித்துக் கொண்டு வளமுடனிருந் தனர். இவர்கள் முன்னூறு குடும்பமாக இருந்ததால் முன்னூற் றுவர் என்றழைக்கப்பட்டனர். வம்சம் தழைத்தோங்கியது அவர்கள் இறைவழிபாட்டைச் சிறப்புடன் செய்துவந்தனர்.

ஒரு சமயம் இப்பகுதி அடர்ந்தகாடான போது வேடர்கள் இவ்வனத்தைக் கைப்பற்றியதுடன் பூசைபுரிந்து வந்த முன்னூற்றுவர் நிலங்களையும் அபகரித்துக்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கொண்டனர். அவர்களுக்கு அஞ்சிய முன்னூற்றுவர்கள் இறை பூசை செய்ய இயலாமல் மறைந்தும் பரதேசம் சென்றும் வாழவேண்டியதாயிற்று.

....

ஒரு சமயம் புரூரவ சக்ரவர்த்தி இத்தலத்தின் மகிமைகளைக் கேட்டு இங்குவந்தான். வேடர்களை விரட்டினான். முந்நூற்றுவர்களைத் தேடிப்பிடித்து அழைத்து வந்து மீண்டும் குடியேற்றினான் அவர்களுக்கு வேண்டிய வசதிகள் அனைத்தையும் செய்து கொடுத்தான் நிலங்களுக்குப் பாசன வசதிகளைச் செய்தளித்தான். அவர்களுக்குச் சுவர்னதானம் கோதானம் முதலியவற்றை அளித்தான். மகரசங்க ராந்தியில் இந்த தானங்களைச் செய்தான். முன்னூறு வீடுகள் கட்டித்தந்தான். அவர்களின் புனிதத்தன்மையை விளக்கி நிற்கும் வகையில் அதற்கு பௌத்ர மாணிக்க சதுர்வேதபுரம் என்று பெயர் சூட்டினான்.

....

ஒரு சமயம் வெள்ளாற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. அதனால் வீடுகள் அழிந்து எல்லைகளும் அழிந்துவிட்டன. அப்போது அங்கு வந்த அகத்திய முனிவர் தம் ஞான திருஷ்டியால் நடந்ததை அறிந்து மீண்டும் எல்லைக்கற்களை நட்டார். அவர்களுக்கு அளவைப் பத்திரங்களையும் அளித்தார். அவர்கள் முன்னிலும் சிறப்புடன் பூஜை செய்து வந்தனர்.

....

ஒரு சமயம் வத்ஸபாண்டியன் என்பவன் மதுரையை ஆண்டு வந்தான். அவனுக்கு அதிசாமார்த்தியமுள்ள மந்திரி ஒருவன் இருந்தான் அவன் பெயர் லுண்டாக்கன் என்பதாகும். அவர் மிகுந்த சுயநலத்துடன் கெட்ட புத்தியுள்ளவனாகவும் பிராமணர்களுக்குப் பகைவனா கவும் இருந்தான்.

அவன் சிவபுரமான ஆவுடையார் கோயிலின் சிறப்புக்களைக் கேள்விப்பட்டு அதைத்தானே அடைய வேண்டும் என்று விரும்பினான்.

அவன் எல்லோரிடமும் ஆவுடையார் கோயிலில் உள்ள நிலங்களும் கோயிலும் தங்களுக்கு சொந்த மானது. தந்திரமாக ‑பிராமணர்கள் அதை அபகரித்து விட்டார்கள் என்று கூறிவந்தான். அதை எல்லோரும் நம்பத் தொடங்கினர். ஒருநாள் அவன் ஆவுடையார் கோயிலுக்கு வந்து அங்கிருந்த பிராமணர்களை அடித்து விரட்டிவிட்டான். அவர்களுடைய வீடுகளில் தமது ஆட்களைக் குடியேற்றினான். அவர்களிடமிருந்து ஆவணங்களைப் பறித்து அழித்துவிட்டான். எதிர்த்தவர் களை அடித்து விரட்டினான். அவனுடைய ஆட்கள் பழைய வேளாண்மையினரை துரத்திவிட்டு தாங்களே நிலங்களில் பயிரிடத் தொடங்கினர்.

அவனுக்கு அஞ்சிய முன்னூற்றுவர்களில் பலர் அயலூருக்கு சென்றுவிட்டனர். சிலர் அருகிலுள்ள காடுகளில் தங்கி அவ்வப்போது ஆன்மேசரையும் யோக நாயகியையும் பூசித்து வந்தனர். அவர்களுடைய துன்பங்களைப் போக்க விரும்பிய ஆன்மநாதரான சிவ பெருமான் ஒரு வயோதிக அந்தணனாக வடிவம் கொண்டார். விபூதி உருத்திராட்சங்களை அணிந்து மூங்கில் தடி ஏந்தியவராக அவர்களிடையே தோன் றினார்

அவருடைய தோற்றத்தைக் கண்டு வணங்கிய அவர்கள் ஆசனம் அளித்து உபசரித்தனர். "ஐயனே", தாங்கள் யார் எங்கிருந்து வருகின்றீர்கள் என்று கேட்டனர்.

அவர் அன்பர்களே, நான் இதே ஊரில் ரௌஷாயண கோத்திரத்தில் தோன்றியவன். நீண்ட காலத்திற்கு முன்பாக தீர்த்தயாத்திரை சென்றேன். பாரத தேசம் முழுவதும் யாத்திரை செய்தபின் நெடுங்காலம் சிதம்பரத்தில் வசித்திருந்தேன். மீண்டும் பிறந்த ஊரைப் பார்க்க வேண்டுமென்று இப்போது வந்தேன்.

எனது பெயர் "பரமசுவாமி". இந்த ஊரின் எல்லா இடங்களையும் நான் அறிவேன். இப்போது லூண்டாக் கன் உங்களுக்குச் செய்த அநியாயத்தை அறிந்தேன். என்னிடம் இதற்கான பூர்வ ஆதாரமான பட்டயங்கள் இருக்கின்றன. உங்கள் நிலங்களையும் வீடுகளையும் மீட்டுத்தருவேன் கவலைப்படாதீர்கள் என்றார்.

அதைகேட்டு அவர்கள் விரக்தியுடன் சிரித்தனர். அன்பரே நீங்கள் சொன்னது யாவும் சரியே என்றாலும் நீர் வயது மூத்து தள்ளாதவராக இருக்கின்றீர். அவன் இளவயதுடையவன், தீமைக்கு அஞ்சாதவன். அவனுடைய ஆட்களும் அப்படியே. அவர்கள் பிறரை அடித்து உதைத்து அவர்கள் படும் வேதனையில் மகிழ்பவர்கள். முன்பு நாங்கள் அவனிடம் பட்ட அடி உதைகளை நினைத்தாலும் பயமாக இருக்கிறது. அவனு டைய இடம் யமலோகத்திற்கு ஒப்பானது என்றனர்

அவர்களிடம் பரமசாமி, தர்மம் உள்ள இடம் ஜெயிக்கும் நீங்கள் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை. என்னுடன் மதுரைக்கு வந்தால் போதுமென்றார்

முன்னூற்றுவர், ஐயனே அரசரிடம் சென்றால் ஆட்சியில், ஆவணத்தில், சாட்சியில் என்று உரிமைப்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பத்திரங்களைக் கேட்பான். ஆட்சியில் (அனுபவத்தில் வருவதில்) என்றால் நிலங்கள் அவனிடம் இப்போது உள்ளன. ஆவணத்தில் என்றால் எங்கள் ஆவணங் களை அடித்து உதைத்துப் பறித்து அழித்துவிட்டான். ஆட்சி அதிகாரத்திலிருப்பதால் மூல ஆவணங்களையும் அழித்துவிட்டான். சாட்சியில் (சாட்சிகள் மூலம்) என்றால் அவனுக்கு அஞ்சி எவரும் சாட்சி சொல்லமாட்டார்கள் இப்படி எல்லாவழிகளும் அடைபட்டுவிட்டபோது ஜெயிப் பது இயலாது என்றனர்.

பரமசாமி, அன்பர்களே அஞ்சவேண்டாம் என்னுடன் வாருங்கள் மதுரைக்குச் செல்வோம் என்றார் முன்னூற்றுவர்கள் நம்மால் ஆவது எதுவுமில்லை. இவர் மூலம் சென்று பார்ப்போம் என்று மனந்தெளிந்தனர். மதுரை சென்ற எல்லோரும் பாண்டியனின் அரசவையை அடைந்தனர். அங்கு வீதிகளில் பெருங்கூச்சல் இட்டு பாண்டிய நாட்டு மக்களுக்குத் தமது துயரத்தைக் கூறினர்.

அந்த ஒலியைக் கேட்ட பாண்டியன் அவர்களை உள்ளே அழைத்து. உங்கள் வரவிற்கான காரணத்தைக் கூறுங்கள் என்றான். பரமசாமி அரசனிடம், அரசே நான் உமது தர்மம் தவறாத முன்னோர்களை அறிவேன்.

நான் சிவபுரத்திலிருப்பவன் (ஆவுடையார் கோயில்) அதுவே ஆதி கைலாசம், முதலான அனேக பெயர்களைக் கொண்டது. அத்தலம் மும்மூர்த்திகளால் தொழப்பட்டது. இங்கு பிரமனால் உண்டாக்கப்பட்ட ரௌஷாயனார் வழிவந்த முன்னூற்றுவரில் ஒருவன் நான். எங்களுக்குப் புரூரவ சக்ரவர்த்தி அளித்த முன்னூறு வீடுகளையும், நிலங்களையும் உமது மந்திரி அபகரித்துக் கொண்டான். என்னிடம் மூலசாசனப் பத்திரங்கள் உள்ளன. நான் வெளியூர் சென்றிருந்ததால் உடனடியாக வந்து உம்மிடம் தெரிவிக்க வில்லை. எமது சாசனங்களை உன்னிடம் கொடுக்கிறேன் பரிசீலித்துப்பார் எமக்கு நீதி வழங்குக என்றார்.

அரசன் கோபித்து மந்திரியை அழைத்தான். இது என்ன என்றான்? அமைச்சன் அரசே இந்த அந்தணன் பொய் கூறுகிறான். எனது முன்னோர்கள் அரச பரம்பரைக்குச் செய்த உதவிகளுக்காக அவை இனாமா கவும் பரிசாகவும் தரப்பட்டவை. அதற்கான சாசன, செப்பேடுகள் இதோ என்று பலவற்றைக் காட்டினான்.

அரசன் இருவரையும் நோக்கினான். இப்பட்டயங்கள் எனக்கு பெருத்த சந்தேகத்தை எழுப்புகின்றன. இவை இருக்கட்டும் நீங்கள் இருவரும் அந்த நிலத்தில் நன்கு பழகி பயிரிட்டவர்கள் என்றால் அதன் தன்மைகளைப் பற்றிச் சொல்லுங்கள் என்றான்.

"பரமசாமி", அரசே எமது பூமியில் ஒரு வெட்டு வெட்டினாலே தண்ணீர் வருமென்றார். அதைகேட்டு உடன்வந்தவர்கள் திடுக்கிட்டனர். இந்த கிழவனுக்குப் பயித்தியமா இவனை நம்பி வந்தோமே நமது நிலத்தில் எவ்வளவு வெட்டினாலும் தண்ணீர் வருவது அரிதே. உண்மையை அறிந்தால் மேலும் அரசன் தண்டிப்பானே என்று கலங்கினார்கள். அவர்களின் உள்ளக் கருத்தை அறிந்த பரமசாமி கையமர்த்தினார்.

மந்திரி, அரசே அது வரட்டுபூமி, வெள்ளாற்றில் நீர்வந்தால் மட்டுமே பயிரிடமுடியும், அங்கே அறுபதடி வெட்டினாலும் நீர்வராது என்றான்.

பாண்டியன் எல்லோரையும் அழைத்துக்கொண்டு திருப்பெருந்துறைக்கு வந்தான். மந்திரியிடம் எந்த இடத்தைச் சோதிக்கலாம் என்றான். பரமசுவாமி, அவர்களிடம் நீங்களே ஒரு இடத்தைச் சொல்லுங்கள் என்றார். தனது மனதால் அந்த தலத்திலும் சுற்றிலும் ஒரு யோசனை தூர வட்டத்திற்குள் 66 கோடி தீர்த்தங்களை வரும்படிச் செய்தார்.

லூண்டாக்கன் ஏளனமாகச் சிரித்தான். ஈசான திக்கில் உயரமான இடத்தைக் காட்டி இந்த இடத்தில் வெட்டலாம் என்றான்.

சிவபெருமான் மண்வெட்டியால் ஓங்கி வெட்டினார். ஈரப்பதம் தெரிந்தது. மூன்றாவது வெட்டில் நீர் வெளிப் பட்டது. பாண்டியன் அதிசயமடைந்தான். அதை நம்பாத லூண்டாக்கன் பல இடங்களைக் காட்டினான். அவன் காட்டிய இடங்களிலெல்லாம் பெருமான் நீரை வெளிப் படச் செய்தார். எல்லோரும் அதிசயம் அடைந்தனர்.

அரசன் லூண்டாக்கனையும், அவனுடைய ஆட்களையும் வெளியேற்றினான். பரமசாமி சொன்ன படியே பிராமணர்களை மீண்டும் குடியமர்த்தி நிலங் களை அளித்தான். அவர்களுக்கு பொன்னும், பொருளும் அளித்து வணங்கினான்.

அவர்கள் பெரிய ரதத்தில் பரமசுவாமியை அமர்த்தி வீதி உலா வரச் செய்தனர். தங்களின் தலைவனாக ஆக்கி முன்னூற்று ஒருவராக ஏற்றனர். அவரிடம் தங்களுடனேயே தங்கியிருக்கும்படி வேண்டினர்.

அவர் அன்பர்களே! நான் உங்களுடனேயே இருப்பவன். நீங்கள் தரும் உணவால் மகிழ்பவன் உங்கள் குழந்தைகளுக்கு வேதத்தை பயிற்றுவிக்கின்றேன். எனக்கு புழுங்கலரிசி அன்னமும் பாகற்காய் குழம்பும் கீரை மசியலும் போதுமென்றார். அவர்கள் நீங்கள் தினமும் எங்களில் ஒருவர் வீட்டுக்கு என்று முறைவைத்து வந்து உணவருந்துங்கள் என்றனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அதன்படியே அவர்களுக்கு நடுவே நெடுநாள் மறையோனாய் வீற்றிருந்து மறை பயிற்றுவித்தார்.

ஒரு நாள் திடீரென்று மறைந்துவிட்டார். பிள்ளைகள் தவித்துப் பரிதவித்துவிட்டனர். எங்கு தேடியும் குருநாதரைக் காணவில்லை. அலைந்து திரிந்து தேடிய களைப்பில் உறங்கிவிட்டனர். அவர்கள் கனவில் ஆன்மேசர் தோன்றினார். குழந்தைகளே உங்களுக்கு நிலங்களை மீட்டளித்ததும் வேதம் பயிற்றுவித்ததும் நாமே. நான் விரும்பும் புழுங்கலரிசிச் சாதத்தையும், முளைக்கீரை, மசியல், பாகற்காயையும் சமைத்து எனக்குத் தினமும் நிவேதியுங்கள் என்று கூறி மறைந்தார்.

குழந்தைகள் தாங்கள் எல்லோருக்கும் ஒரே மாதிரியான கனவு தோன்றியதைக் கண்டு வியப்படைந்தனர். தங்கள் தாய் தந்தையிடம் கூறி மகிழ்ந்தனர். அன்று முதல் முன்னிலும் ஆன்மேசரை அதிக அன்புடன் பூசித்து வருகின்றனர்.

குருந்தடிமூலம், அம்பிகை சந்நிதி ஆன்மநாயகர் சந்நிதி ஆகிய மூன்றையும் இவர்கள் பூசித்து வருகின்றனர். நித்தியம் ஹோம ஜபங்களுடன் அபிஷேக ஆராதனைகளை நடத்திவருகின்றனர்.

மாணிக்கவாசகரை பீடத்திலும், வாகனங்களிலும் ஏற்றுவித்தல், இறக்குதல் இவர்கள் பணியாகும். இவர்களில் ஒருவரான சிவசாமி என்பவரே திருப்பெருந்துறையின் சிறப்புக்களை குதிரைவாங்க மந்திரியாக வந்த தென்னவன் பிரமராயன் என்றழைக்கப் படும். வாதவூரருக்கு எடுத்துக் கூறினார். அப்போதே வாதவூரருடைய மனம் அவ்வூர் இறைவனிடத்தில் லயித்து விடுகிறது. இரவுமுழுக்க விழித்திருந்து பெருமைகளைக் கேட்டுக்கொண்டே இருக்கிறார்.

விடிந்ததும் அவர் குருபிரான் சந்நிதி சென்றடைய அவரால் ஆட்கொள்ளப்படுகிறார்.

இவர்கள் கூட்டமாக பெரியோர்களைத் தரிசிக்கச் செல்லும் வேளையில் இவர்களுக்கு முன்பாக விருது எடுத்துச் செல்லுதலும் தவளசங்கம், கொம்பு, திருச்சின்னம் ஊதுதலும் நடைபெறுகின்றன.

திருவண்ணாமலை, திருவாரூர் முதலிய தலங்களில் கிரீடம் அல்லது தலைப் பாகை அணிந்து பூசிப்பது போலவே இத்தலத்திலும் முன்னூற்றுவர் (நம்பிமார்) உருத்திராட்சத் தாலான கிரீடத்தை அணிந்து பூசைசெய்யும் வழக்கம் இருந்தது. இப்போது உபதேசக் காட்சியின் போதும் கார்த்திகை மாத சுளுந்து தீபாரதனையின் போதுமட்டும் அவற்றை அணிகின்றனர்.

முந்நூற்றுவர் தோற்றம், குருந்தவனம் பெருந்துறை ஆன செய்தி, சதுர்வேதபுரம் ஆன வரலாறு உள்ளிட்ட பல தலபுராணச் செய்திகளுக்குத் திருவாசகத்தில் ஆங்காங்கே சான்றுகள் காணப்படுகின்றன. இச்சான்றுகள், "திருப்பெருந்துறைத் துதிநவமணிகள்" என்ற நூலில் மேற்கோள்களாகக் கையாளப்பட்டு விரவிக்கிடக்கின்றன. மேலும் இந்நூலின் பக்கங்கள் 66 முதல் 89 வரை இறைவன் குருநாதனாக எழுந்தருளி இத்தலத்தில் மணிவாசகருக்கு உபதேசித்த மந்திரம் யாது? என்பதும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இந்நூலாசிரியர் திருவையாறு பிரம்மஸ்ரீ வெ. இரமணன் ஆவார்.

பூஜை நடைமுறைகள்

இக்கோயிலில் முதன்மைபெற்ற நம்பியார் எனப்படும் முன்னூற்றுவர்கள் குருந்தமூலம் (ஆதிமூலஸ்தானம்) ஆன்மநாதர் சந்நிதி (திருமூலஸ்தானம்) யோகாம்பிகை சந்நிதி ஆகியவற்றைப் பூசிக்கின்றனர். ரௌக்ஷசாயண முனிவரும் பின்வந்த பரமசாமி, சிவசாமி ஆகியோர் வகுத்தளித்த நெறிகளின் படி பூஜை இவர்கள் பூசை செய்கின்றனர்.

அருள்மூலஸ்தானம் எனப்படும் மாணிக்கவாசகர் சந்நிதி, நடராசர், சொக்கவிநாயகர் முதலான சந்நிதிகளை சிவாச்சாரியர்கள் பூசித்து வருகின்றனர்.

மகுடாகமம் பாரத்வாஜ சம்ஹிதை உத்திரகாண்டம் 27வது படலத்தில் உள்ளபடி வழிபாடுகள் நடைபெறுகிறது என்கின்றனர்

மகாலிங்க ஆகாசமூர்த்திக்கு வைதீகப் பிராமணர்களான அத்தியான பட்டர்கள் பூஜைசெய்கின்றனர். வெளியிலுள்ள வீரபத்திரர்களுக்கு கிராமிய பாரம்பரிய வழிபாடுகள் கோயில் கொத்தனார்களால் நடத்தப்படுகின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருப்பெருந்துறை இலக்கியங்கள்

ஒரு தலத்தின் பெருமைகளை விளக்கும் வகையிலும் பின்வரும் சந்ததியார் உணர்ந்து வழிபட்டுப் பயன்பெறவும் பலவிதமான இலக்கியங்களைப் படைத்துள்ளனர். இவை தலபுராணங்கள் சிற்றிலக்கியங்கள் என்று பலவகைப்படுகின்றன. இவை சொற்சுவையும் பொருட்சுவையும் நிரம்பியவை. இறைவன் இறைவி புகழைப் பேசுபவை. அத்தலத்தின் பூஜை முறைகள், வழிபாட்டு நெறிகள் ஆகியவற்றை விளக்குபவை. திருப்பெருந்துறை சிவயோக ராஜதானியாக விளங்குவதால் அதன் பெருமைகளை விளக்கிக் கூறும் வகையில் பல இலக்கியங்கள் எழுந்துள்ளன.

வைப்புத்தலம்

திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத் தாண்டகத்தில் இரண்டு பாடல்களில் பெருந்துறை குறிக் கப்பட்டுள்ளது. எனவே இது வைப்புத் தலமாக போற்றப் படுகிறது.

வடமொழி மூலநூல்கள்

வியாச முனிவர் அருளிய பதினெண் புராணங்களில் ஒன்றான ஸ்காந்த புராணத்தின் ஒரு பிரிவு சனத்குமார சம்ஹிதையாகும். இதில் சிவரகஸ்யம் உத்திரகாண் டத்தில் இரண்டு காண்டங்களாக ஆதிகயிலாய மகாத் மியமும் ஆறு கண்டங்களாக மாணிக்கவாசகர் புராண மும் உள்ளன. இதுவே வடமொழியில் அமைந்த மூல புராணமாகும். பௌஷ்ய புராணத் தில் ப்ருத்தீர்த்த மகாத் மியம் என்ற பெயரில் எட்டு அத்தியாயங்களில் பெருந் துறையின் மகிமைகள் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நூல்கள்

சுந்தரலிங்க முனிவர் இயற்றிய (பழைய) திருப்பெருந்துறைப் புராணம்

இது வடமொழியிலுள்ள ஆதிகயிலாசபுர மஹாத் மியம் என்ற புராணத்தைத் தழுவி ஆதீனத்தில் முனிபுங் கவராக விளங்கிய சுந்தரலிங்க முனிவரால் இயற்றப் பட்டதாகும். தஞ்சை சரஸ்வதி மகால் வெளியீடாக வெளிவந்துள்ளது. (1976) கடவுள் வாழ்த்து முதலாக 58 சருக்கங்களையும் 1948 செய்யுட்களையும்கொண்டது. (இந்நூல் முழுமையாகக் கிடைக்க வில்லை ஏறத்தாழ 100 பாடல்கள் கிடைக்கவில்லை) இந்நூலைப் பழைய பெருந்துறைப் புராணம் என்பர்.

திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை இயற்றிய (புதிய) திருப்பெருந்துறைப்புராணம்.

இதுவும் வடமொழியிலுள்ள உருத்திரசம்ஹிதையை அடியொற்றி எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் வடமொழி மூலம் கிடைக்க வில்லை. ஆதீன வித்வான் மகாவித் வான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றிய இந்நூல் உ.வே. சாமிநாதையர் அவர்களால் 1892–ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பட்டது. இதனைப் புதிய பெருந்துறைப் புராணம் என அழைப்பர். 35 படலங் களையும் 1658 விருத்தப் பாடல்களையும் கொண்டது.

திருப்பெருந்துறைத் தலவரலாறு

மேற்படி புதிய பெருந்துறை புராணத்தின் சுருக்கம் உரைநடை வடிவில் (1991) குடமுழுக்கு விழாமலராக வெளிவந்துள்ளது. ஆசிரியர் திரு. ச. தண்டபாணி தேசிகர்

ஆதி கயிலாய க்ஷேத்ர புராணம்

இது ப்ரம்மஸ்ரீ ஆத்மநாத நம்பியாரால் வடமொழி யிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டு உரை நடை வடிவில் அமைந்தது. திருப்பெருந்துறையின் தலவரலாறுகள் சுருக் கமாகக் கூறப்பட்டுள்ளன. மூன்றாம் பதிப்பு 1941ல் வெளி வந்துள்ளது.

திருப்பெருந்துறை ஸ்தலபுராண வசனம்

இதுவும் வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டு உரை நடையில் அமைந்ததாகும்.

திருப்புகழ்

திருப்பெருந்துறைக் குமரர்பேரில் அருணகிரி நாத சுவாமிகள் பாடிய மூன்று திருப்புகழ் பாடல்கள் உள்ளன. "இரத்த" என்று தொடங்கும் பாடலில் சிவபெருமானை ஜகத்குரு என்றும் முருகன் அவர் மனம் மகிழப் பிரசங் கம் செய்யும் மணி என்றும் குறிக்கிறார்.

"வரித்த" என்ற திருப்புகழில் திருமாலும். பிரமனும் துதிக்கும் குருந்தடி அமர் குருவான சங்கரரோடு அமர்ந்திருக்கும் முருகன் என்றும்,

"தவப்பிரியங்கொள்" எனும் பாடலில் "சிவப்பரம் பொருள் உதவிய பெருமாள்" என்றும் போற்றியுள்ளார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

சிவயோக நாயகி பிள்ளைத்தமிழ்

இது அம்பிகையின் பேரில் பாடப்பட்டதாகும். இது அம்பிகையின் பெருமைகளையும் இங்குள்ள ஸ்ரீ சக்கரத்தின் பெருமை களையும் விளக்குகிறது. இயற்றியவர் பெயர் தெரியவில்லை

வீரபத்திர சத்ரு சங்கார மாலை

வீரபத்திரர் பேரில் பாடப்பட்டதாகும். இதைப் பாராயணம் செய்தால் பகைவர்கள் அழிவார்கள்.

வீரமாலை

இது கேசவபாரதியால் பாடப்பட்டது. வீரபத்திரர் மின்னலாகத் தோன்றி அருள்பாலித்தை விளக்குகிறது.

இவை தவிர

1. பஞ்சரத்தின மாலை
2. ஸ்தலபுராணக் கும்மி
3. காவடிச்சிந்து
4. கோலாட்டப்பாட்டு
5. கப்பல்பாட்டு
6. சோமவார நாடகம்
7. பிரதட்சண கும்மிப்பாட்டு
8. லாலிப்பாட்டு
9. ஊஞ்சல்பாட்டு
10. ஆன்மேசர் கண்ணிகள்
11. அக்ஷர மாலிகா ஆசிரியப்பா
12. ஸ்தல கீர்த்தனைகள்
13. வெள்ளாற்றுக் கப்பல் பாட்டு
14. கட்டியம்
15. திருப்பெருந்துறைகலம்பகம்
16. திருப்பெருந்துறை யமக அந்தாதி
17. ஆத்மநாதர் ஆசீர்வாதம்
18. பார்வதி பரிணயம்
19. ஆத்மநாதர் வழக்குரைத்த சரித்திரம்
20. மாணிக்கவாசகர் சரித்திர நிரூபணம்

ஆகிய நூல்களும் இத்தலத்தின் பெருமைகளைப் பேசுகின்றன.

★ பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம் பெரும்பற்றப்புலியூர் நம்பிபாடிய திரு ஆலவாய் உடையார் புராணம், கடவுள் மாமுனிவர் இயற்றிய வாதவூரடிகள் புராணம் ஆகியவற்றிலும் திருப்பெருந்துறையின் சிறப்புக்கள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.



மணிவாசகர்
அம்மன் சந்நிதி மண்டபம்

★ தலபுராணங்களில் இடம்பெற்றுள்ள துதிகள் தனியாகவும் ஸ்தோதிர கதம்பம் என்ற பெயரில் தொகுப்பாகவும் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் குறிப்பிடத்தக்கவை பிரம்மானந்த சகஸ்ரநாமம், தக்ஷிணாமூர்த்தி சகஸ்ரநாமம், மாணிக்கவாசகர் சகஸ்ரநாமம், வீரபத்திரர் சகஸ்ரநாமம் ஆகியவையாகும். இவை நடைமுறையில் பூஜையின் போது சொல்லி அர்ச்சிக்கப்படுகின்றன. தட்சணாமூர்த்தி சகஸ்ரநாமம் தினமும் சொல்லி அர்ச்சனை செய்யப்படுகிறது.

புராணங்களைப் போற்றுதல்

புராணம் என்பதற்குப் பழங்கதை என்பது பொருள். பழங்கதைகளின் மூலமே ஒரு சமுதாயம் தனது குடியின் பெருமைகள், முன்னோர்களின் தியாகம், வீரம், முதலிய வற்றைத் தெரிந்து கொள்கிறது, அதிலிருந்து அனேக அனுபவங்களை அறிந்து மேன்மையுடன் நடந்து கொள்கிறது.

ஆலயங்களில் சிவபெருமானின் வீரதீரங்களையும், அடியவர்க்குதவும் அரும் பெருமைகளையும் விளக்கிக் கூறும் புராணங்கள் பாராயணம் செய்யப்பட்டதுடன் அன்பர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது.

இதற்கென அமைந்த மண்டபம் புராணமண்டபம் எனப்படுகிறது. இதில் அமர்ந்து புராணங்களை எடுத்துரைப்போர் பௌராணிகர் எனப்பட்டனர்.

திருவாசகத்தில் முதற்பகுதியே சிவபுராணமாகத் திகழ்வது சிந்திக்கத்தக்கது. திருப்பெருந்துறையில் திருவாசகத்துடன் தலபுராணங்களையும் வைத்து பூசிக்கின்றனர்.

தேவதீர்த்தத்தின் கரையிலுள்ள மண்டபத்தில் ஸ்தலபுராணமும், பஞ்சாட்சர மண்டபத்தில் ஹாலாஸ்ய புராணமும் (மதுரைப்புராணம்) நவக்கிரக மண்டபத்தில் மாணிக்கவாசகர் புராணமும் தினமும் பாராயணம் செய்து வந்துள்ளனர். துலாமாதத்தில் துலாபுராணம் வாசிக்கப்பட்டது. இவற்றை வாசிக்கும் பௌராணிகர்களுக்கு காளாஞ்சியுடன் மரியாதை செய்யப்பட்டதை அறிகிறோம்.

★ இப்போதும் விழாவில் மாணிக்கவாசகர் புராணம் பௌராணிகரால் கூறப்படுகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam, Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருப்பெருந்துறையின் புண்ணிய தீர்த்தங்கள்

சிவபெருமான் சென்றாடு தீர்த்தங்களாக இருக்கின்றான். தீர்த்தங்கள் உடலின் அழுக்குகளை நீக்கி தூய்மை அளிப்பது மட்டும் இல்லாது உள்ளத் தூய்மையையும் அளிக்கின்றன. அவை தெய்வீக சக்தி பெற்றவை. ஒவ்வொரு தலத்திலும் தேவர்களாலும், அன்பர்களாலும், பிறராலும் பலவிதமான தீர்த்தங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தீர்த்தங்களைச் சிவபெருமானாகவே போற்றி வலம் வந்து வணங்கி மூழ்க வேண்டும். தீர்த்தக் கரையில் செய்யும் தானம், ஜபம் யாவும் பலமடங்கு பலன் தருகின்றன.

திருப்பெருந்துறை தலபுராணம் இத்தலத்தில் 32 தீர்த்தங்கள் இருப்பதாகக் கூறுகின்றது. இவற்றில் சிலவற்றின் பெயர்களையும் விளக்கத்தையும் காணலாம்.

1. அம்பிகா தீர்த்தம் (எ) ஆத்மகூபம்

கருவறைக்குப் பின்புறமுள்ள குருந்த மூலத்திற்குப் பின்புறம் கிணறு வடிவில் உள்ளது. இது அம்பிகையால் உண்டாக்கப்பட்டது. ஆன்மகூபம் என்றும் அழைக்கப் படுகிறது. இது சுவாமி அபிஷேகத்திற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. அம்பாள் உண்டாக் கிய இத் தீர்த்தம் சிவதீர்த்தம் எனப்படும்.

2. அக்னி தீர்த்தம்

மூன்றாம் பிரகாரத்தில் தியாகராஜ மண்டபத்திற்கு மேற்கில் பெரிய திருக்குளமாக அக்னிதீர்த்தம் உள்ளது. திருவாசகத்தில் திருந்தமாம் பொய்கை என்று குறிக்கப்பட்டுள்ளது. பிரம்மனுக்கு தீக்ஷை செய்விக்க பெருமான் பூமியை நெற்றிவிழியால் உற்றுநோக்க அது பாதாளம் வரை பிளந்து சென்றது. அதிலிருந்து பாதாள கங்கை வெளிப்பட்டாள். அவளே அக்னி தீர்த்தமாக இருக்கிறாள். இறைவன் உண்டாக்கிய இத்தீர்த்தம் சக்தி தீர்த்தம் எனப்படும்.

3. அசுர தீர்த்தம்

இந்நாளில் குறிச்சிக்குளம் என வழங்கும் தீர்த்தம் பிரகலாதனின் பேரனான மகாபலிச் சக்ரவர்த்தியால் உண்டாக்கப்பட்டதால் இப்பெயர்பெற்றது. இதன் கரையில் வன்னி மரம் உள்ளது.

4. தேவ தீர்த்தம்

தேவர்களால் உண்டாக்கப்பட்ட தீர்த்தம் தேவ தீர்த்தம். இந்நாளில் நெல்லியடி என்ற பெயரில் திருக் கோயிலுக்கு எதிரில் அமைந்துள்ளது. இத்தீர்த்தத்தில் மூழ்கி வழிபட அறிவு, ஞானம் முதலியவை உண்டா கும். இதன் வடகரையில் தேவ விநாயகர் உள்ளார்.

5. கோடி தீர்த்தம்

66 கோடிதீர்த்தங்களும் ஒன்றாக அமைந்தது.

6. பிரம்ம தீர்த்தம்

பிரமன் இறைவனை நோக்கித் தவம் செய்தபோது இதனை உண்டாக்கினான். அவன் பெயரால் பிரம தீர்த்தம் என வழங்குகிறது. சந்நிதியப்பர் குளம் என்று கூறுவர். இதன்கரையில் சக்திகணபதி ஆலயம் உள்ளது.

7. உருத்திர தீர்த்தம்

உருத்திரர்கள் யோக பீடத்தை வணங்கிய பின்னர் பெருமானை சிவலிங்க மூர்த்தமாக எழுந்தருளும்படி வேண்டினர். அவர்களின் வேண்டுகோளை ஏற்று பெருமான் சிவலிங்கமாகத் தோன்றினார். அவருக்கு அபிஷேகம் செய்ய உருத்திரர்கள் உண்டாக்கிய தீர்த்தம் அவர்கள் பெயரால் வழங்குகிறது. வடக்கூரில் ஊருணியாக விளங்குவது இதுவேயாகும். மகிழ மரம் இதன் தீர்த்த மரமாகும்.

8. பாண்டவ தீர்த்தம்

இந்நாளில் அடியார் குளம் என வழங்கும் பாண்டவ தீர்த்தம் பஞ்ச பாண்டவர்களால் உண்டாக்கப்பட்ட தாகும். இதன் தென் கரையில் பாண்டவர்கள் அமைத்த விநாயகர் உள்ளார்.

9. கண்ணன் தீர்த்தம் (வாயு தீர்த்தம்)

இது வாயுவால் ஆதியால் உண்டாக்கப்பட்டது. கிருஷ்ணபரமாத்மா ஆத்மநாதரைப் போற்றி வழிபட்டபோது திருத்தி அமைத்தார் அதையொட்டி கண்ண தீர்த்தமாகியது. இந்நாளில் கண்ணான் குண்டு என வழங்குகிறது. இதன், கரையில் சந்தன மரத்தின் கீழ் வாயு தேவன் விநாயகரை அமைத்து வழிபட்டான். அவரே வாயு விநாயகர்.

10. இந்திர தீர்த்தம்

இது இந்திரனால் உண்டாக்கப்பட்ட தீர்த்தம் கட்டளை மடத்திற்குள் ஊருணியாக உள்ளது. இதன் மேல்கரையில் இந்திரன் நெல்லி மரத்தடியில் அமைத்து வழிபட்ட ஆகண்டல விநாயகர் ஆலயம் உள்ளது.

11. மானவ தீர்த்தம்

சீராட்டு ஊருணி என அழைக்கப்படும் இத்தீர்த் தம் மனுவால் அமைக்கப்பட்டது. இதன் கரையில் மனு விநாயகர் கோயில் உள்ளது. இதற்கு உரிய மரம் மாமரம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

12. அடியவர் தீர்த்தம்

தொண்டர் குழி என்ற பெயரில் உள்ள இது புராணத்தில் பக்த தீர்த்தம் என்று குறிக்கப்பட்டுள்ளது. வியாக்ரபாதரும் – பதஞ்சலி முனிவரும் அடியவர் களும் கூடி உண்டாக்கிய தீர்த்தம்.

13. கந்தர்வ தீர்த்தம்

இந்நாளில் சுக்ரவாரக்குட்டை என வழங்கப்படு கிறது. கந்தவர்களால் உண்டாக்கப்பட்டது. இதன் தல மரம் மாமரம்.

14. ரிஷீஸ்வர தீர்த்தம்

இது இந்நாளில் கொடியானோடை என வழங்கு கிறது. ஏழிலைப்பாலைமரம் தீர்த்த மரம்.

15. அன்னபூரணி தீர்த்தம்

திரு மடைபள்ளியில் அமைந்துள்ள தீர்த்தம் அன்ன பூரணி தீர்த்தம் என வழங்குகிறது. அமுது சமைப் பதற்குப் பயன்படுகிறது.

16. கீழ் நீர் காட்டி ஓடை

இது ஸமந்த தீர்த்தம் என்றழைக்கப்படுகிறது. இறைவன் மண்வெட்டியால் வெட்டி சாட்சிக்கா நிலத் தின் கிழே நீர் வரவழைத்த இடம் என்பர்.

17. லட்சுமி தீர்த்தம்

இது மூன்றாம் பிராகாரத்தில் குருந்த மரத்திற்கு அருகிலுள்ள தீர்த்தக் கிணறாகும்.

18. வெள்ளாறு (சுவேதநதி)

இவ்வூரின் ஒடும் வெள்ளாறு தீர்த்தமாகக் கருதப் படுகிறது.

21. பராசர தீர்த்தம்

பராசர முனிவர் அமைத்தது. ஆவுடையார் கோயிலுக்கு அருகிலுள்ள பரன்வந்தூர் பெருமாள் ஆலயத்திற்குள் உள்ளது. இதன் விருட்சம் அரசமரமாகும்.

22. சூரிய தீர்த்தம்

இது பெரியாச்சி அம்மனோடை என வழங்குகிறது. சூரியனால் உண்டாக்கப்பட்டது.

23. சந்திர தீர்த்தம்

சந்திரனால் உண்டாக்கப்பட்ட இது சுக்கான் ஊரணி என்றழைக்கப்படுகிறது.

24. சரஸ்வதி தீர்த்தம்

ஆதார கணபதிக்கு எதிரிலுள்ளது. சரஸ்வதி அவளது ஊமைத்தனம் நீக்கியதற்காக அமைத்தது. புன்னைமரம் இதன் விருட்சமாகும்.

25. பதஞ்சலி தீர்த்தம்

பதஞ்சலி முனிவர் இங்கு தங்கி வழிபட்டபோது உண்டாக்கிய தீர்த்தம். இதன் கரையில் பரமசுவாமி விநாயகர் ஆலயம் உள்ளது. இவர் பள்ளிக் கூட விநாயகர் என்று அழைக்கப்படுகிறார். இந்த பள்ளிக்கூட விநாயகர் சந்நிதியில் இருந்தே ஆன்மநாதர் முந்நூற்றுவர் சிறார்களுக்கு வேதம் கற்பித்தார் என்று நம்புகிறார்கள். இன்றும் நம்பியார் சிறுவர்களைப் பள்ளியில் சேர்க்கும் முன் இப் பிள்ளையாருக்கு வழிபாடு செய்கிறார்கள். என்றழைக்கப்படுகிறது.

26. கௌதம தீர்த்தம்

இது கருங்காட்டில் சாஸ்தா கோயிலுக்கு அருகில் உள்ளதாகும். கௌதம முனிவர் உண்டாக்கியது.

27. அகத்திய தீர்த்தம்

அகஸ்தியர் சுவேத நதியின் வெள்ளப்பெருக்கால் எல்லைகள் மாறிக்கிடந்த முன்னூற்றுவரின் இடங்களை அளந்து சரிசெய்து அளித்தார் என்று கூறுகிறது. அவர் காசாவடி எனுமிடத்தில் தங்கி அமைத்தலிங்கம் அகஸ்திய லிங்கம் என்பதாகும். அவரால் உண்டாக்கப்பட்ட தீர்த்தம் அகஸ்திய தீர்த்தம். அதன் விருட்சம் காசாமரம்.

இவைதவிர தோப்புக்கிணறு, ராம கங்கை என்ற ஓடை, கணநாதர் கோயிலுக்கு அருகிலுள்ள தீர்த்தம் முதலியனவும் தீர்த்தங்களாகக் கொள்ளப்பட்டு கின்றன.

கல்சங்கிலிகள்

சிற்பிகள் தங்கள் கலைத்திறனைக் காட்ட கற்களில் சங்கிலிகளை உருவாக்கி அமைப்பது வழக்கம். ஆவுடையார் கோயிலில் பல இடங்களில் கல் சங்கிலிகள் அமைக்கப்பட்டுள்ளன. மண்டபத்தின் மூலைகளில் சங்கிலிகளை அமைப்பதே பொதுவழக்கம் இங்கு தியாகராஜ மண்டப விதானத்திலும் இத்தகைய சங்கிலிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கோயிலை பெரிய ஆளுடையார் கோயில் என்றழைக்கின்றனர் இவ்வூருக்கு சிறிய ஆளுடையால் கோயில் என்ற ஊர் உள்ளது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மண்டபங்களும் தூண்சிற்பங்களும்

ஆவுடையார் கோயிலில் உள்ள அனைத்து மண்டபத் தூண்களும் வடிவாலும் வனப்பாலும் சிறப்பாக அமைந்துள்ளன. பலவற்றில் மிக நுண்ணிய வேலைப்பாடு களுடன் கூடிய பிரம்மாண்டமான சிற்பங்கள் உள்ளன. அவற்றின் கலையம்சத்தை வார்த்தைகளால் விளக்க முடியாது. அதியுன்னத சிறப்பைப் படங்களாகவும் இயன்ற வரை வார்த்தைக் கோலங்களாலும் அறிமுகப்படுத் துவதில் மகிழ்கிறோம்.

ஆயிரக்கால் மண்டபம்

ஆலயத்திற்கு முன்புறம் அமைந்துள்ள கலைக்கூடம் இதுவாகும். ஆயிரக்கால் மண்டபம் என்று அழைக்கப்பட்டாலும் இந்த மண்டபம் 64 கால்களைக் மட்டுமே கொண்டுள்ளது. ஆயிரக்கால் மண்டபத்தை இடவசதி இன்மையால் அரசன் 64 கால் மண்டபத்தை அமைத்தான் என்பர். இரண்டு பெரிய தூண்களில் சிறுசிறு மண்டப விமானங்களை அமைத்து அதில் எஞ்சிய 956 கால்களை செதுக்கியுள்ளான் என்பர்.

இம்மண்டபம் சொக்கட்டான் மண்டபம் (அ) சதுரங்கமண்டபம் என்ற வகையினைச் சார்ந்ததாகும். இதில் + வடிவில் நடைபகுதிகளை அமைத்து நான்கு பக்கமும் உயரமான திண்ணைகளை அமைத்து அதன் மீது தூண்களை அமைத்துக் கூரை பாவியுள்ளனர். பின்னாளில் இம்மண்டபத்துடன் மாணிக்கவாசகர் சந்நிதியை இணைத்துக் கட்டியுள்ளனர்.

இம்மண்டபத்தின் தூண்கள் அளவால் பெரியவை 7அடி அகலமும் 20 அடி உயரமும் கொண்டவை. தூண்முழுவதும் வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இங்குள்ள நான்கு பாய்ந்து குதிரைகளும் அதன்மீது சலாகையுடன் அமர்ந்து வரும் வீரர்களும் அதியற் புதமாக வடிக்கப்பட்டுள்ளனர். குதிரையின் கடிவாளம், முதுகின்மேல் .இடப்பட்டுள்ள துணி, அதில் செருகி வைக்கப்பட்டுள்ள கத்தி, பாய்ந்து வருவதால் காதுகளும் மூக்கும் விடைத்துக் கொண்டு வாயைத்திறந்தபடி இருக்கும் குதிரைகள் என்று மிக நுணுக்கமாக உயர்ந்த கலைப்படைப்பாக வடிக்கப்பட்டுள்ளன.

இம்மண்டபத்தில் இரண்டு வீரபத்திரர்கள் பெரிய வடிவில் அமைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு அவ்வப்போது சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. நெடிதுயர்ந்த இந்த வீரபத்திரர்கள் மிகுந்த வரந்தருபவர் களாகப் போற்றப்படுகின்றனர்.

இம்மண்டபத்தின் முகப்புத்தூண்களில் உக்ர நரசிம்மர், ஊர்த்துவதாண்டவர், ஆடலில் தோற்றகாளி, வில்லேந்திய வேலவர், அரியர்த்தர் (சங்கரநாராயணர்) ஆகியோர் அமைக்கப்பட்டுள்ளனர்.

உக்ரநரசிம்மர் இரணியனை மடியிலிட்டு அவனுடைய குடலைப்பிடுங்கி மாலையாக அணிந்து கொள்ளும் உக்கிரமான கோலத்தில் உள்ளார்.

ஊர்த்துவ தாண்டவர் கையில் மணியொலித்துக் கொண்டு காத்தல் தாண்டவம் ஆட பக்கத்துத் தூணில் காளி தோற்று நாணி நிற்பது கண்டு மகிழத்தக்கது.

மண்டபத்தின் மேற்குப் பகுதியில் மேடைமீது அமைத்திருப்பது நந்தீச மாணிக்கவாசகர் சந்நிதியாகும். இருபுறமும் உள்ள தூண்களில் உச்சிஷ்ட கணபதியும், சிகிவாகன முருகப்பெருமானும் மிகுந்த எழிற்கோலத் துடன் விளங்குகின்றனர்.

வசந்த மண்டபம் (ஊஞ்சல் மண்டபம்)

வசந்த காலத்தில் நீர் சூழ்ந்த மண்டபத்தில் ஊஞ்சல் அமைத்து பெருமானை அமர்த்திப் பலவித உபசாரங் களால் செய்து வழிபடுவது வழக்கம். ஆவுடையார் கோயிலில் மூன்றாம் பிராகாரத்தில் ஊஞ்சல் மண்டபம் என்றபெயரில் வசந்த மண்டபம் உள்ளது. சிவபெருமான் மாணிக்கவாசகர் வடிவை சோமாஸ்கந்த வடிவத்தோடு ஒப்பிட்டுக் கூறியுள்ளதால். மாணிக்கவாசகரை வசந்த மண்டபத்திற்கு எழுந்தருளுவித்து உபசாரங்கள் செய் கின்றனர்.

வசந்த மண்டபத்தில் வசந்தனாகிய மன்மதன் தன் தேவியான ரதியுடன் பெருமானை வழிபடுகிறார் என்பர். அவன் பெயராலேயே காலமும், மண்டமும், விழாவும் வசந்த என்ற சொல்லுடன் இணைத்து அழைக்கப்படு கின்றன. இங்குள்ள முதன்மைத் தூணில் ரதியும், அவன் பதியான மன்மதனும் பெரிய உருவில் அமைக்கப்பட்டு உள்ளனர்.

முகப்புத்தூண்களினில் அமைந்துள்ள மன்மதன் முகத்திலுள்ள அரும்பு மீசையும், கண்களில் குறும்புப் பார்வையும், பரவசப்படுத்துகின்றன. இடது கையில் நீண்ட தோகைகளுடன் கூடிய கரும்பு வில்லையும். தாமரை முல்லை, அசோகம், மா, நீலோற்பலம் ஆகிய ஐவகை மலர்களாலான பஞ்சபாணத்தையும் கொண்டுள்ளான். வலது கரத்தை வில்லில் பூட்டி எய்யும் நிலையில் உள்ளான் இவன் அழகின் சிகரமாக

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உள்ளான். பக்கத்திலுள்ள தூணில் ரதி ஏராளமான அணிமணிகள்பூண்டு அலங்காரத்துடன் கிளியின் மீது அமர்ந்துள்ளாள். இம்மண்டபத்திற்கு மாணிக்கவாசகர் மூன்று நாட்கள் எழுந்தருள்கின்றார்.

வசந்த விழாவின் போது உபசாரங்களைச் செய்பவள் அரம்பையும் அவளுடைய தோழியருமாவர். அதைக் குறிக்க நெடிய அரம்பையின் உருவத்தையும் அமைத்து உள்ளனர்.

மண்டபத்தில் சுவாமியை அமர்த்த உயர்ந்த மேடையும் அதன் முன்புறம் நடனமாட வசதியான சிறுமேடை அமைப்பும் உள்ளன.

மண்டபத்தின் நாற்புறமும் அமைந்த கொடுங்கைகள் கலைஞர்களின் ஒப்பற்ற கைவண்ணத்தைக் காட்டுகின்றன. (இதன் விவரம் வேறுபக்கத்தில்)

★ இங்கே மன்மதனைப் படைத்த கலைஞன் தனது கற்பனாசக்தியை பயன்படுத்தியுள்ளான். மூலஸ்தானத்தில் தென்முகக்கடவுளாகப் பெருமான் யோகத்தில் வீற்றிருக்கிறார் என்பதால் அவரது தவத்தைக் கலைக்கும் வகையில் அவர் மீது பாணங்களை எய்யும் நிலையில் அவனை அமைத்துள்ளான். அவன் கால்களை வளைத்து கவனத்துடன் கணைதொடுப்பது கண்டு மகிழ்வதற்கு உரியதாகும்.

ஆயிரக்கால் மண்டபத்தில் தூண்கள் சிற்பக் களஞ்சியமாக இருக்கிறதென்றால் விதானம் ஓவியக் களஞ்சியமாக இருக்கிறது. பெரிய வடிவாக தட்சிணமூர்த்தி தீட்டப்பட்டிருக்கின்றார். இராவணன் கயிலையைத் தூக்கிச் சுமந்து அருள் பெறுவது மற்றோர் பெரிய ஓவியமாகும். காமேசுவரர் மற்றோர் ஓவியம் பிராகாரத்தின் விதானத்தில் பட்டுச்சேலையை ஒட்டி வைத்தது போல் ஓவியங்கள் வரைந்துள்ளனர்.

இந்த மண்டபத்தின் நாற்புறமும் அமைந்திருக்கும் கொடுங்கைகள் கலையுலகின் உன்னதப் படைப்புகளாகச் சிறப்புப் பெற்றவை.

தியாகராஜ மண்டபம்

இது வசந்த மண்டபத்தின் தெற்கில் அதையொட்டி அமைந்த மிகப்பெரிய நெடிய மண்டபமாகும். இதனுள் இரண்டு பெரிய குதிரை வீரர் சிற்பங்கள் உள்ளன. இவை தலைசிறந்த கலைப் படைப்புக்களாகும். இதிலுள்ள தூணில் மந்திரிக் கோலத்தில் மணிவாசகரும் எதிரிலுள்ள ஒரு தூணில் இம்மண்டபத்தைக்கட்டிய திருப்பணியாளரும் உள்ளனர்.

பஞ்சாட்சர மண்டபம்

பஞ்சாட்சர மண்டபத்தில் குதிரைச் சேவகன், அரிமர்த்தன பாண்டியன், முதலியோரின் சிற்பங்கள் உள்ளன.



கிழக்குப் பிராகாரமண்டபமும் அதன் தூண்களில் இடம் பெற்றுள்ள திருப்பணியாளர்களின் திருவுருங்களும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கொடுங்கைகள்

கொடு என்பதற்கு வளைந்திருப்பது என்று பொருள். கட்டிடங்களின் வெளிவிளிப்பில் மழைநீர் வழிந்தோடவும், வெய்யில் கூரையை தாக்காதிருக்கவும் அமைக்கப் பட்ட வளைவான கூரைகளே கொடுங்கைகள் எனப்பட்டன. ஆதியில் மரத்தில் கட்டிடங்கள் அமைந்த போது வரிசையாக கை மரங்கள் எனப்படும். (   ) வடிவில் வளைந்த வடிவாகச் செய்யப்பட்ட மரத்துண்டுகளைப் பொருத்தி அதன்மீது பலகைகளை அடித்துப் பின் உலோகத் தகடுகளைப் பொருத்துவர் இப்படி வளைந்த அமைப்பில் செய்யப்படும் கட்டிடப்பகுதி கொடுங்கை எனப்படும். இந்த வரிசையான கை மரங்களை இணைக்க இடையில் சட்டங்களை பொருத்துவர்.



கட்டிடக்கலை வளர்ந்த பின்னர் கற்களைச் செதுக்கி கொடுங்கையாகப் பயன்படுத்தினர். அதனால் கை மரங்களின் தேவை மறைந்துவிட்டது.

ஆனால் உன்னதமாக விளங்கும் ஆவுடையார் கோயில் மண்டபத்தை அமைத்த சிற்பிற்கு கொடுங் கைகள் மீது தனிப்பட்ட கவர்ச்சி இருந்திருக்க வேண்டும் கை மரங்கள் அதை நிலைநிறுத்தும் குறுக்கு சட்டங்கள் அதன்மேல் சமப்படுத்திய பலகைகள், அதன்மீது அடிக்கப்பட்ட செப்போடுகள் ஆகியவற்றை கல்லிலேயே படைத்துள்ளான். மரங்களை இணைக்கப் பயன்படும் குமிழ் ஆணி, பூக்கள் என்று எதையும் ஒன்று விடாமல் செய்திருக்கின்றான்.

கைமரங்களுக்கு பிடிப்பும் வலிமையும் உண்டாக அமைக்கப்படும் குறுக்குச் சட்டங்கள் வளைவின் அளவைப் பொறுத்து வேறுபடும். இங்கு ஆறு சட்டங்கள் இடப்பட்டுள்ளன. இந்த சட்டங்களில் ஒன்று பலகம்பி களை இணைத்து முறுக்கியது போன்றது. ஒன்று நாறப்பட்டை மற்றது எண்பட்டை மற்றொன்று மணிகோர்த் தது போன்றது, ஒன்று வட்டமானது இப்படி வகைக்கு ஒன்றாக சட்டம் செய்துள்ளான்.



இவையாவும் தனித்தனியாக செய்து பொறுத்தப்பட்ட தல்ல ஒரே பெரிய கல்லில் குடைந்து உருவாக்கியதாகும்.

ஊஞ்சல் (வசந்த) மண்டபத்தின் மூன்று புறத்திலும், ஆயிரங்கால் மண்டபத்தில் நான்கு புறத்திலுமாக ஆறு சட்டங்களைக் கொண்ட பெரிய கொடுங்கைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கனகசபை, தில்லைசபை ஆகியவற்றில் அமைந்துள்ள கொடுங்கைகள் அளவால் சிறியவை என்றாலும் உயர்ந்த கலைப்படைப்பு ஆகும். தில்லை சபை கொடுங்கையின் மேற்புறத்தில் தில்லையில் வேயப்பட்டிருக்கும் பொன்னோடுகளைப் போலவே கல்லில் பூக்களைச் செய்துள்ளனர்.

முன்நாளில் ஒப்பந்தச்சீட்டு எழுதித்தரும் சிற்பிகள், ஆவுடையார் கோயில் கொடுங்கை, திருவலஞ்சுழி பலகணி, திருவீழிமிழலை வெளவால் நெத்தி மண்டபம் நீங்கலான மற்ற எந்த வகையான வேலைகளையும் செய்து தருவோம் என்று எழுதிக்கொடுப்பது வழக்க மென்று கூறுகின்றனர். அவ்விதம் சிற்பிகளாலேயே போற்றப்பட்ட பெருமைகளைக் கொண்டது இங்குள்ள கொடுங்கை களாகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அணிசேர்க்கும் ஆறு சிறப்புக்கள்

திருத்தலங்களுக்கு பெருமை சேர்ப்பவை வனம், புரம், க்ஷேத்திரம், தீர்த்தம், மூர்த்தி, பக்தர்கள் என்ற ஆறாகும்.

கொன்றை வனம், மகிழவனம், அரசவனம் என்ற பலவனங்களுக்கிடையே குருந்தவனமாக விளங்குவதால் இத்தலம் வனப் பெருமை பெற்றது. புராணங்கள் இத்தலத்தைக் குருந்தவனம், சன்னவனம், சிவயோக வனம் என்று பலவாறு குறிக்கின்றன.

புரம் என்பது திட்டமிட்டு செம்மையாகக் கட்டப்பட்ட நகரங்களாகும். அவ்வகையில் வேதங்கள் நிலவும் சதுர் வேதபுரமாகவும் மங்கலத்தைத் தரும் சிவை வீற்றிருக்கும் சிவபுரமாகவும், மகாமாயா வீற்றிருக்கும் மாயாபுரமாகவும் போற்றப்படுகிறது.

க்ஷேத்திரம் என்பது புனிதத் தன்மை வாய்ந்த இடமாகும். சிவபெருமான் அடியார் குழாத்துடன் நீங்காது வாசம் புரிவதால் க்ஷேத்திரம் எனப்பட்டது. சிவக்ஷேத்திரம், பவித்திரமாணிக்கம், எனப் பலவாறு அழைக்கப்படுகிறது.

தலங்களுக்கு பெருமை சேர்ப்பது புண்ணியம் தரும் தீர்த்தங்களாகும். ஆவுடையார் கோயிலில் நவந்தரு பேதங்கள் நவ தீர்த்தங்களாக விளங்குகின்றன. இறைவன் ஆணைப்படி 66 கோடி தீர்த்தங்களும் இங்கே தோன்றின மேலும் தேவர்கள் அமைத்த முப்பத்தியிரண்டு தீர்த்தங்களால் இத்தலம் பொலிவு பெற்று புண்ணிதீர்த்தபுரமாக விளங்குகிறது. வடமொழியில் ப்ருகத் தீர்த்தபுரம் என்றழைக்கப் படுகிறது.

இறைவன் பலவேறு லீலைகளை நடத்திய விரும்பி உறையும் இடமாதலின் மூர்த்தி சிறப்பு கொண்டது.

இறைவன் குருவடிவில் திகழ்ந்து பக்தர்களுக்கு அருள்புரிந்து பிரியாது அவர்களுடன் வீற்றிருப்பதாலும், மகாபக்த சிகாமணியாகிய மாணிக்கவாசகருக்கு அருள்புரிந்து ஆட்கொண்டதாலும் பக்தர்கள் இறைவன் தன்னோடு ஒப்பவைத்து பேசும் தலமாக இருப்பதாலும் இது பக்தபுரமாக உள்ளது. பக்தனுக்குப் பெருமான் தனக்குரிய சிறப்புகளை அளித்து மேன்மை படுத்திய தலமாக இருப்பதாலும் தனிச்சிறப்பு பெறுகிறது.

இதையொட்டி ஆவுடையார் கோயில் ஷண்மங்கல க்ஷேத்திரம் (ஆறு மங்களம் நிறைந்த தலம்) என்று போற்றப்படுகிறது.

ஆவுடையார் கோயிலுக்கும் ஆறு என்ற எண்ணுக்கும் மிகுந்த தொடர்புள்ளது

- இங்குள்ள சபைகள் ஆறு. அவற்றில் விரும்பி உறையும் பெருமானுக்கு ஷட்சபாரமணர் என்ற பெயர் வழங்குகிறது.
- குதிரைச் சாமியுடன் வந்த குதிரைத்திரளில் முதன்மை பெற்றவை ஆறு அதைக்குறிக்கும் வகையில் ஆயிரக்கால் மண்டபத்தில் நான்கும் தியாக ராஜமண்டபத்தில் இரண்டுமாக ஆறுகுதிரை வீரர் சிற்பங்கள் உள்ளன்.
- ஆன்மநாதருக்குப் பரிவாரமாக முதன்மைபெற்ற மூர்த்தங்கள் சொக்கவிநாயகர், குருந்தடி, யோகாம்பிகை, மணிவாசகர், குமரன், நடராசர் ஆகிய ஆறாகும்
- ஆகமங்களில் சொல்லப்பட்ட ஆறு அத்துவாக்களைக் குறிக்கும் வகையில்துவாரபூஜை, ரகஸ்யபூஜை தீபபூஜை முதலியன நடத்தப்படுகின்றன.
- உலகப்புகழ்பெற்ற கொடுங்கைகளில் இடப்பட்டுள்ள சட்டங்கள் ஆறு.
- இரண்டாம் பிராகாரத்திலுள்ள விநாயகர்களின், எண்ணிக்கை ஆறாகும்.
- நம்பிமார், சிவாச்சாரியார், வைதீகர், ஓதுவார் (சைப்பிள்ளை) கோயில் கொத்தனார், உவச்சர், ஆகிய அறுவர் பூஜைகள் நடைபெறுகின்றன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பெருந்திருவிழாக்கள்

ஆலயங்களுக்கு பெருமை சேர்ப்பவை விழாக்களா கும். விழாக்களினால் மனமகிழ்ச்சி உண்டாகிறது. திருப் பெருந்துறையில் ஆண்டிற்கு இரண்டுமுறை பெருந்திரு விழா கொண்டாடப்படுகிறது. மார்கழிக் திருவாதிரை யைக் கடைநாளாகக் கொண்டு ஆருத்ராதரிசன மகோற்சவமும், ஆனி மாதத்தில் உத்திர நாளைக் கடை நாளாகக் கொண்டு ஆனித் திருமஞ்சனப் பெருந்திரு விழாவும் கொண்டாடப்படுகின்றன.

இவ்விழாக்களில் மணிவாசகர் சிந்தையால் சிவமாக வே விளங்குவதால் அவரைச் சிவபெருமானாகவே போற்றிச் சிவபெருமானுக்குரிய அலங்காரங்களைச் செய்து மகிழ்கின்றனர். குறிப்பாக அவரை மதுரைச் சுந்தரராகவே போற்றுகின்றனர். ஆனி விழாவில் பெருமான் மதுரையில் தன்னைத்தான் பூசித்ததைக் குறிக்கும் சிவபூஜை செய்யும் அலங்காரத்தை ஐந்தாம் நாள் காலையிலும், பரமாகாசத்தில் வெள்விடைமீது அமர்ந்து அருள்பாலித்ததை ஏழாம் நாள் இரவிலும் செய்து மகிழ்கின்றனர்.

மார்கழித் திருவிழாவின் போது, நான்காம் நாள் காலையில் திரிபுரமெரித்தது , ஆறாம் நாள் காலை ஊர்த்தவ தாண்டவமாடியது, ஏழாம் நாள் காலை வந்தியின் ஆளாய் பிட்டுக்கு மண் சுமந்தது, எட்டாம் நாள் காலையில் எல்லாம் வல்ல சித்தராயும், இரவில் பாண்டிய மன்னனிடம் குதிரைச் சேவகனாக வந்தது முதலிய அலங்காரங்களில் மணிவாசகரை பவுனிவரச் செய்கின்றனர். இப்படி அடியவரை ஆண்டவன் கோலத்தில் அலங்கரித்து விழா கொண்டாடும் வழக்கத்தை வேறெங்கும் காணமுடிபவில்லை.

பெருந்திருவிழாவின் எட்டாம் நாளில் இறைவனை பிட்சாடனனாக எழுந்தருளச் செய்ய வேண்டும் என்பதால் இங்கு மார்கழி விழாவின் பத்தாம் நாள் காலையில் பிட்சாடனனாக அலங்கரித்து பவனிவரச் செய்கின்றனர். வழக்கமாக அனைத்து ஆலயங்களிலும் பத்தாம் நாள் காலையில் நடராசர் எழுந்தருளி தீர்த்தம் அளிப்பது வழக்கம், அதற்கு சபாநாயகர் தீர்த்தம் என்பது பெயர். இக்கோயிலில் நடராசர் புறப்பாடு இல்லாததால் மணிவாசகரையே நடராசராக அலங்கரித்து ஒன்பதாம் நாள் மாலை சந்திர பிறையில் எழுந்தருளி வைத்து விழா கொண்டாடுகின்றனர்.

இவ்விழாக்கள் இரண்டிலும் ஒன்பதாம் நாள் தேர்த் திருவிழா கொண்டாடப்படுகிறது. அதிகாலையில் தேருக்கு எழுந்தருளுதலும் காலையில் தேரோட்டமும் நிகழ்கின்றன. இதற்கென தனித்தனியே பெரிய தேர்கள் உள்ளன. திருவாதிரைத் தேர் அளவால் பெரியது.

இரண்டிலும் பத்தாம் நாள் பின்னிரவு (பதினோராம் நாளின் அதிகாலையில்) குருந்த மரத்தின் கீழ் மணிவாசகப் பெருமானை எழுந்தருளுவித்து உபதேசம் செய்யும் காட்சி நடத்தப்படுகிறது. இதுவே தரிசனம் எனப்படும். அழைப்பிதழ்களில் இந்நிகழ்ச்சி அருபரத் தொருவன் அவனியில் வந்து குரபரனாகி அருள் திரு மணிவாசகப் பெருமானுக்கு அருளும் உபதேசக் காட்சி என்று குறிக்கப்படுகிறது.



மாணிக்கவாசகர் எல்லாம் வல்ல
சித்தர் திருக்கோலத்தில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam, Funding Tattva Heritage Foundation, Kolkatta

பெருந்திருவிழாக்களுக்கு அடுத்ததாக கார்த்திகை தீபவிழாவும் ஆவணி மூல விழாவும் கொண்டாடப்படுகின்றன இவற்றில் சுவாமி வீதியுலா செல்வதில்லை கார்த்திகை சோமவாரங்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகிறது. ஐப்பசி மாதம் மகா ஸ்கந்தர் சஷ்டி விழா சிறப்புடன் நிகழும். சஷ்டியன்று சூரசம்ஹாரம் நடைபெறுகிறது. வெள்ளிமயிலில் பாலசுப்பிரமணியன் பவனிவருகின்றார்.

அம்பிகை சந்நிதியில் நவராத்திரியின் போது சிறப்பு வழிபாடுகள் சகஸ்ரநாம பாராயணம் ஆகியவை நடைபெறுகின்றன.

கார்த்திகை மாதவிழா

கார்த்திகை தீபத்திருவிழாநாளில் திருவண்ணா மலையில் மலைமேல் ஜோதிவடிவில் பெருமான் காட்சி யளிக்கிறார். இத்தலத்தில் பெருமான் சூட்சும ஜோதி யாக செந்தழல் பரப்பும் செம்மேனியனாக மூலத் தானத்தில் விளங்குகிறான். மாணிக்கவாசகர் செந்தழல் புரை திருமேனியும் காட்டித் திருப்பெருந்துறை யுறை கோயிலும் காட்டி என்று அருளிச் செய்திருப்பது நினைவு கூறத்தக்கதாகும்.

ஆவுடையார் கோயிலிலும் கார்த்திகை தீப விழா சிறப்புடன் கொண்டாடப்படுகிறது இருபத்தெட்டு சுளுந்து கம்பிகளை இணைத்துக்கட்டி தண்டமாக்கி அதை படைகல்லில் வைத்து அனுக்ஞை விக்னேசுவர பூஜை, செய்வர் சித்சபைக்குள் அஸ்திரகும்பம் வைத்து பூசிக்கப்படும்.

தண்டத்தில் இருபத்தேழு நட்சத்திரங்களுடன் அபிஜித் நக்ஷத்திரத்தையும் சேர்த்தது ஆவாகனம் செய்து அதைப் பூசித்த பின்பு சுளுந்தை ஏற்றுவர். அதன் சுளுந்து ஜ்வாலையால் சுவாமி குருந்த மூலம் அம்பிகை முதலான சந்நிதிகளுக்கு தீபாராதனை செய்யப்படும்.

இதற்கு சுளுந்து தீபாராதனை என்றும் அக்னி அபிஷேகமென்றும் பெயர். எரியாடல் என்றும் கூறுவர். இது முடிந்ததும் அஸ்திர கலசம் அம்பிகை கோமுகியில் விடப்படும். அதில் சுளுந்தின் தீயை அணைத்து சுவாமிசந்நிதியில் யதாஸ்தானம் செய்வர்.

பிறகு எரியாடிய பிரானுக்கு (தீயில் உகந்து திருநடனம் புரிந்த) வெம்மைதணியும் பொருட்டு நூற்றுக்கணக்கான கமலா, ஆரஞ்சு எலுமிச்சை ஆகிய பழங்களின் சாற்றால் அபிஷேகம் செய்யப்படும். இது வேறெங்கும் இல்லாத ஐதீக விழாவாகும்.

ஆவணிமூல விழா

சிவாலயங்களில் ஆவணிமூல விழா பிட்டு உற்சவம் என்ற பெயரில் நடைபெறுகிறது. இவற்றில் சிலவற்றில் வந்தியம்மையின் பிட்டுக்கு மண் சுமந்து பாண்டியனிடம் பிரம்படி படுவது அருள்பாலிப்பது ஆகியன ஐதீக விழாவாக நடைபெறுகின்றன.

திருப்பெருந்துறையில் இது சிவபெருமான் பாண்டிய மன்னனிடம் பெருமான் கயிறு மாற்றிக் கொண்டு குதிரைகளை விற்கும் விழாவாக நடைபெறுகிறது. இரவில் குதிரை வாகனத்தை அலங்கரித்து பிராணப்பிரதிஷ்டை செய்து குதிரையின் கடிவாளத்தை மாணிக்கவாசகரின் வலது கையில் வைக்கின்றனர். (அப்போது மாணிக்கவாசகர் குதிரைச் சேவகனான சிவபெருமானாகக் கருதப்படுகிறார்.

அப்போது குருக்கள் "ஆலோன் மணிகுண்டல" "கிஸலய சல ஜங்கா" என்று தொடங்கும் வடமொழி சுலோகங்களைச் சொல்லுகிறார். தொடர்ந்து ஓதுவார். "நரியைப் பரியாக்கி" "இரும்பு தருமனத்தேனை" "பருவரை மங்கைதன்" என்று தொடங்கும் திருவாசகப் பாடல்களை ஓதுகின்றார். மாணிவாசகர் கையிலிருந்து கடிவாளத்தை எடுத்து குதிரைமீது வைப்பர் மாணிவாசகருக்கு தீபாராதனை செய்தபின் பிரசாதம் வழங்குகின்றனர்.

இது மதுரையில் நடக்கும் கயிறு மாற்றிய லீலையைக் குறிப்பதாகும்.

- திருவிழாக்களில் மாணிக்கவாசகர் பவனிவர வெள்ளியால் ஆன சிம்மாசனம் சூர்ய, சந்திரப் பிறறை பூதம், கைலா பர்வதம், பல்லக்கு, யானை இடபம், குதிரை, ஆகியன உள்ளன. குமரருக்கு வெள்ளிமயில் வாகனம் உள்ளது. மரக்குதிரை வாகனமொன்றும் உள்ளது.
- மாணிக்கவாசகருக்கு அணிவிக்க தங்கத்தால் செய்து கல்லிழைத்த கிரீடங்கள், பதக்கங்கள் மணிமாலைகள் ஆகியன உள்ளன. குருந்த மூலத்திற்கு உயர்ந்த ஜாதிக்கற்கள் இழைத்த தங்கக்கவசம் உள்ளது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CCO, In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



குருந்தின் கீழ் குருபரன் மாணிக்க வாசகருக்கு
உபதேசித்தபின் தீபாராதனைக் காட்சி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருப்பெருந்துறையில் காவல்தெய்வ வழிபாடு

ஞானம் பெற்று உயர்நிலை வழிபாட்டில் திளைப்பவர்களின் யோகராஜதானியாக ஆவுடையார் கோயில் விளங்குகிறது. இதே கோயிலில் காவல் தெய்வ வழிபாடுகளும் இணைந்தேயுள்ளன. இங்கு மதிலில் மூனீஸ்வரரும் தெற்கு தில்லைசபை தூண்களில் பள்ளன், பள்ளத்தி, குறவன், குறத்தி ஆகிய நான்கு பெரிய சிற்பங்களும் இடம்பெற்று உள்ளனர் இவர்களைப் பற்றிய செய்திகள் தலபுராணங்களில் இடம்பெற்றுள்ளன.

அந்நாளில் கிராமிய மக்கள் எவ்வாறு இவர்களை அலங்கரித்து வழிபட்டார்களோ அப்படியே சிற்பி கல்லில் வடித்துள்ளான். இந்த கலை நயம் கண்டு மகிழத்தக்கதாகும்.

மகாலிங்கசுவாமி (முனீஸ்வரர்)

ஆகாசமூர்த்தி என்றும் அருப மூர்த்தி என்றும் போற்றப்படும் முனீசுவரர் கோயில் காப்பாளராக வீற்றிருக்கின்றார். இவரை மகாலிங்க மூர்த்தி என்று அழைக்கின்றனர். இவர் விட்டவாசல் என்றழைக்கப்படும். மேலைக் கோபுர மதிலில் ஒரு மாடத்தில் நிலைப்படுத்தப்பட்டுள்ளார் பாதுகையும் பலிபீடமும் மட்டுமே உள்ளது. சுக்கு மாந்தடிகளை வைத்துள்ளனர். காவித் துணிகளை அணிவித்துள்ளனர்.

வேதப் பிராமணர்கள் இவருக்குப் பூஜை செய்கின் றனர். பலருக்கு இவர் குலதெய்வமாக விளங்குகிறார். இவர் உக்கிரம் தாங்க முடியாதிருந்ததாம். அதனால் இவருடைய சக்தியை ஒன்பது பிரிவுகளாக்கி ஊரைச்சுற்றி நிலைப்படுத்தியுள்ளனர். மேலும் அவருக்கு நேராக விநாயகரை நிலைப்படுத்தி வேகத்தை குறைத் தனர் என்று செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.

....

தில்லைச் சபை எனப்படும் கனகசபை மண்டபத்தின் முன்வரிசைத் தூண்களில் வரிசையாக குறவன் குறத்தி, பள்ளன் அவன் மனைவி பள்ளி ஆகிய நால்வரின் சிற்பங்கள் உள்ளன. இவை வடிவாலும் வனப்பாலும் உன்னதமானவை. தலபுராணத்தில் இவர்களைக் காவல் தெய்வங்களாக வீற்றிருக்கும்படி ஆன்மநாதர் அருள்புரிந் தார் என்று கூறப்பட்டுள்ளது. இந்த செய்திகளைத் தொடார்ந்து காணலாம்.

குறவன் - குறத்தி

தமிழரின் தொன்மையான நாட்டுப்புற தெய்வங் களில் முக்கியமானவர்கள் குறத்தியும் குறவனுமாவர். பெருந்தெய்வங்களின் வழிபாட்டு வளர்ச்சியால் அவை முழுவதுமாக வழக்கொழிந்து விட்டன.

முருகன் குறவனாகவும், வள்ளி குறத்தியாகவும் போற்றப்படுவது இங்கே சிந்திக்கத்தக்கது. குறவனாடல், குறத்தியிடம் குறிகேட்டல் முதலியன அவர்களுடைய தெய்வத் தன்மையை குறிப்பனவாகும். வாழ்வில் வருங்காலத்தில் நடப்பதை குறத்தியிடம் குறிகேட்பதன் மூலம் தெரிந்துகொள்ளும் வழக்கம் நெடுங்காலமாக இருந்து வருகிறது.

குறிசொல்லும் குறத்தி சிறுதெய்வ ஆலயங்கள் பலவற்றில் பூங்குறத்தி என்ற பெயரில் அமர்ந்து உள்ளாள். அவள் குறக்கூடையையும் கோலையும் ஏந்திக் காட்சியளிக்கிறாள்.

குறத்தியின் சிறப்புகளை விளக்கும் வகையில் தென் மாவட்டங்களில் பல குறவஞ்சி இலக்கியங்களில் தோன்றியுள்ளன. இவற்றில் குற்றாலக்குறவஞ்சி, மீனாட்சி யம்மைக்குறம், முதலியன குறிப்பிடத் தக்கனவாகும். திருவாரூர் தியாகேசர் பேரில் தியாசேகர் குறவஞ்சி என்ற நூல் பாடப்பட்டுள்ளது.

தென் தமிழ்நாட்டுக்கோயில்களின் தூண்களில் குறவன் குறத்தி சிற்பங்கள் பலஇடங்களில் இடம்பெற்று உள்ளன. இக்கோயில் தலவரலாற்றில் குறவன் குறத்தி அமைக்கப்பட்டதற்கான காரணம் கூறப்பட்டு உள்ளது.

நற்குணம் நிறைந்த வேடன் ஒருவன் தன் அழகிய மனைவியுடன் வாழ்ந்து வந்தான். அந்தக்குறத்தியின் அழகில் மயங்கிய குறவர்குலத் தலைவன் அவளை அடைய முற்பட்டு, குறவனுக்குப் பலவாறு இன்னல் தந்தான்.

குறவனும் குறத்தியும் திருப்பெருந்துறைப் பெருமானைச் சரணடைந்தனர். குறவர் தலைவன் தனது ஆட்களுடன் திருப்பெருந்துறையில் அடைக்கலம் புகுந்த குறத்தம்பதியரைச் சூழ்ந்து கொண்டான். ஆன்மநாதர் குறவனுக்கு வாள் தந்து போரிடும் படி ஆணையிட்டார் குறவன், தம்தலைவனையும் அவனுடைய ஆட்களையும் கொன்றான். குறவனும் குறத்தியும் நெடுநாட்கள் ஆன்மநாதருக்குப் பணிசெய்துவந்தனர். ஆத்மநாதப் பெருமான் அவர்களைத் தமது கோயிலைக் காக்கும்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



பள்ளன் பள்ளி

குறவஞ்சி இலக்கியங்களைப் போலவே பள்ளு இலக்கியங்களும் தனிச்சிறப்புப் பெற்றவையாகும். முக்கூடற்பள்ளு, திருமலை முருகன் பள்ளு, பறாளை விநாயகர் பள்ளு முதலியவை தனிச்சிறப்புப் பெற்றவைகளாகும். குறவஞ்சி மலைவளத்தைக் கூறுவது போலவே பள்ளு மருதத்தின் வளத்தைக் கூறுகிறது. இதன் பாட்டுடைத் தலைவர்களான பள்ளனும் – பள்ளியும் உள்ளனர். ஆவுடையார் கோயிலில் இவர்கள் அற்புதச் சிற்பங்களாகக் காட்சி தருகின்றனர்

பள்ளனும் அவன் மனைவியும் இங்கு இடம்பெற்றதற்கான வரலாற்றைத் தலபுராணம் கூறுகிறது. இவர்கள் பெயர் மாதங்கன் மாதங்கி என்பதாகும். மாதங்கன் இந்த ஆலயத்தில் கொம்பூதும் பணியைச் செய்து வந்தான். அவனுடைய பக்தியைக் கண்டு மகிழ்ந்த பரமன் நீயும் உன் மனைவியும் எனது காவல் தெய்வங்களாக இருங்கள் கொம்பூதி, பறையடித்து வழிபடுபவர்களுக்கு வரங்களைத் தாருங்கள் என்று கூறி வரமளித்தார். அதன்படியே இவர்கள் இங்கே இருந்து வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

பள்ளு நாடகங்களில் வரும் கோலத்திலே யே இவர்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனர்.

பள்ளி தலையில் நெற்றிச்சுட்டி சூரிய பிறை, சந்திர பிறை அணிந்திருக்கிறாள். தலையில் நான்கு வரி வட்டமான தலையணியை பிரபா மண்டலம் போல் தரித்திருக்கிறாள். கழுத்தில் செண்பக மாலைகள் கண்டசரம் அணிந்துள்ளாள். பதக்கத்துடன் கூடிய மணிச்சரம் மார்பில் தவழ்கிறது. காதுகளில் பெரிய தோடுகள் அணி செய்கின்றன. இரண்டு கைகளிலும் நீண்ட கதிர்கள் வைத்துக் கொண்டு நடனமாடுகிறாள். இந்த நடனமங்கை கண்ணையும் கருத்தையும் கவர்கிறாள்.

பள்ளன் நீண்ட கட்டையான மீசையை இடது கையால் முறுக்கிக் கொண்டிருக்கிறான். தோளில் நீண்ட குழல் வாத்தியத்தை வைத் துள்ளான். தலையில் வட்டமான பெரிய தலை யணியை அணிந்துள்ளான். அதில் குஞ்சலங்

சிறுதெய்வங்களாக இருக்கும்படி அருள்புரிந்தார். இதுமுதல் இவர்கள் காவல் தெய்வங்களாக இருந்து வருகின்றனர்.

இக்கோயில் வடிக்கப்பட்டுள்ள குறவன் குறத்தியர் சிற்பங்கள் உன்னத கலைப் படைப்புக்களாகும்.

இங்குள்ள குறவன் வலதுகையில் கொண்டுள்ள நீண்ட கத்தியால் காலடியில் வீழ்ந்து கிடக்கும் குறத்தலைவனைக் குத்திக் கொல்லு கிறான். இடது கை கேடயத்தைத் தாங்குகிறது. தலைமாலை அணிந் துள்ளான். முன்கை, முழங்கை, தோள் ஆகியவற்றிலும் பலவகையான அணிகளை அணிந்துள்ளான். தலையில் தலைமுடியை திரட்டிக் கட்டியுள்ளான். தலைப்பாகையில் வைரப்பட்டையும், முத்து வடத்தையும் அணிந்துள்ளான். தோளில் நீண்ட மேலாடை அணிந்து உள்ளான்.

குறத்தி வரிவரியான இடையாடை அணிந்துள்ளாள், இடையில் முன்வரிசையாக மேகலைகள் உள்ளன. நீணட தோள் மாலை அணிந்துள்ளாள். கழுத்தில் மூன்று சரங்களும் மாா்பில் முத்தணியும் உள்ளன. தோளில் குறக்கூடையயைத் தாங்கியுள்ளாள், முன்கை, முழங்கை தோள் ஆகியவற்றிலும் நேர்த்தியான மணிச்சரங்கள் அணிந்துள்ளாள் தலையினை கொண்டையிட்டு முடிந்துள்ளாள். சூரிய, சந்திர பிறை, நெற்றிச்சுட்டி ஆகியவற்றை தரித்துள்ளாள், காதுகளில் பெரியவட்டமான தோடுகள் மிளிர்கின்றன.

குறத்தியின் பீடத்தில் குறவனும் – குறத்தியும் கூடிமகிழும் காட்சி உள்ளது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கள் தொங்குகின்றன. ஓரத்தில் அதை இழுத்துக்கட்டிய முடிச்சுக்களும் காட்டப் பட்டுள்ளது. மார்பில் வீரச்சங்கிலியையும் பதக் கத்துடன் கூடிய நீண்ட சங்கிலியையும் அணிந் துள்ளான். வலதுகையில் உறைவுடன் கூடிய குத்து வாள் உள்ளது. சுழன்றாடும் கோலத்தில் உள்ளான்.

ஆட்டக் கலைஞர்கள் கண்ணாடி பதித்த வட்டமான பூக்கள் போன்று மரத்தால் செய்த அணிகளை அணிந்து ஆடுவர் அதை சிற்பி அப்படியே கல்லில் படைத்துள்ளான்.

இவர்களைப் புராணம் மாதங்கன் மாதங்கி என்று குறிக்கின்றது.

குறிப்பு : நடைமுறையில் இவர்களை அர்ச்சு னன் தபசைக் கலைக்கச் சிவபெருமானும் உமையும் கொண்ட வேடன் வேடச்சி கோலம் என்றும் சோமாசி மாற நாயனார் யாகத்திற்கு எழுந்தருளிய போது கொண்ட புலையன் புலைச்சி வேடம் என்றும் கூறுகின்றனர். ஆனால் சிற்ப அமைதி அவ்வாறில்லை. வேடன் வேடச்சி கோலத்தில் சுவாமியும் அம்பிகையும் வில்லேந்தித் தோலாடை அணிந்து தலையில் மயிற்பீலி சூடியிருப்பர். வேட்டை நாய்களும் சூழ்ந்து வரும். புலையன் புலைச்சி வடிவத்தில் பெருமான் இறந்த கன்றுக்குட்டியைத்



தோளிலும் அம்பிகை மதுக்குடத்தைத் தலையில் ஏந்தி வருவர். விநாயகரும், முருகனும் சிறு குழந்தைகளாக அவர்களுடன் விளையாடி வருவர். ஆனால் இங்கி ருக்கும் சிற்பங்கள் அவ்வாறில்லாமல் மகிழ்வில் நடனமாடிக் கொண்டிருக்கின்றன என்பது நோக்கத்தக்கது.

மக்களின் நம்பிக்கைகளும் வழிபாடும்

மக்கள் எளிய முறையில் வாழ்ந்த போதிலும் நோய் நொடியற்று, கவலை துன்பமற்று இன்பமாகவே வாழ விரும்புகின்றனர். வாழ்வில் இடையூறு நேரும்போது அவற்றை இறைவனிடம் முறையிட்டால் அவர் தீர்த்து வைப்பார் என்று நம்புகின்றனர். தீர்ந்து போன துன்பங் களால் மகிழ்ச்சியடைந்து காணிக்கைகளைச் செலுத்து கின்றனர். மக்கள் இறைவன் மீது கொள்ளும் அளவற்ற நம்பிக்கையே வாழ்வை இன்பமயமாக்குகிறது. திருப் பெருந்துறையில் நலம் தரும் நம்பிக்கையின் பாற்பட்ட வழிபாடுகளைக் காணமுடிகிறது.

இவ்வட்டாரத்தில் விளையும் தானியம் காய்கறி ஆகியவற்றை அறுவடை செய்யும்போது முதலில் வருவ தில் சிறு பகுதியைக் கோயிலுக்கு அளிக்கின்றனர். அவை சமைத்து நிவேதனம் செய்யப்பட்டு வினியோகிக் கப்படுகிறது.

பில்லி, சூன்னியம், அர்த்தமற்ற அச்சம், மனச்சோர்வு ஆகியவை நீங்குவதற்கு வீரபத்திரர்களை வழிபடுகின் றனர். வீரபத்திரர் மீது பாடப்பட்டுள்ள சத்ரு சங்கார மாலையைப் படிப்பதால் எதிரிகள் தொலைவர் என்று உறுதியாக நம்புகின்றனர்.

குருந்தடி மண், கருங்குட்டம், வெண்குட்டம் போன்ற தோல்வியாதிகளைப் போக்கும் என்று புராணத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

அம்பிகையின் தொட்டி தீர்த்தம் அதிக மகிமை உடையதாக சொல்லப்படுகிறது. அதில் மூழ்குதலும் நீரைப் பருகுதலும் தீவினைப் பயனை மாற்றி நல்வினைப் பயனைத் தரும் என்கின்றனர்.

இறைவன் இத்தலத்தில் சூட்சும ஜோதியாக விளங்குகின்றான். அதைப் போற்றும் வகையில் ஏராளமான தீபங்களை ஏற்றி வழிபடவேண்டு மென்று கூறப்படுகிறது. தீபங்களை ஏற்றுவதால் புண்ணியம் கிடைக்கும். ஞானமும், செல்வமும் பெருகும்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நட்சத்திரங்கள் வழிபாடு

★ நட்சத்திரக் கூட்டம் திருவாசல் சிற்பம் திருப்பெருந்துறை

ஆவுடையார் கோயில் ஆலயத்துடன் நட்சத்திர வழிபாடு இணைந்தேயுள்ளது அண்டப்பெருவெளியில் எண்ணில்லாத நட்சத்திரக் கூட்டங்கள் உள்ளன. அவற்றின் ஈர்ப்புவிசையே அவை இயங்குவதற்குக் காரணம். அவற்றில் ஏற்படும் இயக்க மாறுதல்கள் உலக உயிர்களின் வாழ்விலும் மனத்திலும் அனேக மாறுதல் களை உண்டாக்கிப் பலன் தருகின்றன.

அண்டவெளியில் எண்ணிலாத நட்சத்திரங்களில் இருப்பினும் அவற்றில் இருபத்தேழு நட்சத்திர கூட்டங் கள் சிறப்புப் பெறுகின்றன. அவற்றிற்கு அசுவினி பரணி... என்று பெயர்களைச் சூட்டியுள்ளனர்.

ஆவுடையார் கோயிலில் கருவறை பேரண்டப் பெருவெளியாதலின் அதைக்குறிக்கும் வகையில் இருப்பத்தேழு நட்சத்திரங்கள் திருவாசிகைத் தீபங் களாக ஏற்றப்பட்டுள்ளன.

கார்த்திகை தீபத்தின் போது அபிஜித் நட்சத்திரத் துடன் 27 நட்சத்திரங்களும் தீபச் சுளுந்துவில் ஆவா கனம் செய்யப்பட்டு அந்தச் சுளுந்து தீபத்தால் சுவாமிக் கும் அம்பிகைக்கும் தீபாராதனை செய்யப்படுகிறது.

மேலும் சிவானந்த மாணிக்கவாசகர் சந்நிதியின் நிலைவாசலுக்கு மேலே பெயருடன் நட்சத்திரக் கூட்டங் கள் பொறிக்கபட்டுள்ளன. ஒவ்வொரு நட்சத்திரத்தையும் ஒரு பூ குறிக்கும் வகையில் அமைந்துள்ளது. எடுத்துக் காட்டாக கார்த்திகை கூட்டத்தில் ஆறுநட்சத்திரங் களைக்குறிக்கும் வகையில் ஆறுபூக்கள் இக்கட்டத் துக்குள் இடம் பெற்றுள்ளன. இப்படியே ஒவ்வொரு நட் சத்திரக் கட்டங்களுக்குள்ளும் அதன் அதன் எண்ணிக் கையில் பூக்கள் பொறிக்கப்பட்டு உள்ளன. இவற்றுடன் அபிஜித் நட்சத்திரத்தை உருவமில்லாமல் ஒருகட்டத் தில் பெயர் மட்டும் பொறித்துக் காட்டியுள்ளனர்.

இருபத்தேழு நட்சத்திரங்களும் பன்னிரண்டு இராசிகளில் விரவியுள்ளன. இவற்றைக்குறிக்கும் வகையில் பன்னிரண்டு ராசிகளையும் அவற்றோடி ணைந்த நட்சத்திர தேவதைகளையும் நந்தீசுவர மாணிக்கவாசகர் மண்டபவிதானத்தில் காட்டியுள்ளனர். இவற்றில் சிலர் ராசிகளின் மீது பயணம் செய்கின்றனர். இவ்வகையில் மேஷம், ரிஷபம், மகரம், கடகம் (நண்டு), விருச்சிகம் (தேள்) ஆகியவற்றின் மீது அமர்ந்த நட்சத்திர தேவதைகளையும் அவற்றை வழிநடத்தும் தேவதை களையும் காணலாம். இது வேறெந்த தலத்திலும் இல்லாத புதுமையான விதானச் சிற்பமாகும்.

தியாகராஜ மண்டப விதானத்திலும் ராசிக்கட்டம் இடம் பெற்றுள்ளது. அவற்றில் மேஷம், மகரம், தேள் ஆகியவற்றின் மீது ராசி தேவர்கள் அமர்ந்துள்ளனர்.

நவக்கிரக வழிபாடு

திருப்பெருந்துறையில் கனக சபைக்கு மேற்கில் அமைந்துள்ள தூண்களில் நவக்கிரகங் கள் தூண்களில் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு தூணில் மேற்கு நோக்கி சூரியனும், கிழக்கு நோக்கி புதனும் வடக்கு, தெற்கு, நோக்கியவாறு உஷா பிரத்யுஷாவும் அமைந்துள்ளனர். அடுத்த தூணில் சுக்கிரன், செவ்வாய், சனி, குரு ஆகிய நால்வர் இடம் பெற்றுள்ளனர். அதனை அடுத்த தூணில் ராகு, கேது, இடம் பெற்றுள்ளனர். மற் றோர் தூணில் சிவராத்திரி புராணக்கதை, மங்கள விநாயகர் சந்திரன் ஆகியோர் இடம் பெற்று உள்ளனர்.

சக்தி வழிபாட்டை விளக்கும் தந்திர நூல்களில் தேவியைப் போலவே ஸ்ரீ வித்தையும் கணேச,கிருக நட்சத்திர, யோகினீ, ராசி, பீடம் என்ற ஆறுவகையான வடிவங்களுடன் விளங்குகிறது என்று கூறப்பட்டுள்ளது. இதை உணர்த்தும் ரகசியகுறியீடுகளாகவே, இங்கு ராசிக்கட்டங்கள், நட்சத்திர கூட்டங்கள் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன என்பர். இவற்றின் விளக்கத்தை ஸ்ரீ வரி வஸ்யா ரகஸ்யம் என்ற பாஸ்கரராயரின் நூலில் காணலாம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருவாவடுதுறை ஆதீனமும் ஆவுடையார் கோயிலும்

திருப்பெருந்துறை ஆன்மநாத சுவாமி எனப்படும் பெரிய கோயிலையும் சுற்றியுள்ள கயிலாயநாதர் மடத்துவாசல் பிள்ளையார், முதலான ஆலயங்களையும் திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம் அவர்கள் பரிபாலித்து வருகின்றார்கள்

இங்கு தெற்கு ரத வீதியில் கிளைமடம் அமைக்கப் பட்டுள்ளது அதில் குருமகாசந்நிதானத்தின் பிரதி நிதியாக தம்பிரான் சுவாமிகள் வீற்றிருந்து பூசைகளைக் கவனிப்பது வழக்கம். இங்கு கட்டளை விசாரணையாக வரும் தம்பிரான்களுக்கு குருந்தமூலத்தில் உருத்திராட் சமுடிசூட்டி பதவியளிப்பர். அவர்கள் ஆளுடையார் துணை என்று எழுதுவது வழக்கம். இவர்களுக்கெனச் செங்கோலும் விருதுகளும் உள்ளன.

இந்த ஞானபரம்பரையில் பதினோராவது குருமகாசந் திதானமாக வீற்றிருந்து செங்கோலோச்சியவர் சீர்வளச்சீர் பின்வேலப்பதேசிகர் ஆவார். இவர் தமிழ்ப்பணி சமுதாயப்பணி திருக்கோயில் பணி என்று பலபணிகளைத் திறம்படச் செய்தவர்.

குருமகாசந்நிதானம் இருமொழியிலும் சிறந்த புலமையாளர். அவர் திருப்பறியலூர் புராணத்தை வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

இவரிடம் தீட்சை பெற்று துறவறம் அடைந்த, மாதவச்சிவஞான சுவாமிகள் சிவஞான போதத்திற்கு மாபாடியம், சிற்றுரை, காஞ்சிப்புராணம் முதலிய பலநூல்களை இயற்றியுள்ளார். இவருடைய மாணக்கராகிய கச்சியப்பமுனிவர் கவிராட்சசன் என்று போற்றப்பட்டார். இவர் காஞ்சிப்புராணம், விநாயகபுராணம் முதலிய நூல்களை இயற்றியவராவர். சென்னை பிரசன்ன விநாயகர் கோயிலில் விநாயக புராணத்தை அரங்கேற்றம் செய்து அதன்மூலம் கிடைத்த பெரும்பொருளைக் கொண்டு திருவாவடு துறையில் ஆதிமுதல்வர் நமச்சிவாய மூர்த்திகளின் ஆலயத்தை கற்றளியாக்கினார்.

சிறந்த அருளாளராகிய பின்வேலப்ப தேசிகர் பலருடைய நோய்களைத் தீர்த்தவைத்து அற்புதம் நிகழ்த்தியுள்ளார். நெடுநாட்களாக வயிற்றுவலியால் அவதிப்பட்ட சேதுபதி காத்ததேவரை சுவாமிகள் விபூதி கொடுத்து குணமாக்கிய செய்தியை ஒரு செப்பேட்டின் மூலம் அறிகிறோம். இவர்காலத்தில் திருப்பெருந்துறை ஆலயத்திற்கு நிலக்கொடைகள் வழங்கப்பட்டதை மூன்று செப்பேடுகள் தெரிவிக்கின்றன.

பல அரும்பணிகளைச் செய்த இந்தச் சந்நிதானம் அவர்கள் ஒரு வைகாசித்திங்கள் பூராட்டாதி நாளில் பரிபூரணம் அடைந்தார்கள். அருடைய ஞானச்சமாதி தெற்கு ரத வீதியில் கோயிலுக்கு அருகில் உள்ளது. ஓதுவார்களால் இரண்டுகால பூசை நடத்தப்படுகிறது. ஆண்டுதோறும் வைகாசி புரட்டாதியில் குருபூசை நடைபெறுகிறது. இவருடைய சமாதியில் உடற்பிணி உள்ளவர்களும் மனக் கலக்கம் உள்ளவர்களும் வந்து தரிசித்து வழிபட்டு நலமடைகின்றனர்.

ஆவுடையார் கோயில் தூண்களில் திருவாவடுதுறை ஆதீனத்து முனிவர்கள், தம்பிரான்கள், சந்நிதானங்கள் ஆகியோரின் பெரிய திருவுருவங்கள் தூண் சிற்பங் களாக அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் குறிப்பிடத் தக்கவை காறுபாறு வைத்தியநாதத் தம்பி ரான், மேலகரம் சுப்பிரமணிய தேசிகர், முதலியவர்களின் திரு உருவங்களாகும்.

இப்போது திருவாவடுதுறை ஆதீனத்தில் குருமகாசந்நிதானமாக வீற்றிருந்து நடத்திவரும் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் ஆத்மநாத சுவாமி மீதும் ஆனந்த நடராசர் மீதும் அளப்பரிய பக்தி கொண்டவர்கள். ஆத்மநாத சுவாமி ஆலயத்திற்கு 27-06-1990-ஆம் ஆண்டில் ஒருமுறையும் 03-06-2006-ல் இரண்டாவது முறை யாகவும் பெரிய குடமுழுக்கு விழாக் களை நடத்தி வைத்துள்ளார். இவருடைய ஆட்சியில் கோயில்கள் சிறந்த முறையில் பரிபாலிக்கப்பட்டு வருகின்றன.

பதினோராவது சந்நிதானத்தின் சமாதியிலும் குடமுழுக்கு விழா 25-05-2006 வியாழக்கிழமை நடைபெற்றுள்ளது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

செங்கோல் விழா

சிவராஜதானியின் தலைநகராக விளங்குவது ஆவுடையார் கோயில். இங்கு சிவபெருமான் தவயோக ராஜனாக விளங்கி செங்கோலேந்திக் காட்சியளிக்கிறான்.

மதுரையில் மீனாட்சியம்மனுக்குப் பட்டம் சூட்டி செங்கோல் அளித்தும், சோமசுந்தரருக்குப் பட்டம்கட்டி செங்கோல் அளித்தும் விழா கொண்டாடுவது போலவே ஆவுடையார் கோயிலிலும் செங்கோல் அளிக்கும் விழா நடத்தப்படுகிறது. இதற்கென வழிவழியாகப் போற்றி வரும் செங்கோல் திருமடத்தில் உள்ளது.

விஜயதசமியன்று அதை பூஜை செய்து வேலப்ப தேசிகர் சந்நிதியில் வைப்பார்கள். கட்டளைத்தம்பிரான் ஆலயத்திற்கு வந்து ஆன்மநாதரை வழிபட்ட பின் செங்கோலைக் கொள்வார்.

ஜோதிடர்களுக்கு கிரகப்பிரதியாக தட்சிணைகள் அளிப்பர். பின் புண்ணிய வயல் சென்று அங்குள்ள வன்னி மரத்தடியில் வாஸ்து புருஷ பீடத்தில் செங்கோலை வைத்து சிறப்பு பூஜைகள் நடத்தப்படும். அங்கு குடிகளுக்குத் தாம்பூலம் அளிப்பர்.

பல்வேறு அரசர்களால் அளிக்கப்பட்ட வாள் ஈட்டி அம்பு முதலிய ஆயுதங்களுடன் அன்பர்கள் சூழ்ந்து வர செங்கோலை ஏந்தி தம்பிரான் சுவாமிகள் பவனி வருவர். செங்கோலை திருமடத்திலுள்ள நடராஜர் சந்நிதியில் வைப்பர்.

பின்னர் முருகனை குதிரை வாகனத்தில் ஊரின் தென்மேற்கு திக்கிலுள்ள வன்னி மரத்தடியில் எழுந்தருளச் செய்து அவருடைய சக்திவேலுக்கு பூஜை நடத்துவர். பிறகு அங்கு அம்புபோட்டுவிட்டு முருகன் ஆலயத்திற்கு எழுந்தருள்வார்.

இசைவழிபாடு...

ஆவுடையார் கோயிலுக்கு உரிய இசைக்கருவி தவள சங்கமாகும். பூஜைகளின் போது சங்குமுழங்குவர். புல்லாங்குழல், முகவீணை முதலியனவும் இசைக்கப்படுகின்றன திருச்சின்னம் ஊதப்படுகிறது. மாலையில் கொலுமேளம் வாசிக்கப்படும் அர்த்தஜாம பூஜையில், ஊஞ்சல் லாலி, கப்பல், கதவுதிறக்கும்பாடல், தாலாட்டு எச்சரிக்கை முதலியன வாசிக்கப்படுகின்றன. விழாக்காலங்களில் உவச்சர்கள் லவண்டை அடிக்கின்றனர் கொம்பு, வளைகொம்பு, எக்காளம், கௌரிகாளம் முதலியவற்றை ஊதும் வழக்கமும் இருந்துள்ளது. நம்பிமார்களின் கூட்டத்தின் வருகையைத் தெரிவிக்க திருச்சின்னம் ஊதுவர்.

ஜல்லரி (கெத்து) வாத்தியம்



திருவாரூருக்கு பஞ்சமுக வாத்தியமும், பாரிநாயனமும் சிறப்பு வாத்தியங்களாக உள்ளன. திருவண்ணாமலை அண்ணாமலையாருக்கு சென்டை வாத்தியமும் திருச்செங்காட்டங்குடி பைரவருக்கு கல்லவடமும் சிறப்பு வாத்தியங்களாக உள்ளன. இதுபோன்று ஆன்மநாதரின் தேவியான யோகாம்பிகைக்குரிய வாத்தியமாக இருப்பது கெத்து வாத்தியமாகும்.

திருப்பெருந்துறை யோகாம்பிகை சந்தியில் பதினெட்டு தாள வாத்தியக் கருவிகளில் ஒன்றான ஜல்லரி என்ற இசைக்கருவி (கெத்து வாத்தியம்) தினமும் சாயரட்சை முடிந்ததும், வாசிக்கின்றனர்.

நான்கு தந்திகளுடன் கூடிய இக்கருவி பார்ப்பதற்கு வீணையைப் போலவே உள்ளது. இரண்டு குச்சிகளைக் கொண்டு தந்திகளில் குறிப்பிட்ட இடங்களில் தட்டி ஜலதரங்கம்போல் வாசிக்கப்படுகிறது.

ஒரு சமயம் தஞ்சை மன்னர் சேதுயாத்திரை மேற்கொண்டு திருப்பெருந்துறை வந்தார். அவரை சேதுபதி மன்னர் எதிர் கொண்டழைத்து சிறப்பித்தார். இருவரும் பரிவாரங்களுடன் ஆத்மநாதரையும் யோகாம்பிகையும் வழிபட்டனர். தஞ்சை இசைக்கலைஞர்கள் யோகாம்பிகை சந்நிதியில் இசைநிகழ்ச்சியை நடத்தினர். அன்றிரவு யோகாம்பிகை இரண்டு மன்னர்களின் கனவிலும் தோன்றி இன்று மாலை நடத்திய இசை நிகழ்ச்சி எனது தவயோக சாதனைக்குத் துணை நின்று அமைதி தந்தது இனி தொடர்ந்து இசைக்க என்று ஆணையிட்டார். தஞ்சை மன்னர் இசையறிஞர்களை இங்கு குடியேற்றினார். சேதுபதிமன்னர் அவர்களுக்கு நிலக்கொடை அளித்தார். அன்று முதல் அம்பிகை சந்நிதியில் கெத்து வாத்தியம் வாசிக்கப்பட்டு வருகிறது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆவுடையார் கோயிலில் ஆகமங்கள் கூறும் அத்துவா வழியாடு

சிவபெருமானால் அருளப் பெற்ற ஞானநூலான ஆகமங்களின் தத்துவங்களை விளக்கும் நிலையமாக இக்கோயில் விளங்குகிறது. மாணிக்கவாசகர் சிவாக மங்களைச் சிறப்பித்துப் போற்றுவதைத் திருவாசகத்தில் பல இடங்களில் காணலாம்.

இறைவன் ஆகமத்தைத் திருமேனியாகக் கொண்டி ருப்பதை "ஆகம்ம் ஆகி நின்று அண்ணிப்பான்" என்றும் சிவாகமங்களை மகேந்திர மலை மேல் இருந்து உபதேசித்ததை, "மன்னுமலை மகேந்திரம் அதனில் சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும் என்றும் குறித்துள்ளார்.

உலகம் பரவெளியில் இருந்து தோன்றி வளர்ந்து மீண்டும் ஒடுங்குவதற்குரிய காரணப் பொருட்களாக அத்துவாக்களைச் சிவாகமங்கள் கூறுகின்றன. அத்துவா என்பதற்கு வழி என்பது பொருள் உலகம் பரசிவத் திலிருந்து இறங்கி வந்து மீண்டும் அங்கேயே ஒடுங்கும் வழியையே ஆகமங்கள் அத்துவா என்று சொல்லால் குறிக்கின்றன. சித்தாந்த நூல்கள் மாயை தன் செயல்களால் ஆன்மாக்களைப் பற்றி நிற்கும் வழி என்று அத்துவாக்களுக்கு விளக்கம் கூறுகிறது.

அத்துவாக்கள் ஆறு வகைப்படும். அவை. 1 தத்து வம், 2. கலை, 3. புவனம், 4. வர்ணம், 5. பதம், 6. மந்திரம் என்பனவாகும். இவற்றில் தத்துவம் கலை, புவனம், என்ற மூன்றும் (காண்பதற்குரிய) பொருள் வடிவானவை. எஞ்சிய, வர்ணம், பதம், மந்திரம், ஆகிய மூன்றும் ஒலி வடிவானவை. இவற்றைப் பொருட் பிரபஞ்சம், சொற் பிரபஞ்சம் எனவும் கூறுவர்.

இவை ஒன்றை ஒன்று சார்ந்து நிற்பன. இணைந்த பற்சக்கரங்களைப் போன்று ஒன்று இயங்கினால் தான் மற்றது இயங்கும் தன்மை உடையது.

சிவபூசையின் போது இந்த அத்துவாக்களைச் சிவபெருமானின் திருமேனியாக உருவம் செய்து போற்றித் துதிக்கின்றனர். ஸ்ரீ குமரகுரு சுவாமிகள் கந்தர்கலிவெண்பாவில் சிவபெருமானுக்கு திருமுடி களாகவும், மார்பு, குய்யம், முழந்தாளோடு பாதமும் ஆக ஐந்து கலைகள் உள்ளன என்று கூறுகிறார். மேலும் புவனங்கள் ரோமங்களாகவும், வண்ணம் தோலாகவும், மந்திரங்கள் ரத்தமாகவும், பதங்கள் நரம்புகளாகவும் தத்துவங்கள் எலும்பு மஜ்ஜை முதலான சப்த தாதுக்களாகவும் உள்ளன என்றும் குறித்துள்ளார். இது இறைவன் அத்துவாக்களில் நிறைந்திருப்பதைக் குறிப்பதாகும். ஆலய வழிபாட்டிலும் இந்த அத்தவாக்கள் தனிச் சிறப்புடன் போற்றப்படுகின்றன. இவற்றின் வடிவம், வண்ணம், அமைப்பு ஆகியவற்றை ஆகம நூல்கள் விரிவாக கூறுகின்றன.

ஆவுடையார் கோயிலிலுள்ள கனகசபை எனப்படும் குதிரைச்சாமி மண்டபத்தில் ஆகமங்களில் கூறப்பட் டுள்ள ஆறு அத்துவாக்களின் திருவுருவங் களும் பெயர் களுடன் பொறிக்கப்பட்டுள்ளன.

மேலும் ஆகமங்களில் கூறப்படும் அஷ்ட மூர்த்தங்கள் மகாமண்டபத்தின் விதானத்தில் புடைப்புச் சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன. இன்னும் அனேக வகையில் ஆகமங்களை விளக்கும் சிற்ப ஓவியக் காட்சிகளை இக்கோயிலில் தீட்டியுள்ளனர்.

இவை யாவற்றிலும் மேலாக ஆகமங்களின் சாரமான சைவ சித்தாந்தத்தில் கூறப்பட்டுள்ள அத்து வாக்களைக் குறிக்கும் வகையில் அனேக திருவிளக்குகள் பொருத் தப்பட்டுள்ளன. இவை சித்தாந்த தீபங்கள் என்று போற்றப் படுகின்றன. அத்துவாக்களின் வகைக்கேற்ற எண்ணிக் கையில் இங்கு விளக்குகள் அமைக்கப்பட்டு தீபங்கள் ஏற்றப்பட்டுள்ளன. இவற்றின் விளக்கத்தை கீழே காணலாம்.

❖❖❖

பரவெளியைக் குறிக்கும் கருவறை

ஆதியில், உலகமும் பேரண்டமும் தோன்றுவதற்கு முன்பாக எல்லையற்ற பரந்தவெளி மட்டும் இருந்தது. அந்த வெளியில் இறைவன் முதலில் நட்சத்திரக் கூட்டங்களையும் கோள்களையும், உலகத்தையும் அவற் றில் உயிர்தொகுதிகளையும் படிப்படியாக உண்டாக் கினான். பரவெளியே எல்லாவற்றையும் தன்னுள் அடக் கிக்கொண்டுள்ள மகாசக்தி என்பதால் இங்குள்ள கருவறை பரவெளியாக சித்தரிக்கப்பட்டுள்ளது. பரவெளியான பேரண்டப் பெருவெளியைக் குறிக்கும் குறியீடு எண்ணிலாத நட்சத்திரங்களாகும். அனைத்து நட்சத்திரங்களையும் இங்குகாட்ட முடியாது என்பதால் இருபத்தேழு நட்சத்திரங்களை கருவறையில் இருபத் தேழு தீபங்களாகப் பிரபாவளியில் அமைத்துள்ளனர்.

அகண்ட வெளியில் உலகைப் படைத்து காத்து அழித்து வழி நடத்துவோர் முறையே பிரம்மா, விஷ்ணு, ருத்திரர், என்னும் மும்மூர்த்திகள். இவர்கள் முறையே சூரிய, சந்திர, அக்னி, மண்டலங்களில் வீற்றிருக்கின்றனர். இதைக் குறிக்கும் வகையில் மஞ்சள்நிறம், பச்சைநிறம், சிவப்புநிறம், கொண்ட மூன்று விளக்குகள் பிரபாமண்டலத்தில் இடம்பெற்றுள்ளன.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இவை மூன்று வண்ணம் கொண்ட கண்ணாடிகளுக்குப் பின்னே ஏற்றப்பட்டுள்ளன.

தத்துவ தீபங்கள்

அத்துவாக்களில் முதலில் இடம் பெறுவது தத்துவங்கள் ஆகும். தத்துவங்கள் 96 வகையானவை. இவை அகக்கருவி, புறக்கருவி என இருவகைப்படும்.

உலகத்திற்கு அடிப்படையான (நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற பஞ்சபூதங்கள் உயிர்கள் கண்டு, கேட்டு, தொட்டு, ருசித்து, முகர்ந்து பெறும் அனுபவ மாகிய தன்மாத்திரைகள் ஐந்து, பேசுதல், நடத்தல், பற்றுதல், கழித்தல், உபத்தம், ஆனந்தமடைதல் ஆகியவற் றிற்கான கன்மேந்திரியங்கள் ஐந்து ; சுரோத்திரம் முதலான ஞானேந்திரியங்கள் ஐந்து ; மனம் அகங்காரம் புத்தி, சித்தம் எனும் அந்தக்கரணங்கள் நான்கு; புருடன், அராகம், வித்தை, கலை, நியதி, காலம், மாயை எனும் ஏழு; சுத்தவித்தை ஈச்சுவரம், சாதாக்கியம், விந்து நாதம், எனும் சிவதத்துவங்கள் ஐந்து ஆகியவை சேர்ந்து முப்பத்தாறு ஆகும். இவற்றை அகக் கருவிகள் என்று அழைக்கின்றனர்.

எஞ்சிய 60 தத்துவங்களை இரண்டாம் தொகுதி யாகக் கூறுவர். இவை பஞ்சபூதங்களின் செயல்களான இருபத்தைந்து; வாக்காதி செயல்களின் வகைகள் ஐந்து; நாடிகள் பத்து; வாயுக்கள் பத்து; வாக்குகள் நான்கு; ஏடனை மூன்று; குணங்கள் மூன்று ஆகியவை கூடி அறுபதாகும். இவை புறக்கருவிகளாகும்.

முதலில் சொன்ன 36 தத்துவங்களைச் செயற்படுத்த 36 தத்துவ அதிபர்கள் உள்ளனர். இவர்களுடைய வண் ணம் வடிவங்களைப் பற்றிச் சித்தாந்த நூல்கள் விரிவாகக் கூறுகின்றன.

உலகமும் அதிலுள்ள பொருட்களும், அவற்றால் பெறும் பயன்களும் இந்த 96 தத்துவங்களுக்கு உள்ளே அடங்கும்.

முதல் தொகுதியில் கூறப்பட்ட 36 தத்துவங் களைக் குறிக்கும் (36) விளக்குகளைக் கொண்ட தீபமாலை தேவசபையில் உள்ளது. இந்த இடம் அமுது மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. தத்துவங்களுக்கு அதிபதியான தேவர்கள் இந்த விளக்குகளில் வீற்றிருந்து பிரகாசித்துக் கொண்டிருக்கின்றனர்.

கலாதீபங்கள்

தத்துவங்களுக்கு அடுத்தப்படியாக விளங்குவது கலைகள் ஆகும். கலைகள் என்பதற்கு ஒளிமிகுந்த பகுதிகள் என்பது பொருள். மேலே குறித்த தத்துவங்கள் இந்த ஐந்து கலைப் பகுதிக்குள் அடக்கம். இவை நிவர்த்திக் கலை, பிரதிஷ்டா கலை, வித்யா கலை, சாந்தி கலை, சாந்தியாதீத கலை என்ற ஐந்து பகுதிகளாகும். இவற்றிற்கு முறையே பிரம்மா, விஷ்ணு, ருத்திரர், மகேசர், சதாசிவர், என்பவர்கள் அதிபதிகள்.

இவர்கள் யாவரும் ஐந்தொழிலைத் தனித் தனியே நடத்த இயலும் என்றாலும், பிரம்மாவுக்குப் படைத்தலும், விஷ்ணுவுக்குக் காத்தலும், ருத்திரருக்கு அழித்தலும், மகேசருக்கு மறைத்தலும், சதாசிவருக்கு அருளலுமே முதன்மைத் தொழில்கள் இவர்கள் ஒவ்வொருவருக்கும் வியூகர் எனப்படும் நான்கு உதவியாளர்கள் உள்ளனர்.

இக்கோயிலில் கருவறை பரவெளியாகச் சித்தரிக் கப்பட்டிருப்பதால் அதனுள் வியாபித்துள்ள ஐந்து பாகங்களான ஐந்து கலைகளைக் குறிக்கும் வகையில் ஐந்து விளக்குகள் இங்கு ஒன்றின் கீழ் ஒன்றாக அமைக் கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றிலும் அதி தேவதை யும் அவர்களுடைய நான்கு வியூக மூர்த்திகளும் ஐந்து தீபங்களாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றனர். இந்தக் கருவறை ஆனந்தசபை என்றழைக்கப்படுகிறது.

புவன தீபங்கள்

ஐந்து கலைகளால் பிரகாசிக்கும் இந்த மாயா கோளத்தில் எண்ணில்லாத புவனங்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு அதிபர் உள்ளனர். இவர்களைப் புவனாதிபர்கள் என்று அழைப்பர். மேலே குறித்த புவனங்களைச் சுற்றி அனேக உபபுவனங்கள் உள்ளன. இவற்றின் பெயர்களும் இவற்றை வழிநடத்தும் அதிபர்களின் பெயர்களும் சிவாகமங்களில் கூறப் பட்டுள்ளன. இந்த புவனங்களில் உயிர்கள் தங்கி இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றன.

மேலே குறித்த 224 புவனங்களைக் குறிக்கும் வகை யில் ஆவுடையார் கோயிலில் தேவசபையின் வாயிலில் 224 விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இவற்றில் புவனாதிபர்கள் ஒளி தீபங்களாகப் பிரகாசிக்கின்றனர்.

இனி அத்துவாக்களில் ஒலி வடிவாக இருக்கும். வர்ணம், பதம், மந்திரம், ஆகியவற்றைக் காணலாம்.

வர்ணதீபம்

வர்ணம் என்பது தனித்தனி எழுத்துக்கள், ஆதி மொழியில் இவை அ முதல் க்ஷ வரையிலான 51 எழுத் துக்கள். இவை ஐந்து கலைகளில் பரவி நிற்கின்றன. இவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தேவதை உள்ளனர். இவர்கள் சிவம், சக்தி, பதினாறு வடிவங் களான கணேசர் சப்தமாதர் முதலியோராவர். இந்த வர்ணங்களைக் குறிக்கும்வகையில் 51 விளக்குகளைக் கொண்ட வர்ண தீபம் கருவறைக்கு முன்னால் அமைந்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

துள்ள அர்த்த மண்டபத்தில் உள்ளது. இம்மண்டபத்தை சித் சபை என்று அழைக்கின்றனர்.

பத தீபங்கள்

வர்ணங்கள் (எழுத்துக்கள்) சேர்ந்து பதங்கள் உருவாக்கப்படுகின்றன. தனித்துக் குறிப்பிட்டு பொருட்களை அறியவும் கருத்துக்களைக் புரிந்து கொள்ளவும் பதங்களே துணை நிற்கின்றன. ஆகமங்களில் அடிப் படைப் பதங்களாக எண்பத்தியோரு பதங்கள் சொல்லப் பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனி தேவதைகள் உள்ளனர். 81 தீபங்களைக் கொண்ட பத தீபமாலை கனக சபையில் எழுந்தருளியுள்ள குதிரைச் சுவாமியின் பின்புறம் அமைந்துள்ளது.

மந்திர தீபங்கள்

ஆகாயத்தில் பரவியுள்ள மந்திரங்கள் ஒலி அலைகளாக உள்ளன. ரிஷிகள் இவற்றைத் தம் தவவலிமையால் கேட்டு உணர்ந்து வெளிப்படுத்தினர். இம் மந்திரங்கள் பஞ்சப் பிரம்மங்களாகிய ஈசானம், தத்புருஷம், வாமதேவம் அகோரம், சத்யோஜாதம் ஆகிய ஐந்துடன் சிவ, அஸ்திர, கவச, சிகா, சிரோ, ஹ்ருதய என்ற ஆறும் கூடிய பதினொன்றாகும். இவை பதினொன்றையும் குறிக்கும் பதினோறு மந்திர தீபங்கள் நடன சபையில் உள்ளன.

இவ்வகையில் ஆகம சாரமான சைவ சித்தாந்த தத்து வத்தின் அடிப்படையான அத்துவாக்களைக் குறிக்கும் வகையில் திருவிளக்குளையும் அத்துவாக்களை அதிட்டித்து நடத்தும் தேவர்களை அதில் சுடர்களாக நிலைப்படுத்தப்பட்டுள்ளதை ஆவுடையார் கோயிலில் மட்டுமே காணமுடிகிறது.

கருவறைக்குள் நெய் தீபங்கள் மட்டுமே ஏற்றப்ப டுகின்றன. இந்தத் திருவிளக்குகளை புரூரவச் சக்கரவர்த்தி அமைத்தான் என்று புராணங்கள் கூறுகின்றன.

ஆகமங்களை விளக்கும் அற்புத சிற்பங்களும் ஓவியங்களும்

இறைவனால் அருளப்பெற்ற ஞான நூல்கள் ஆகமம் ஆகும். ஆகமங்களின் ஞானபாதத்தில் உயிர்களின் தோற்றம் அவை வினையின் வசத்தால் பெரும் நிலைகள் அடைய வேண்டிய மோட்ச சாதனங்கள் முதலியன விரிவாக விளக்கப்பட்டு உள்ளன.

உலகம் அகண்ட வெட்ட வெளியில் இருந்து தோன்றி நிலைபெற்று மீண்டும் அதிலேயே ஒடுங்குகிறது அந்த வெட்டவெளி மெஞ்ஞானிகள் சிதாகாசப் பெருவெளி என்றும் கூறு கின்றனர்.

வெட்டவெளியினின்று உலகம் தோன்றி ஒடுங்கும் பெருவழியே அத்துவாக்கள் எனப்படும். இவை வண்ணம், பதம், மந்திரம், தத்துவம், கலை புவனம் என்று ஆறு வகைப்படும். சிவாகமங்கள் அத்துவாக்கள் பெருஞ்சிறப்புடன் பேசுகின்றன.

ஆவுடையார் கோயிலில் ஆறு அத்துவாக்களை வண்ண ஓவியங்களாகவும், குறியீடுகளாகவும், புடைப்புச் சிற்பங்களாகவும் அமைந்துள்ளனர்.

குதிரைச் சாமி எழுந்தருளியுள்ள பஞ்சாட்சர மண்டபத்தின் விதானத்தில் அத்துவாக்களின் உருவங் வடிக்கப்பட்டுள்ளன.

அக்னி மூலையில் மந்திரங்கள் பதினொன்றும் பதினாறு தாமரை வட்டங்களாக அமைக்கப்பட்டுள்ளன. அதன் மத்தியில் அஸ்திரம், கவசம், நேத்திரம், சிகை என்று பெயர்கள் எழுதப்பட்டுள்ளன.

தெற்கில் 9×9 ஆக எண்பத்தோரு கட்டங்கள் உள்ளன. இவற்றில் 81 பதங்களைக் குறிக்கும் எழுத்துக்கள் பதிக்கப்பட்டுள்ளன.

தென்மேற்கில் 51 எழுத்துக்களைக் குறிக்கும் 51 மலர்களும் அதில் எழுத்துக்களும் பொறிக்கப்பட் டுள்ளன. மேற்கு வடமேற்கில் 224 கட்டங்களில் 224 புவனங்களைக்குறிக்கும் வகையில் பூக்கள் அமைக் கப்பட்டுள்ளன.

சபைகளின் ஆறுவாயில்களும், அதில் அமைந்துள்ள தீபமாலைகளும் அத்துவாக்களையே குறிக்கின்றன

இத்தலத்தில் ஷடத்துவா பூஜை என்ற பெயரில் சிறப் புப்பூஜை நடைபெறுகிறது. அப்போது ஆறுவாயில் களுக்கும் வழிபாடுகள் நடைபெறுகின்றன. மார்கழி மாதம் இது அதிகாலையில் சிறப்புடன் நடத்தப்படு கின்றன.

திருவிழாவின் பத்தாம் நாள் இரவு வெள்ளிரதத்தில் மணிவாசகர் பவனி வருவார். அப்படி வந்தபிறகு தேவ சபையில் மணிவாசகரை எழுந்தருளுவித்து கதவுகள் மூடிவிடுவர். ரகசியமாக ஷடத்துவா பூஜை நடைபெறும்.

இவ்விதம் ஆகமங்களிலும் சிவமகாபுராணத்தில் கூறப்பட்டுள்ளபடி ஷடத்துவா பூஜை நடைபெறுவது தனிச்சிறப்பாகும்.

ஆகமங்களை சதாசிவர் அருளிச் செய்தார் என்பர். அவருடைய ஐந்து முகங்களிலிருந்தும் ஐந்தைந்தாக சிவவடிங்கள் தோன்றின. அவற்றை மகேஸ்வர மூர்த்தங்கள் என்று அழைப்பர். இந்த மூர்த்தங்களின் அற்புத ஓவியங்களை சிவானந்த மாணிக்கவாசகர் சந்நிதியில் பெரிய பரப்பில் தொடர்ச்சியாக வரைந்து உள்ளனர்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

திருப்பெருந்துறையிலுள்ள பிற ஆலயங்கள்

வடக்கூர் தெற்கூர் என்ற இரண்டு பகுதியாக ஆவுடையார் கோயில் உள்ளது. தெற்கூரில் ஆத்மநாதர் ஆலயம் உள்ளது. வடக்கூரில் கயிலாயநாதர் ஆலயம் உள்ளது. உருத்திரர்கள் திருப்பெருந்துறையில் அருவுருமாக விளங்கும் ஆத்மநாதரை வழிபட்ட போது பெருமானே நாங்கள் அபிஷேகம் செய்து அர்ச்சித்து வழிபட அர்ச்சாரூபமாக எழுந்தருளவேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். அவர்கள் விருப்பப்படியே பெருமான் வடக்கூரில் சிவலிங்கமாக எழுந்தருளினார். அந்த லிங்கத்திற்கு ஆதிகயிலாயநாதர் என்று பெயர் வழங்குகிறது.

அப்பெயரால் அந்த ஆலயம் ஆதிகயிலாய நாதர் கோயில் என வழங்கப்படுகிறது. அம்பிகையின் பெயர் சிவகாமி. விநாயகர், சுப்பிரமணியர், பைரவர், சூரியன் ஆகிய பரிவார ஆலயங்களுடன் இக்கோயில் சிறப்பாகவுள்ளது.

நான்கு கால பூஜைகளை நடத்துகின்றனர். திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான இக்கோயில் அவர்களால் மிகச் சிறப்புடன் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

குறிச்சிக் குளத்திற்கு அருகில் முத்து மாரியம்மன் கோயில் உள்ளது. தினமும் இரண்டுகால பூஜை நடைபெறுகிறது. வைகாசி மாதத்தில் பத்து நாட்கள் விழா நடைபெறுகிறது.

திருப்பெருந்துறையின் கிராமக் காவல் தெய்வமாகப் புலிக்குட்டி ஐயனார் விளங்குகிறார். இவருடைய ஆலயம் இங்கிருந்து 3 கி.மீ. தொலைவில் உள்ளது. ஒவ்வொரு மாத கிருத்திகையன்றும் சிறப்புவழிபாடுகள் நடைபெறுகின்றன. பங்குனி உத்திரத்தையொட்டி பத்து நாட்கள் சிறப்பு விழா கொண்டாடப்படுகிறது.

விற்றிருந்த பெருமாள் (கேசவ பெருமாள்) என்ற பெயரில் பெருமாள் திருக்கோயில் உள்ளது.

பள்ளிக்கூடப் பிள்ளையார், அக்கசாலைப் பிள்ளையார் மடத்துவாசற் பிள்ளையார், சக்தி விநாயகர், ஆகண்டல விநாயகர் முதலிய பல விநாயகர் ஆலயங்கள் உள்ளன.

கைலாசநாதர் திருக்கோவில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மாணிக்கவாசகர் துதிகள்



கந்த புராணம்

கந்தமொடு உயிர்படும் கணபங்கம் எனச்
சிந்தை கொள் சாக்கியர் தியங்கிய முகராய்
முந்தொரு மூகையை மொழிவித்து எந்தைபால்
வந்திடும் அடிகளை வணக்கம் செய்குவோம்.

உபதேச காண்டம்

வரும்பரிக்கு அருள் வழுதிபால் பொருள்தனை வரதன்
பெருந்துறைப் பணிவிடைக்கு உரித்தாக்கிய பெருமான்
திருந்துவாதவூர்ச் செம்மொழிப் புலவனைத் திருத்தாள்
பொருந்தும் அன்பினால் போற்றி வைத்து அனுதினம் புகழ்வோம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

அருணகிரிப் புராணம்

பெருந்துறையில் குருந்தநிழல்
பெருமானின் இன்னருள் பெற்றுத்
திருந்து மறைப்பொருள் எமக்குச்
செந்தமிழல் தெருட்டி யெமைப்
பிரிந்திடவே பிறப்பிறப்பும்
பேரருள் செய்பெருந்தகையைப்
பரந்த புகழ்த் திருவாத
வூரனின் தாளினைப் பணிவோம்.

திருவிளையாடற் புராணம்

எழுதரு மறைகள் தேறா இறைவனை எல்லிற் கங்குல்
பொழுது அறு காலத்தென்றும் பூசனை விடாது செய்து
தொழுத கை தலைமேல் ஏறத் துளும்பு கண்ணீர் உள்மூழ்கி
அழுதடி அடைந்த அன்பன் அடியார்க்கு அடிமை செய்வோம்.

திருஉத்தரகோசமங்கைப் புராணம்

நிரை சிறந்த நெடுங்குடுமிப் பொலங்கிரியில்
கயல்எழுதும் நிருபன்ஏவ
விரைசெல்வம் பரிகொணர்ந்து வருகெனப்
பொருள் கொடுபோய் விழைவின் எய்திப்
தரை விளங்கும் பெருந்துறையில் குருந்துறை
மான்மழுக் கரத் தலைவற் போற்றி
உரைசிறந்த மெய்ப் பொருள் பெற்று
உயர்ந்தோரைத் தாழ்ந்தவரை உளத்துள் வைப்போம்.

திருப்பரங்கிரிப் புராணம்

நீரணி கடவுள் மண்ணின்று எடுத்திடப்
பார்முழுதும் ஆண்டருள் பாண்டியன் கையால்
ஒரடி வலியவே உதவி மற்றரன்
ஈரடி வணங்கும் ஓர் இறையைப் போற்றுவோம்

பொருள் : கங்காதேவியாகிய நீரினைத் தலையில் அணிந்த சிவபெருமான் மண்சுமக்கும்படியாகவும், இவ்வுலகத்தினை ஆளுகின்ற பாண்டியன் கை பிரம்பால் ஒரடி அடிக்கச்செய்தும் அந்தச் சிவபெருமானது இரண்டு திருவடிகளையும் வாங்கிக் கொண்ட மாணிக்க வாசயராகிய இறைவனைப் போற்றுவோம்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸ்ரீ மாணிக்கவாசகர் வரலாறு

ஆலவாய் அண்ணலாகிய சோமசுந்தரப் பெருமான் கொலுவீற்றிருந்தருளும் மதுரை மாநகருக்கு வடகிழக்கில் ஏறத்தாழ 20 கி.மீட்டர் தொலைவில் அமைந்துள்ள தலம் திருவாதவூர் ஆகும். இவ்வூரில் ஆதிசைவ ஆமாத்தியர் மரபில் வந்த சம்புபாதசிருதர் – சிவஞானவதி அம்மையார் நமது தம்பதிகளுக்குத் திருமகனாக அவதரித்தவர் மாணிக்கவாசகர். இவருக்குப் பெற்றோர் இட்டபெயர் "திருவாதவூரர்" ஆகும்.

இவர் பதினாறு வயதிற்குள் அனைத்துக் கலைகளையும் பயின்று வல்லவராக விளங்கினார். இவருடைய கல்வி அறிவும், நுண்ணறிவும் எல்லோரையும் கவர்ந்ததால் இவர் புகழ் எங்கும் பரவியது. இவருடைய அறிவாற்றலையும் அற்புத குணங்களையும் கேட்டறிந்த பாண்டியநாட்டு மன்னனான அரிமர்த்தன பாண்டியன் இவரை முதலமைச்சராக்கினான். "தென்னவன் பிரமராயன்" என்னும் பட்டத்தையும் விருதுகளையும், செல்வங்களையும், அதிகாரங்களையும் அளித்தான். இவரும் தம் பணியைச் செவ்வனே செய்து வந்தார்.

ஒரு நாள் பாண்டிய மன்னனிடம் தூதுவர்கள் வந்து சோழ நாட்டுக் கடற்கரையில் ஏராளமான குதிரைகள் கப்பலில் வந்து இறங்கியுள்ளன என்ற செய்தியைத் தெரிவித்தனர். பாண்டிய மன்னன் குதிரைப் படையை விரிவாக்க எண்ணியிருந்ததால், நம்பிக்கைக்கு உரிய அமைச்சரான வாதவூரரை அழைத்து நல்ல ஜாதிக் குதிரைகளைப் பார்த்து வாங்கி வாருங்கள் என்றான். நிதிமந்திரியிடம் அவருக்கு வேண்டிய பொன்னை அளிக்கும்படி ஆணையிட்டான். திருவாதவூரரும் பண்டாரத்திலிருந்து நிறைய பொன்னையும் துணைக்கு ஆட்களையும் அழைத்துக்கொண்டு ஆவலாய் அண்ணலை வணங்கி சோழ நாட்டுக்குப் பயணமானார்.

அதே வேலையில் திருக்கயிலாய மலையிலே வீற்றிருந்தருளும் சிவபெருமான், வேத ஆகமங்களின் சாரமாகத் திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் திருவாதவூரர் மூலம் தோற்றுவிக்கத் திருவுள்ளம் கொண்டார். தம்முடனிருந்த நந்தி முதலான கணநாதர்களை, மானுடர் வடிவம் தரித்து எம்மோடு வருக என்று கூறி ஞானதேசிகர் வடிவம் கொண்டு திருகயிலை மலையை விட்டு நீங்கி மண்ணின்மேல் மாதவப்பூமியான திருபெருந்துறையை அடைந்து அங்கு ஓர் சோலையுள் குருந்த மரத்தின் கீழ் வீற்றிருந்தார். நல்ல சீடனைத் தேடுகின்ற சிவகுரு நாதனாக மாணிக்கவாசகர் வரவை எதிர்நோக்கியிருந்தார். திருவாதவூரரும் சோழ நாட்டுக் குப்பயணம் மேற்கொண்டு வரும்போது வழியில் பெருமான் வீற்றிருக்கும் சோலையைக் கண்டார்.

அங்கு சிவாகமங்களும் வேதங்களும் ஒலித்தன. இனம்புரியாத மென மையான உணர்வு திருவாதவூரர் உள்ளத்தே தோன்றியது. அருகிலிருந்த சிவசுவாமி என்பவர் அந்த இடத்தின் சிறப்பைக் கூறினார். அவர் அதிக ஆவலுடன் பூஞ்சோலையின் உள்ளே சென்றார். அங்கே தழைத்து வளர்ந்திருந்த குருந்த மரத்தின் கீழே உயர்ந்த ஆசனத்தின் மீது கண்ணையும் கருத்தையும் கவரும் தோற்றத்துடன் ஞான குருநாதர் வீற்றிருக்க அவரைச் சூழ்ந்தவாறு அடியார் குழாம் இருக்கக் கண்டார்.

அவர் கண்களில் நீர் பெருகியது. மெய் விதிர்த்தது. குருபிரானின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். "தேவரீர் என்னை பிறவித் தளையிலிருந்து நீக்கிப் பிறவா வகை செய்து அடிமையாக ஏற்றுக்கொண்டு முக்தியின்பம் அளித்தருள்க" என்று வேண்டி நின்றார்.

அவருடைய பக்குவ நிலையை அறிந்த குருநாதர். மகிழ்ந்து தனது அருட்கண்களால் அவரை நோக்கினார். அஞ்சவேண்டாம், நின்னை ஆட்கொண்டோம் என்றார். அவரை அருகே அழைத்து அவருடைய திருச்செவிகளில் முத்திப்பேறளிக்க வல்ல திருவைந்தெழுத்தைப் பிரணவத்துடன் ஓதி சிந்தை கனியுமாறு செய்தார். வாதவூரரின் அக இருள் அகன்றது. உள்ளொளி பெருகியது. அவர் நிட்டை கூடிச் சிவானந்த அனுபூதி

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



இன்ப வெள்ளத்துள் ஆழ்ந்தார். குருநாதர் அவருக்குத் தீட்சா நாமமாக மாணிக்கவாசகர் என்ற பெயரைச்சூட்டி திருவடிகளை அவர் தலைமீது வைத்து திருவடி தீட்சையும் செய்தருளினார்.

பின்னர், வாதவூரர் தனது பொன்னாபரணங்களையும், ஆடைகளையும் நீக்கிக் கோவணம் தரித்தார். விபூதி யை உடலெங்கும் பூசினார். தனது உடைகளையும், ஆபரணங்களையும், பாண்டியன் தந்த செல்வத்தையும் குருவின் காலடியில் வைத்து வணங்கினார். இனி யானும் என் உடைமைகளும் உமதடிமை என்று கூறி அவருடைய சந்நிதியிலேயே எப்போதும் கிடந்தார்.

அவருடன் வந்தவர்களும் பாண்டியன் படையினரும் செய்வதரியாது திகைத்தனர். அவரிடம், அன்பரே பாண்டியன் கோபித்தால் என் செய்வோம். குதிரைகளை வாங்காமல் காலங்கடத்துவது முறையல்ல என்று பணிந்து தெரிவித்தனர். அதைக்கேட்ட மாணிக்கவாசகர், இனி நீங்கள் இங்கே நிற்க வேண்டாம். நீங்கள் யார்? மாயமான உரைகளை இங்கே என் முன் கூறாதீர்கள் என்றார்.

பாண்டியனின் படைவீரர்கள் திகைத்தனர். இவர் நம்மீது பற்றில்லாதவரானார். நாம் சொல்வதும் இவருக்கு ஏற்புடையதாக இல்லை. அரசனிடம் சென்று நடந்ததைக் கூறுவோம் என்று பாண்டிநாடு திரும்பினார்.

அரச்னை வாழ்த்தி மெல்ல மெல்ல நடந்ததைக் கூறினர். அதைக் கேட்ட அரசன் கோபம் கொண்டான். தூதுவர்களை அழைத்து திருவாதவூரரை உடனே அழைத்து வருக என்று ஓலை கொடுத்து ஆணையிட்டான். தூதுவர்கள் வாதவூரரிடம் சென்று அரசன் கோபம் கொண்டுள்ளதையும் கையோடு அழைத்து வரும்படி ஆணையிட்டதையும் கூறி அவனளித்த ஓலையைத் தந்தனர்.

வாதவூரர் குருவின் சந்நிதியை அடைந்து, அரசன் ஆணையைக் கூறி அவனளித்த ஓலையைத் தந்து வணங்கிநின்றார்.

சிவபெருமான் அவரிடம், "மாணிக்கவாசக" கவலையை விடு. மன்னனிடம் சென்று ஆவணி மூல நாளில் குதிரைகள் வரும் என்று சொல்லுக. நாம் குதிரைகளுடன் அங்கு வருவோம். இந்த மாணிக்கத்தை அவனுக்கு அளித்தருள்க" என்று கூறி மாணிக்கம் ஒன்றை அளித்தார். மாணிக்கவாசகர் மிகவும் மகிழ்ந்தார். பெருமானிடம் விடை பெற்றுக் கொண்டு திருப்பெருந்துறையிலிருந்து நீங்கி மதுரையை அடைந்தார். மன்னனிடம் மாணிக்கத்தை அளித்து ஆவணி மூலநாளில் குதிரைகள் வந்து சேரும் என்று கூறினார். விலைமதிப்பற்ற மாணிக்கக் கல்லைக் கண்டு அவன் அதிசயித்தான். மந்திரியாரே, நமது கோபத்தை எண்ணி வருந்த வேண்டாம். சிலர் கோள் சொன்ன தாலேயே நாம் அப்படி எழுத நேர்ந்தது. முன்போலவே நீர் உமது மந்திரி அதிகாரத்துடன் இரும் என்றான்.

ஆவணி மூலத்திற்கு இன்னும் இரண்டு நாட்கள் இருந்தன. அரசன் உப்பரிகையில் உலவிக்கொண்டிருந் தான். அவ்வேலையில் தீயமந்திரி ஒருவன் "அரசே, வாதவூரர் உமது கடிதத்தை கண்டு அஞ்சினார். உமக்கு அன்புடையவர் போல் நடித்து இங்கே தங்கியுள்ளார். அவர் உமது செல்வத்தையெல்லாம் சிவனடியாரிடத்தில் ஒப்படைத்துவிட்டார். என்பதை எமது ஒற்றர்கள் மூலம் அறிந்து கொண்டேன். அவர் ஆவணி மூல நாளில் குதிரை வரும் என்று கூறியது யாவும் பொய்யே" என்று கூறினார்.

அதைக் கேட்ட அரசன் சிந்தித்தான். தமது ஒற்றர் களை அனுப்பி திருப்பெருந்துறையிலோ அதற்கு அருகி லுள்ள இடங்களிலோ குதிரைத் தொகுதிகள் உள்ளனவா என அறிந்து வாருங்கள் என்றான்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஒற்றர்கள் காற்றினும் கடிதில் சென்று திருப்பெருந்துறையிலும் சுற்றியுள்ள ஊர்களிலும் நகரங்களிலும் நன்கு தேடிப் பார்த்தபின் மீண்டு வந்து அரசனிடம் குதிரைகளைக் காணவில்லை என்றனர்.

அரசனின் கோபம் எல்லையைக் கடந்தது. வாதவூரன் நமது செல்வத்தைக் களவாடி சிவனடியார்களுக்கு அளித்ததுமல்லாமல், ஆவணி மூலநாளில் குதிரைகள் வருமென்று பொய்கூறி நம்பவைத்தான். அவனை தண்டிப்பதே முறை என எண்ணி தண்டநாயர்களை அழைத்து வாதவூரரைச் சிறைசெய்து நாம் அளித்த செல்வமனைத்தையும் திரும்பப் பெருக என்றான்.

தண்ட நாயகர்கள் வாதவூரரை அணுகி மன்னன் ஆணையைக் கூறி பொருள் அனைத்தையும் திரும்பத்தருக என்றனர். அவர் ஏதும் பேசாது நின்றார். அவர்கள் அவரைச் சிறையிலிட்டு துன்புறுத்தினர். வையையாற்றின் சுடுமணலில் நிற்க வைத்து கைகளிலும் நெற்றியிலும் சுடு செங்கற்களை வைத்து வாட்டினார்.

வாதவூரர் சிவபெருமான் நோக்கி யான்படும் துன்பத்தை நீங்கள் அறியவில்லையா? பாண்டியனுக்கு குதிரைகளைத் தருவேன் என்று நீர் கூறியது பொய்யாகி விடுமோ? என்று பலவாறு கூறிக் கசிந்து கண்ணீர் மல்க வேண்டினார். சேவகர்கள் அவரைச் சொந்த ஊரான திருவாதவூரருக்கு அழைத்துச் சென்று சிறையிலிட்டுத் துன்புறுத்தினர். அவரும் விடாது சிவனைப் போற்றி வேண்டிக் கொண்டிருந்தார்.

சிவபெருமான் திருவாதவூரருக்கு அருள் செய்ய முனைந்தான். தனது சிலம்போசையை அவர் கேட்கும் படிச் செய்தான். மணிவாசக அஞ்சாதே சொன்னபடியே குதிரைகள் வரும் என்றான்.

மதுரையைச் சுற்றியிருந்த காடுகளிலிருந்து நரிகளையெல்லாம் குதிரைகளாக்கிப் பூதகணங்களைச் சேவகர்களாக்கினார். தானும் குதிரைச் சேவகனாகி அந்த மாயக் குதிரைகளையெல்லாம் திரட்டிக்கொண்டு பாண்டியனிடம் சென்றார். குதிரைகளைக் கண்டு மன்னன் மகிழ்ந்தான். திருவாவூரரை அழைத்து வரும்படிக் கூறினான். அன்பரே, "யாம் அறியாமையால் பிழை செய்தோம். இத்தகைய ஒப்பற்ற குதிரைகளை வாங்கிய உம்மீது சந்தேகம் கொண்டது தவறு. நீர் முன்போலவே பணி செய்க". இப்போது குதிரைகளை செலுத்திக் காண்பிக்கும்படிச் செய்க என்றான்.

திருவாதவூரர் தலைமைச் சேவகனாக வீற்றிருந்த சிவபெருமானிடம் குதிரைகளை நடத்திக் காட்டுமாறு கூறினார். இறைவனும் குதிரைகளை ஐந்து கதிகளில் நடத்தினான். மனம் மகிழ்ந்த அரசன் அவனுக்குப்

பட்டாடைகளும் பரிசுகளும் அளித்தான். இறைவன் அதனை அலட்சியத்துடன் தனது செண்டாயுதத்தால் வாங்கிப் பின்னாலிட்டுப் புன்னகை புரிந்து நின்றான்.

அதைக் கண்ட மன்னன் கோபம் கொண்டான். வாதவூரர் மன்னனிடம் அது அவர்கள் நாட்டு முறை நீங்கள் கோபிக்க வேண்டாம் என்றார். மன்னனும் அப்படியே போலும் என்று எண்ணிக் கொண்டான். தனது குதிரைப்படைச் சேனை நாயகர்களையும் அசுவசாத்திரம் அறிந்தவர்களையும் அழைத்து குதிரைகளைச் சோதித்துக் கூறுக என்றான். அவாகளும் பலவாறு அவற்றைச் சோதித்து குளம்பு, சுழி, வண்ணம், வேகம் முதலியவற்றை ஆராய்ந்து இவை யாவும் சிறந்த குதிரைகளே. நாம் கொடுத்த பணத்தைவிட எண் பங்கு மதிப்பு அதிகம் கொண்டவை என்று கூறினர். மன்னன் மகிழ்ந்தான். தலைமை சேவகனிடம் கயிறு மாற்றிக் குதிரைகளை ஒப்படையும் என்றான்.

சிவபெருமான் கயிறுமாற்றி அரச சேவகர்களிடம் குதிரைகளை அளித்துவிட்டுத் தமது கணங்களுடன்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மறைந்தார். சேவகர்கள் குதிரைகளைப் பந்தியில் கொண்டு சென்று அடைத்தனர். இரவு வந்தது. குதிரைக் கொட்டிலிருந்த புதிய குதிரைகள் யாவும் நரிகளாகி விட்டன. அவை பெருத்த ஊளையிட்டுக் கொண்டு அங்கு கட்டியிருந்த குதிரைகளையும் எதிர்பட்டவர்களையும் கடித்துக் குதறி விட்டுக் காட்டுக்குள் ஓடி மறைந்து விட்டன. நகருக்குள் எங்கும் களேபரமாகியது.

அரசன் செய்தியை அறிந்து மிகவும் சினம் கொண்டான். திருவாதவூரர் மாயவேலை செய்து தன்னை ஏமாற்றிவிட்டார் என்று கோபித்தான். காவலர் களை அனுப்பி அவரைச் சிறை செய்து வருமாறு கூறி னான். காவலர்களும் அரசன் கட்டளைப்படியே அவரைச் சிறை செய்தனர். பின்னர், வைகை மணலில் நிற்க வைத்து சித்ரவதை செய்தனர். வாதவூரர் சிவ பெருமானைக் கசிந்து கண்ணீர் மல்க வேண்டினார்.

சிவபெருமான், "கங்காதேவியிடம் மணிவாசகரின் துயரை மாற்றுக என்றார். அவள் வையையாற்றில் வெள்ளம் பெருகச் செய்தாள். வெள்ளம் கரைகளை உடைத்துக் கொண்டு ஓடியது. மன்னன் திகைத்தான்.

வையை நதியை வணங்கினான். சோமசுந்தரரின் பூசைக்குக் குறைவு உண்டாயிற்றோ? பத்தினிப் பெண்கள் தத்துவ ஞானிகள் சித்தம் கலங்கியதோ? யாதும் அறியேன்", என்று பலவாறு துதித்தான்.

அமைச்சர்கள் மாணிக்கவாசகரைத் துன்புறுத்திய தால்தான் இது விளைந்தது. சிவனடியாரைத் துன்பப்படுத்துதல் இறைவனையே துன்புறுத்துதல் போன்றதன்றோ? அவரைச் சிறையிலிருந்து விடுதலை செய்து மகிழ்வித்தால் வையையின் சீற்றம் குறையலாம் என்றனர்.

மன்னனும், மாணிக்கவாசகரை உடனே அழைத்து வரச்செய்தான். அவர் வந்ததும் வணங்கி, அன்பரே உமக்காகச் சிவபெருமான் மாணிக்கம் தந்தும், குதிரைச்சேவகனாகத் தோன்றியும், வையையை பெருகச்செய்ததும் திருவிளையாடல்கள் நிகழ்த்தியதைக் கண்டோம். உமது அருளாற்றலை உணராது போனோம். மன்னித்து அருளுக. வைகையை பெருகாதிருக்கச் செய்க, என்று போற்றிப் பணிந்தான். மாணிக்கவாசகர் அரசனின் உரைகளை ஏற்றுக்கொண்டு சிவபெரு மானைத் தியானித்தார். உடனே வையையின் வேகம் குறைந்து அடங்கியது.

மன்னன், "நீரே உடைபட்ட கரையையும் அடைத் தருள்க. அதற்கான அதிகாரத்தைச் செலுத்துக என்றான். மாணிக்கவாசகர் கரைகளைப் பகுதியிட்டு நகரிலுள்ள ஒவ்வொருவரும் குறிப்பிட்ட பகுதிகளை அடைக்க வேண்டும் என்றார்.

அந்த நாளில் மதுரைச் சோமசுந்தரப் பெருமானிடம் எல்லையற்ற பக்தி கொண்ட நரைகோட்டியான "செம்மனச்செல்வி" என்பவள் வாழ்ந்து வந்தாள். அவள் புட்டு அவித்து அதை விற்று வாழ்ந்து வந்தாள். அவளுக்கென சுற்றமும் இல்லை. தனியாளாக நின்ற அவள் தனது பங்கை அடைக்க வழி தெரியாது தவித்தாள். பெருமானிடம் முறையிட்டாள். அவளுக்கு அருள்புரியச் சிவபெருமான் ஒரு கூலியாளாக வேடம் புனைந்தார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

மண்வெட்டியையும் கூடையையும் எடுத்துக் கொண்டு அவளிருக்கும் தெருவழியே, "கூலி கொடுத் தென்னைக் கொள்வாருண்டோ" என்று கூவி நின்றார். அவள் அவரை அழைத்து மகனே, எனக்கு யாரும் உறவு இல்லை. நான் கொடுக்கும் புட்டுகளைக் கூலியாக ஏற்று எனது பங்கை அடைத்துத் தருக என்றாள். அவர் எனக்கு முன் கூலித் தருவாயாயின் உன் ஏவலாளாய் செல்வேன் என்றார். அவள் மகிழ்ந்து புட்டுகளைத்தர அவற்றை வாங்கி இன்பமுடன் உண்டார். அவளிடம் அன்னையே உமது பங்கைக் காட்டுக. அதை அடைப்பேன் என்றார்.

அவள் அவரை அழைத்துக்கொண்டு ஆற்றங் கரைக்குச் சென்று அதிகாரிகளிடம் இவன் என் தம்பி எனக்காக இவன் என் பங்குக் கரையை அடைப்பான் என்று கூறித் தன் பங்கைக் காட்டினாள்.

பெருமான் அவளிடம், அன்னையே நீ சென்று வருக. உனது பங்கை விரைவில் அடைப்பேன் என்றார். அவள் மகிழச்சியுடன் தனது இல்லம் திரும்பினாள்.

பெருமான் அவள் சென்ற பின் தனது விளையாட்டைத் தொடர்ந்தார். வெட்டிய மண்ணை வேறிடத்தில் கொட்டினார். ஆற்றில் வீழந்து அனைவரின் கவனத் தையும் திருப்பி வேலையைச் செய்யவிடாமல் விளையாட்டுக் காட்டினார். அனை வரும் அவரது வேடிக்கைகளில் மகிழ்ந்து பணியைக் கைவிட்டனர். சிறிது நேரத்திற்குப் பின் பெருமான் ஒரு கொன்றை மரத்தடியில் ஓய்வெடுப்பதுபோல் படுத்துக் கொண்டார். மற்றவர்கள் பணியைச் செய்து முடித்தனர். சேவகர்கள் இவரது விளையாட்டை மன்னனிடம் சென்று கூறினர். மன்னன் கோபித்து நீண்ட கோலை ஏந்திக் கொண்டு வைகைக் கரைக்கு வந்தான்.

கொன்றை மர நிழலில் உறங்கும் பெருமானை எழுப்பும்படிக் கூறினான். ஏவலர்கள் பலவாறு முயன்றும் அவர் எழுந்திருக்கவில்லை. இறுதியில் மன்னன் சினந்து கைக்கோலால் அவர் முதுகில் ஓங்கி அடித்தான். அந்த அடியைப் பெற்ற பின் பெருமான் மறைந்தான். அந்த அடி உலக நாயகனான சிவபெருமான் மீது மட்டுமின்றி சகல உயிர்கள் மேலும் பட்டது. பாண்டியன் மீதும், அவனுடைய தேவியர்கள் மீதும் சேனைகள் மீதும் பட்டது. வாதவூரர் மீதும் பட்டது. வந்தவர் சிவபெருமான் என்பதை அரசன் உணர்ந்தான். மாணிக்கவாச கருக்காகவே இத்தனை திருவிளையாடல்களையும் நிகழ்த்தினான் என்பதை உணர்ந்தான். அவன் மனம் அஞ்சியது.

மாணிக்கவாசகரை அணுகி அவரடி வீழ்ந்து வணங்கினான். உமக்காக இறைவனே திருவிளையாடல் நிகழ்த்தி அடியும் பெற்றானென்றால் நீரே கடவுள். இந்த பாண்டிய நாட்டு அரசப் பொறுப்பை நீர் ஏற்று அரசாளும் உமதுமகிமையை அறியாமல் தண்டித்தற்கு எம்மை மன்னித்து அருளுக என்றான்.

திருவாதவூரர், பாண்டிய மன்னனை நோக்கி, "நீரே, இப்புவியை ஆளும். எனது பொறுப்புகளை திரும்பப் பெற்றுக் கொண்டு என்னைத் திருப்பெருந்துறைக்குப் போக விடுதலே எமக்கு நீ செய்யும் பேருதவி" என்றார்.

மன்னனும், இறைவனுடைய அன்பைப் பெற்று விட்ட இவருக்கு நாம் அளிக்கும் இந்தப் பதவிகள் பெரிதில்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

லையே. நாம் சொல்வது மதியீனம் என்று எண்ணி அவருக்கு விடைகொடுத்தான்.

வாதவூரர் மிகவும் மனம் மகிழ்ந்து திருப்பெருந் துறையை அடைந்தார். அங்கு குருநாதரைக் கண்டு வணங்கி அவரடி சரண் புகுந்தார். குருபிரான் அவர் தலை மீது கைவைத்து மூன்று பாசங்களையும் அறுக்கும் "சிவதருமினி" எனும் தீட்சையை அளித்தார். அதனால் மணிவாசகர் "சிந்தையால் சிவமானார்".

சிலநாட்கள் கழிந்தன ....

குருபிரான் அனைவரையும் அழைத்து நாம் கயிலை மலையிலிருந்து இங்கு வந்து நெடுநாளாகிவிட்டது. நாம் அங்கு செல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது என்றார். எல்லோரும் அவரைப் பிரியமனமின்றி வருந்தினர். பெருமானிடம் நாங்கள் உங்களைப் பிரிந்து எவ்வளவு நாள் இருக்க வேண்டும் என்றனர்.

பெருமான், தாம் வீற்றிருந்த குருந்த மரத்தின் கீழ் இருந்த மலர்ப் பீடத்தில் தன் திருவடிகளைப் பதித்தார். அன்பர்களே இதை வணங்கிப் பூசித்து வாருங்கள். நல்லதோர் வேளையில், இங்குள்ள "திருத்தமாம் பொய்கை" தன்னில் ஒரு செம்பொருட் சோதி தோன்றும். அதில் எல்லோரும் மூழ்கி எம்மை அடைவீர்கள் என்றார். அவர்கள் மனம்தேறினர்.

அவர் நடக்க அவரை விடாது மாணிக்க வாசகரும் தொடர்ந்தார். சற்று தூரம் சென்றபின் ஒரு கொன்றை மரத்தின் கீழ் பெருமான் அமர்ந்தார். மணிவாசகர் அவரது கலைப் பற்றிக் கொண்டு எம்மைக் கைவிடாதீர் என்றார்.

பெருமான் மாணிக்கவாசகனே நீ மண்ணில் ஆற்ற வேண்டிய பணிகள் உள்ளன. ஆதலின் நீ திருத்தமாம் பொய்கையில் ஜோதி தோன்றும்போது அதனுள் புகவேண்டாம். நீ கொடுத்த செல்வங்களைக் கொண்டு இங்கு ஓர் ஆலயம் அமைத்துவிட்டு, உத்தரகோச மங்கைக்குச் செல். அங்கு உமக்கு அட்டமாசித் திகளை அருளிச் செய்வோம். பின்னர், நீ பல தலவழிபாடுகளைச் செய்து கொண்டு தில்லையை அடைந்து வீற்றிருப்பாய். அங்கு உமக்கு நமது பாதச்சிலம்பு ஓசையைக் கேட்பிக்கச் செய்து இறுதியில் முக்தி தருவோம் என்றார். பின்னர் அவர் காணச் சிறிது தூரம் நடந்து சென்று மறைந்தார்.

மாணிக்கவாசகர் திருப்பெருந்துறைக்கு மீண்டார். அன்பர்களுடன் சேர்ந்து பெரிய ஆலயத்தைக் கட்டினார். தலைசிறந்த கோயிலாக அது திகழ்ந்தது. மணிவாசகர் குரு உபதேசித்த மந்திரத்தை முதற்சொல்லாகக் கொண்ட சிவபுராணத்தையும் தொடர்ந்து பல அருட்பாடல்களையும் அருளிச்செய்தார்.

ஒரு நாள் மாணிக்கவாசகர் கொன்றை மரத்தடியில் சிவயோகத்தில் வீற்றிருந்தார். அப்போது திருத்தமாம் பொய்கையில் ஜோதி தோன்றியது. அன்பர்கள் எல்லோரும் அதில் புகுந்து வீடுபேறு பெற்றனர். அதைத் தூரத்திலிருந்தே கண்ட மாணிக்கவாசகர் ஏங்கினார். சிவபெருமான் அவருக்கு உமையுடன் விடைமேல் காட்சியளித்து அருள்புரிந்தார்.

மணிவாசகர் சில நாட்களுக்குப் பின்னர் "உத்தர கோசமங்கை"க்குச் சென்றார். பெருமான் அவருக்கு அனேக சித்திகளை அளித்தார். இத்தலத்திலிருந்த போதுதான் அவர் பொன்னூசல் முதலிய பாடல்களைப் பாடினார்.

பிறகு மதுரை முதலிய தலங்களை வணங்கி திருவிடைமருதூர் அடைந்தார். மகிழ்ச்சியில் திளைத்திருந்த அவர் சீர்காழி முதலான பலதலங்களை வணங்கிய பின் திருக்கழுக்குன்றத்தை அடைந்தார். சிவபெருமான் அவருக்கு அங்கே தனது எழிற்கோலங்கள் பலவற்றைக் காட்டினார். இதனை "கணக்கிலா கோலம் வந்து காட்டினாய்" என்று பாடினார்.

சிலநாட்கள் கழித்து திருவண்ணாமலையை அடைந்தார். அங்கு அண்ணாமலையான் அடிக் கமலத்தைப் போற்றி திருவெம்பாவைப்பாடினார். பல பாடல்களைப் பாடி மகிழ்ந்தபின் இறுதியாக தில்லை சிற்றம்பலத்தை அடைந்தார். தில்லைக் கூத்தனைக் கண்டு ஆரா அமுதவெள்ளம் பருகி எல்லையற்ற இன்பத்தில் திளைத்திருந்தார்.

... ...

அந்நாளில் பெருந்துறவி ஒருவன் தில்லைசிற்றம் பலத்தினைக் கண்டு மகிழ்ந்தான். அவன் பொன்னம்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

பலத்திற்கு இணையான தலம் எங்கும் இல்லை என்று சொல்லி வந்தான். அவன் பலதலங்களைக் கண்டபின் ஈழநாட்டிற்குச் சென்றான். அங்கே அனுராதபுரத்து வீதிகளிலும் அதையே கூறி வந்தான். அதைக் கேட்ட ஒற்றர்கள் அரசனிடமும், ராஜகுருவாக விளங்கிய பௌத்தத் துறவிகளிடமும் கூறினர். அவர்கள் அவனை அழைத்து வரும்படி கூறினர்.

ஏவலர்கள் அந்தத் துறவியை அரசவைக்கு அழைத்துச் சென்றனர். அங்கே அரசன், "நீ ஏன் அப்படிக் கூறி வருகிறாய் என்று கேட்டான். துறவி அரசே சோழநாட்டில் பொன்னால் செய்யப்பட்ட ஆலயம் உள்ளது. அதனுள் சிவபெருமான் ஐந்தொழில்களை ஆற்றும் ஆனந்த நடனத்தை ஆடிக்கொண்டே இருக்கின்றனர். அதை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. அந்தச் சிவபெருமானே எல்லோரும் போற்றும் தெய்வம் என்று உரக்கச் சொன்னான்.

அதைக் கேட்ட பௌத்த குருமார்கள் புத்தரைத் தவிர கடவுளில்லை. இதை நான் உறுதிபடக் கூறுவேன் என்றனர். துறவி அப்படியாயின் தில்லைக்குச் சென்று அங்குள்ளவர்களை வாதில் வென்று உனது கருத்தை நிலைநாட்டுக" என்றர்ன்.

பௌத்த குருவும், அப்படியே செய்வோம் என்று கூறி அரசனிடம் விடை பெற்றுக் கொண்டு தனது புத்த சங்கத்துடன் பயணமானான். துறவி அரசே தில்லையை தரிசித்தால் உமக்கும் சிறப்பு உண்டாகும் என்றான். மன்னனுக்கு ஒரு மகள் இருந்தாள். அவள் பிறவியிலேயே ஊமையாக இருந்தாள். மன்னன் அவளை அழைத்துக் கொண்டு சிதம்பரம் சென்று கூத்த பிரானைத் தரிசிக்க பயணமானான்.

புத்தகுரு கப்லேறி சிதம்பரத்திற்கு வந்து, புலீச்சரத்தில் தங்கினான். அங்கே அவனையும் அவனது கூட்டத்தையும் கண்ட மக்கள் மன்னனிடமும் தீட்சிதர் களிடமும் சென்று கூறினர். சோழ மன்னன் பௌத்த குருவை அழைத்து நீர் இங்கு வந்த காரணமென்ன? என்றான்.

அவன் அரசே? உமது நாட்டிலுள்ள சைவர்களை வென்று எமது புத்தமதத்தை நிலைநாட்டி பொன்னம் பலத்தை அரசம்பலமாகிய புத்தன் கோயிலாக மாற்றுவதே எமது எண்ணம் என்றான்.

அதைக் கேட்ட அனைவரும் கோபித்தனர். தீஷிதர்கள் தில்லைசிற்றம்பலத்துள் சென்று நடராசப் பெருமானிடம் முறையிட்டனர். "அன்பர்களே அஞ்ச வேண்டாம். நமதருள்பெற்ற மாணிக்கவாசகனை அழை யுங்கள். அவன் பௌத்தர்களை வென்று சைவத்தை

நிலைநாட்டுவான் என்ற வானொலியாகக் கூறினார்".

அந்த வேளையில் அங்குவந்த ஈழமன்னன் மாணிக் கவாசகரின் பெருமைகளைக் கேட்டு மகிழ்ந்தான்.

அவர்கள் அனைவரும் மாணிக்கவாசகர் வீற்றிருக்கும் திருமடத்திற்குச் சென்று அவரிடம் நடந்ததைக் கூறினர். அவரும் இறைவனின் திருவருளை நினைந்து "அப்படியே ஆகட்டும்" என்றார்.

வாதிற்கு ஒருநாள் குறிக்கப்பட்டு பௌத்தர்களுக்கும், மாணிக்கவாசகருக்கும் வாதம் நிகழ்ந்தது. பௌத்தர்களின் அனைத்து கேள்விகளுக்கும் மணிவாசகர் பதில் அளித்தார். பௌத்த குருமார்களால் மாணிக்கவாசகரின் கேள்விகளுக்குப் பதில் கூற முடியவில்லை என்றாலும் ஓயாது வாதத்தை நிகழ்த்திக் கொண்டும் சிவனை நிந்தித்துக் கொண்டும் இருந்தனர்.

மாணிக்கவாசகர் அவர்களது சிவநிந்தனையைப் பொறுக்க முடியாமல் அவர்களை ஊமையாகும்படிச் சபித்தார். பின்னர், எல்லோரும் அறியும்படியாகச் சிவபெருமானின் பெருமைகளை விளக்கி திருச் சாழலைப் பாடினார். அதில் கேள்விப்பகுதியை அவர் கேட்க பதில் பகுதியை ஈழமன்னனின் ஊமை மகள் பேச்சுத்திறம் பெற்றுப் பாடினாள். எல்லோரும் அதைக்கண்டு வியந்தனர். பின்னர், மனம் கனிந்த மணிவாசகர் பெருமானை வேண்டி பௌத்தர்களின் ஊமைத் தன்மையை நீக்கினார். அவர்களில் பலர் சைவராயினர்.

மாணிக்கவாசகர் சைவத்தை நிலைநாட்டியபின் தம் மடத்திற்குச் சென்று எல்லையற்ற சிவானந்த சுகத்தில் திளைத்திருந்தார்.

ஓர் ஆனி மக நாளில் சிவபெருமான் அந்தணனாகக் கோலம் கொண்டு அவர் முன்னே தோன்றினான். அவரிடம், அன்பரே நீர் கூறி அருளிய திருவாசகத்தை

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta



மீண்டும் கூறி அருளுக என்றான். அவரும் அன்புடன் அதனைப் பாடினார். பெருமான் பாவை பாடிய வாயில் கோவையும் பாடுக என்றான். அவர் அதையும் பாடினார். அவன் அவை இரண்டையும் பட்டோலையில் எழுதிக் கொண்டான்.

அதன் அடியில் இவை மாணிக்கவாசகன் சொல்ல தில்லைசிற்றம்பலவன் எழுதியது என்று கையெழுத்திட்டான். பின்பு, தில்லைக் கனக சபையில் உள்ள பஞ்சாட்சரப்படி மீது வைத்து விட்டு மறைந்தான். மறுநாள் பூசைக்குச் சென்ற தீட்சதர்கள் அங்கிருந்த ஓலைச் சுவடிகளைக் கண்டு அதிசயித்து அவற்றை மாணிக்கவாசகரிடம் எடுத்துச்சென்று இதன் பொருளை விளக்குக என்று கேட்டனர். அவர் அவர்களை அழைத்துக் கொண்டு சிற்சபைக்கு வந்து இதன் பொருள் ஆனந்த மாநடராசனே என்று சுட்டிக்காட்டியவாறே நடராசப்பெருமானிடம் கலந்தருளினார். எல்லோரும் அக்காட்சியைக் கண்டு வியந்தனர்.

❁ சிந்தையால் சிவமாகி நின்ற மாணிக்கவாசகரைப் போற்றினர். ❁

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

இந்த மலர் மணம் பரப்பத் துணை நின்றோர்...

சிவத்திரு. M. சம்பந்த செங்குந்தர்
கௌரவத் தலைவர்,
திரு ஆதிரை திருமுறை மன்றம்
மேற்கு மாம்பலம் சென்னை–33.

சிவத்திரு. Dr. T.R. சுதர்சன், M.D.S. (Ortho Dentist)
(தஞ்சை)
டீன், சோபியா பல் மருத்துவக்கல்லூரி, திருச்சி
உதவிச் செயலர், திரு ஆதிரை திருமுறை மன்றம்

சிவத்திரு. D. சத்தியமூர்த்தி,
தென்னக இரயில்வே,
சென்னை–3.

சிவத்திரு. சி. சம்பந்தம்
மேற்கு மாம்பலம்,
சென்னை–33.

சிவத்திருமதி. ச. சுசீலா சம்பந்தம்
மேற்கு மாம்பலம்,
சென்னை–33.

சிவத்திருமதி. M. வைராபாய்
அண்ணா நகர்,
சென்னை–40.

சிவத்திரு. Dr. V. சந்திரசேகரன், M.D.,D.C.H.
குழந்தைகள் நல மருத்துவர்,
காஞ்சிபுரம்

சிவத்திருமதி. லட்சுமி சிவராமகிருஷ்ணன்
ஆழ்வார்திருநகர்,
சென்னை–87.

சிவத்திரு. KL. கண்ணப்பன்
சென்னை–14.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஸ்ரீ மாணிக்க வாசகரின் பழம்பிறப்பு வரலாறு

திருக்கயிலாய ஞானபரம்பரையில் மிக உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் நந்தி கணத்தினர் ஆவர். இவர்களுக்குள்ளேயே மிகவும் உயர்ந்தவர்களாகப் போற்றப்பட்ட ஓராயிரவர் இருந்தனர். சிவபெருமான் நடனமாடும் வேளையில் பஞ்சமுக வாத்தியம் என்னும் குடமுழாவை இசைப்பது இவர்களுடைய பணியாகும். இவர்களுள் மிக இளையவராக ஆயிரமாவது அடிய வராக இருந்தவர் நமது மாணிக்கவாசகர்.

ஒரு சமயம் இந்த ஆயிரவரும் சிவபெருமானை வணங்கி, பெருமானே பூமண்டலத்தில் தாங்கள் பெருமைமிக்க மகேந்திர மலைமீது வீற்றிருந்து உமா தேவியருக்கு ஆகமப்பொருளை அருளிச் செய்தீர்கள் அல்லவா? அந்தப் புனித பூமியில் வீற்றிருந்த உமா தேவியருக்கு வேதத்தையும் ஆகமங்களையும் அருளிச் செய்து விளக்கியதைப் போலவே மீண்டும் அவற்றை எமக்கு விளக்கியருள வேண்டும் என்று கேட்டனர்.

சிவபெருமான், அப்படியே ஆகட்டும். நீங்கள் மண்ணின்மேல் மகிமைபெற்ற தலமான உத்திரகோச மங்கைக்குச் சென்று மந்திரமலையில் இருங்கள் நாம் குருவாக வந்து உமக்கு ஆகமங்களின் நுண்பொருளை விளக்குகின்றோம் என்றார். அவர்களும் பூமிக்கு வந்து உத்தரகோசமங்கையில் மங்கள நாதரையும் மங்களாம்பிகையையும் பூசனைபுரிந்து கொண்டு இறைவன் வரவுக்குக் காத்திருந்தனர்.

இறைவன் ஒருநாள் அங்கு லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு அருள்புரிந்தார். அங்கிருந்து இலந்தை மரத்தின் அடியில் வீற்றிருந்து ஆகமநுண் பொருளை விளக்கி அருளினார். எல்லையற்ற காலங்கள் பசி தாகம் தூக்கம் ஆகியவற்றை மறந்து நந்தி கணத்தினர் பெருமானிடம் ஆகம விளக்கங்களைக் கேட்டு மகிழ்ந்தனர்.

... ...

அந்த நாளில் இலங்கையை ஆண்டுவந்த மன்னன் இராவணன் ஆவான். அவன் மனைவியும் ஐம்பெரும் பத்தினிகளில் ஒருத்தியுமான மண்டோதரி சிவனை உபாசித்து ஒரு கோடி முறை பஞ்சாட்சரத்ததைச் ஜபித்து சிவனருள் பெற்றிருந்தாள். அவள் விரும்பிய போதெல்லாம் பெருமான் அவளுக்குக் காட்சியளித்து ஞான உபதேசம் செய்யும் வரத்தையும் தகுதியையும் பெற்றிருந்தாள்.

அவள் ஒருநாள் சிவபெருமான் தனக்கு காட்சி தரவேண்டும் என்று நினைந்து அன்புடன் பூசை செய்தாள். சிவபெருமான் நந்திகணப் பெருமக்களிடம் நான் இலங்கைக்குச் சென்று மண்டோதரிக்கு அருள் செய்யப் போகிறேன். அவள் மிகுந்த அன்பு கொண்டவள். அவளுடைய பூசனையை ஏற்ற பிறகே நான் இங்கே திரும்ப முடியும். நீங்கள் எனக்காகக் காத்திருங்கள்.

ஒரு வேளை நான் இங்கு வராது கயிலைக்கு சென்றுவிட்டால் இந்தக் குளத்தின் நடுவே ஓர் ஜோதி தோன்றும். அதனுள் நீங்கள் கலந்து கயிலையை அடைவீர்கள் என்றார். அவர்களும் அவருக்கு விடைகொடுத்து அனுப்பினர்.

இலங்கையில் மண்டோதரியின் அந்தப்புரத்திலுள்ள பூசைமாடத்தில் சிவபெருமான் எழுந்தருளினான். அவளு டைய பூசையை விரும்பி ஏற்றுக்கொண்டு அவளுக்கு ஞான மொழிகளை உபதேசித்துக் கொண்டிருந்தான். அந்த வேளையில் இராவணன் அங்கு வந்தான். அந்தப் புரத்தில் வேறு ஆண்கள் செல்லக் கூடாது என்பதால் பெருமான் மூன்று வயதுப் பாலகனானார். தாயன்புடன் மண்டோதரி அவரைச் சீராட்டினாள். அந்த அன்பின் நெகிழ்வால் பெருமான் நீண்டநாள் தங்கிவிட்டார். அவரைக் காணாது வருந்திய பார்வதி தேவி தன்னுடைய தவ வலிமையால் அவரை அழைக்க அவர் மண்டோ தரியிடம் விடைபெற்றுக்கொண்டு நேரே கயிலை மலைக்குச் சென்றுவிட்டார்.

அந்த வேலையில் உத்தரகோச மங்கையில் அக்னி தீர்த்தத்தின் நடுவில் பெரிய ஜோதி எழுந்தது. அப்போது அதைக் கண்ட நந்தி கணத்தினரான முனிவர்கள் 999– ன்மரும் ஆயிரமாவது முனிவரான மணிவாசகரிடம், இளையாய் நீ பூமியில் வாழ்ந்து துய்க்க வேண்டிய இன்ப துன்பங்கள் சில உள்ளன. மேலும், பெருமானின் சிவஞானமயமான ஓலைச் சுவடிகள் நம்மிடம் உள்ளன. அவற்றினை நெருப்பிலிடுவதோ, நெருப்புகள் கொண்டு செல்வதோ கூடாது. அதனை பாதுகாத்து மீண்டும் சிவனாரிடம் அளிக்க வேண்டியது நமது கடமையாதலின் அவற்றை நீர் பாதுகாத்து வரவும். உமக்குச் சிவ பெருமானே வெளிப்பட்டு அருள்புரிவார் என்று கூறிவிட் டுத் தீயுள் புகுந்தனர்.

மாணிக்கவாசகர், சுவடிகளை ஏந்தியவாறு அக்னி தீர்த்தக் கரையில் வீற்றிருந்தார். ஒருநாள் சிவபெருமான்

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

வெளிப்பட்டு அவருக்கு ஞான நுண் கருத்துக்களை விளக்கியதுடன் சுவடிகளைப் பெற்றுக்கொண்டு, அன்பனே, நீ இங்கே யோகநிலையில் வீற்றிருப்பாய். இன்னும் சில ஆயிரம் ஆண்டுகள் கழிந்தபின் பாண்டிய நாட்டில் அவதரித்து பேறுபெறுவாய். நாமே குருவாக வந்து உன்னை ஆட்கொண்டு வாழும் போதே முக்தியை அனுபவிக்கும் பேறு அளிப்போம் என்று கூறி மறைந்தார்.

மாணிக்கவாசகர் அங்கிருந்த இலந்தை மரத்தடியில் யோகத்தில் வீற்றிருந்த பின் ஒரு நல்ல வேலையில் வேதங்களால் புகழ்ப்பெற்ற திருவாதவூரில், ஆமாத்திய குலத்தின் சம்புபாதசிருதர் – சிவஞானவதி அம்மையாருக்கு திருமகனாகத் தோன்றினார்.

இறைவன் தான் முன்னர் அருளியபடியே திருப்பெருந்துறையில் குருவாக வந்து அவரை ஆட்கொண்டு ஜீவன் முக்தியையும் பின்னர் மீண்டும் வாரா நெறியான மோட்சத்தையும் அளித்தார்.

(இது தென்பாண்டி நாட்டில் நீண்டகாலமாக வழங்கி வரும் செவிவழிச் செய்திகளின் தொகுப்பு ஆகும்.)

மன்னுபுகழ் உத்தரகோசமங்கை

இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரம் – பரமக்குடி சாலை யிலுள்ள உத்தரகோசமங்கை பிரிவி லிருந்து தெற்கே 6கி.மீ. தொலைவில் உள்ள தலம் உத்தரகோசமங்கை.

ஊரின் நடுவில் ஆலயம் உள்ளது. இறைவர் மங்களநாதர் இறைவி மங்களநாயகி, கோயிலின் பிரகாரத்தில் வடகிழக்கு முனையில் அக்னி தீர்த்தம் பெரிய திருக்குளமாக உள்ளது. இதன் கிழக்குக் கரையில் மாணிக்கவாசகர் ஆலயம் மேற்கு நோக்கியவாறு அமைந்துள்ளது. அதில் மாணிக்கவாசகர் ஆகமச் சுவடியைத் தாங்கியவாறு உள்ளார். நேர் எதிர்க்கரையில் உமாமகேஸ்வரர் சந்நிதி அவரை நோக்கி யவாறு அமைந்துள்ளது. இந்த சந்நிதி சிறு கட்டுமலைபோல் உள்ளது. இந்த கட்டுமலை மகேந்திர மலையை நினைவுபடுத்துகிறது. இதன் மீது சிவபெரு மான் உமாதேவியை இடது மடிமீது அமர்த்திக் கொண்டு அவளுக்கு ஆகமங் களை அருளும் கோலத்தில் உமா மகேசுவரராக எழுந்தருளியுள்ளார். இவர் எழுந்தருளியுள்ள சந்நிதி மீது ஒற்றைக் கலசம் கொண்ட ஸ்ரீவிமானம் உள்ளது. கட்டுமலையைச் சுற்றிலும் நீராழி அமைப்பும் திருமாளிகைப் பத்தி மண்டபமும் உள்ளன.

இந்த சந்நிதிக்கு கிழக்கில் வடக்கு தெற்காக நீண்ட மண்டபம் உள்ளது. இதன் வடக்குப் பகுதியை ஒட்டியவாறு மரகத நடராசர் சந்நிதி உள்ளது. இந்த சந்நிதியைச் சுற்றிலும் அழகிய பிரகாரம் உள்ளது. இந்தப் பிரகாரத்தின் அக்னி மூலையில் ஏகாதச ருத்திர லிங்கங்கள் உள்ளன. இங்குள்ள மரகத நடராசர் வடிவம் உலகப் புகழ் பெற்றதாகும்.

அக்னி தீர்த்தத்தின் அக்னி முனையில் ஆயிரம் லிங்க சந்நிதியும் தலமரமான இலந்தை மரமும் உள்ளன. இந்தக் குளத்தில் எழுந்த தீயின் வடிவமாகப் பெரிய லிங்கமும் அதனுள் மூழ்கிச் சிவநிலைபெற்ற 999 முனிவர்களை அதன் மீது அமைந்துள்ள சிறுசிறு லிங்கங்களும் குறிக்கின்றன என்பார்.

மாணிக்கவாசகர் இத்தலத்தில் இருந்தபோதுதான் பொன்னூஞ்சல் முதலான பல திருப்பாடல்களை அருளிச் செய்தார்.

திருவாசகலிங்கம்

திருவாசகத்தைச் சிவபெருமானகவே பாவித்து வணங்கும் வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. திருவாசக ஏடுகளை உயர்ந்த பீடத்தில் வைத்து ஆடை அணிவித்து பூச்சூட்டி வழபடுவதே பொதுவான வழக்கமாகும். அபூர்வமாகச் சில இடங்களில் பனை ஓலைகளைப் பல்வேறு அளவுள்ள வட்ட வடிவங்களாக வெட்டி அவற்றில் திருவாசகத்தை எழுதி ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கி சிவலிங்கத்தின் ஆவுடையாரைப் போல் அமைத்துள்ளனர். இது பார்ப்பதற்கு சிவலிங்கமாகவே உள்ளது. இலங்கையில் அனேகர் வீடுகளில் இத்தகைய திருவாசக லிங்கங்கள் இருந்ததென்று கூறுகின்றனர். தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூல் நிலையத்தில் இத்தகைய திருவாசகச் சுவடி ஒன்று உள்ளது.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

ஆன்மநாதர் ஆலயங்கள்

திருப்பெருந்துறையில் குருந்த மரத்தின் கீழ் சிவபெருமானிடம் சிவதீட்சை பெற்று ஞானப் பெருஞ்சுடராய் நின்ற மாணிக்கவாசகப் பெருமான் தான் கண்ட அனுபவ ஞானப் பேரின்ப வெளியை உலகினருக்கு உணர்த்த அமைத்த ஆலயமே திருப்பெருந்துறையில் உள்ள ஆன்மநாதர் ஆலயமாகும். இதனுள் உள்ள மலர்ப்பீடம் இறைவன் தன் திருவடிகளைத் தாமே உவந்து பொறித்த பீடமாகும். இதை அவர் நெடுங்காலம் பூசித்துக் களித்திருந்ததை வரலாறு கூறுகின்றது. பின்னாளில் அவர் தலயாத்திரை மேற்கொண்டு தங்கியிருந்த பல தலங்களிலும் அவரால் ஆன்மநாதர் ஆலயம் அமைக்கப்பட்டு வழிபடப்பட்டதென்று கூறப்படுகிறது. அவர் நெடுநாட்கள் தங்கி வழிபட்ட பதிகளான, திருவிடைமருதூர், சிதம்பரம், திருவெண்காடு, திருக்கழுக்குன்றம் முதலிய தலங்களில் ஆன்மநாத சுவாமிக்கென்று தனி ஆலயங்கள் அல்லது தனிச் சந்நிதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பற்றிய சிறு செய்திகளை இக்கட்டுரை விளக்குகிறது.

திருவிடைமருதூர் - ஆத்மநாதர்

மாணிக்கவாசகர் பலகாலம் வாழ்ந்த தலங்களில் திருவிடைமருதூரும் ஒன்றாகும். திருவாசகத்தில் அவர், "இடைமருதுறையும் எந்தாய் போற்றி" என்றும், "இடைமருதே இடங்கொண்ட அம்மனே" என்றும் "இடைமருதினில் ஆனந்தத் தேனிருந்த பொந்து" என்றும், "கோன்தங்கு இடைமருது" என்றும், பல இடங்களில் திருவிடைமருதூர்ப் பெருமானைப் போற்றுகிறார்.

அப்பர் சுவாமிகளுக்கு திருநல்லூரிலும், சுந்தர மூர்த்திகளுக்குச் சித்தவடமடத்திலும் சிவபெருமான் திருவடிதீட்சை செய்ததைப்போலவே மாணிக்கவாச கருக்கு திருவிடைமருதூரில் திருவடிதீட்சை செய்து அருள்புரிந்தான். இதை,

"இடைமருதுஅதனில்ஈண்டஇருந்து படிமப்பாதம் வைத்த அப்பரிசும்" என்று குறிக்கின்றனர்.

திருவிடைமருதூரில் பெருமான் மாணிக்கவாசகருக் குத் திருவடி தீட்சை அளித்த இடத்தில் அவரால் ஆன்மநாத சுவாமி ஆலயம் அமைக்கப்பட்டுள்ள தென்பர். தெற்கு மாடவீதியின் வடசிறகில் தெற்கு நோக்கியவாறு இக்கோயில் அமைந்துள்ளது. ஆலயத்தின் நடுவில் உயர்ந்த மேடைமீது அமைந்துள்ள கருவறையில் ஆன்மநாதர் மலர்பீட வடிவில் எழுந்தருளியுள்ளார் இந்தச் சந்நிதி கிழக்குநோக்கி யுள்ளது. தெற்கில் பெரிய ஜன்னல் அமைக்கப்பட்டு வழிபட வகை செய்யப்பட்டுள்ளது.

கருவறைக்கு முன்னுள்ள மகாமண்டபத்தின் வடக்கிலும் தெற்கிலும் எதிரெதிர் நோக்கியவாறு இரண்டு சந்நிதிகள் உள்ளன. இவற்றில் வடக்கு நோக்கியவாறு மாணிக்கவாசகரும் தெற்கு நோக்கிய வாறு யோகாம்பிகை (மலர்ப்பீடத்தின் வடிவிலும்) யும் எழுந்தருளியுள்ளனர்.

கருவறை, அம்மன் சந்நிதி, மணிவாசகர் சந்நிதி ஆகியவற்றின் மீது ஒற்றைத்தள விமானங்கள் அமைந்துள்ளன. செங்கல்லால் கட்டப்பட்டுள்ள ஆலயம் மிகவும் சிதைந்துள்ளது. செடிகொடிகள் மண்டிக்கிடக் கின்றன. உடனே திருப்பணி செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும்.

ஒருகால பூஜை மட்டுமே நடைபெறுகிறது. விழாக்கள் நடைபெறுவதில்லை.

சிதம்பரம் - ஆத்மநாதர் ஆலயம்

சிதம்பரம் வடக்குத் தேரோடும் வீதியிலிருந்து சிறு சந்துவழியாகச் சென்றால் வேங்கான் தெருவை அடையலாம். இத்தெருவிலிருந்து சிறு சந்து வழியாகச் சென்றால் ஆன்மநாதர் ஆலயத்தைக் காண்கிறோம். கோயிலுக்கு முன்னிருந்த திருப்பாற்கடல் தீர்த்தம் தூர்க்கப்பட்டு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. கோயிலைச் சுற்றி அனேகர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் கோயிலைக் கண்டுபிடித்துச் செல்வது அன்பர்களுக்குக் கடினமாகும்.

பெரிய அகன்ற கருவறையும், உள்மண்டபமும் மகாமண்டபமும் கொண்டதாக இந்த ஆலயம் உள்ளது. கருவறையுள் யோகநாதர் மலர்ப்பீட வடிவில் எழுந்தருளியுள்ளார். கருவறையில் இரண்டு உதிரிச் சிற்பங்கள் உள்ளன. ஒன்று திருவாசகத்தின் மெய்ப் பொருள் சிவபெருமானே என்று சுட்டிக் காட்டும் நிலையிலுள்ள மாணிக்கவாசகர் சிற்பமாகும். மற்றது அவருக்குக் காட்சியளிக்க வந்த சிவபெருமானின் சாட்சி கொடுத்த நாயகர் திருவுருவமாகும். மேலும் நந்தி, விநாயகர், சிவலிங்கம், அம்பிகை முதலிய சில உருவங்களும் உள்ளன.

முகமண்டபத்தில் யோக மாணிக்க வாசகரின் திருவுருவம் பெரிய அளவில் உள்ளது. இதில் மாணிக்கவாசகர் அர்த்த பத்மாசனத்தில் அமர்ந்து இடது

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

கையை மடிமீது யோகமுத்திரையில் வைத்து வலது கரத்தில் சின்முத்திரையைத் தாங்கியுள்ளார்.

இக்கோயிலில் தனியாக யோகாம்பிகை யோக மாணிக்கவாசகர் சந்நிதிகள் அமைந்திருந்தன. அவை முற்றும் அழிந்து போயுள்ளன. யோகமாணிக்கவாசகர் சிலை மட்டும் முகமண்டபத்தில் உள்ளது.

இக்கோயிலில் ஒருகால பூஜை மட்டும் நடைபெறுகிறது. சுற்றிலும் அம்பலத்தடியார் மடத்தைச் சேர்ந்த வீரசைவத்துறைகளின் சமாதிக் கோயில்கள் உள்ளன.

திருக்கழுக்குன்றம் - ஆன்மநாதர் சந்நிதி

திருக்கழுக்குன்றத்தில் மாணிக்கவாசகர் பல நாட்கள் தங்கியிருந்தார். அந்நாளில் இறைவன் அவருக்குத் தனது பல திருக்கோலங்களைக் காட்டி அருளினார். இதனைத் திருவாசகத்தில் "கணக்கிலாக் கோலம் வந்து காட்டினாய் கழுக்குன்றிலே" என்று சிறப்பித்துப் பாடியுள்ளார். திருக்கழுக்குன்றத்தையும் பெருந்துறையையும் இணைத்துப் போற்றும் இப்பதிகம் "திருக்கழுக் குன்றப் பதிகம்" எனப்படுகிறது.

திருக்கழுக்குன்றத்தில் தாழக்கோயில் எனப்படும் பக்தவத்சலர் ஆலயத்தின் இரண்டாம் பிரகாரத்தில் அக்னி மூலையில் கிழக்கு நோக்கியவாறு ஆன்மநாதர் சந்நிதி அமைந்துள்ளது. பெரிய விமானத்துடன் கூடிய இந்த சந்நிதியில் கருவறையும் முகமண்டபமும் மட்டுமேயுள்ளன. இதில் ஆன்மநாதர் மலர்ப்பீட வடிவில் எழுந்தருளியுள்ளார் இவருக்கு நேர் எதிரில் மாணிக்கவாசகர் சந்நிதி உள்ளது. இங்கு தினமும் ஒரு கால பூஜை நடைபெறுகிறது.

திருவண்ணாமலை - ஆத்மநாதர் ஆலயம்

மணிவாசகப் பெருமான் திருவண்ணாமலையில் பலநாட்கள் தங்கியிருந்து சிவயோகத்தில் திளைத்தார். அங்கிருந்த போது பாடியதே திருவெம்பாவையாகும். இன்னும் பல பாடல்களை அங்கிருந்தே பாடியுள்ளார். திருவண்ணாமலையின் மேற்கில் வரும்பாதையில் மலைவலம் அடியண்ணாமலை என்ற ஊர் உள்ளது. இங்கு அடி அண்ணாமலையார் ஆலயம் உள்ளது. ஊரின் மையத்தில் மாணிக்கவாசகர் ஆலயம் என்ற பெயரில் ஆத்மநாதர் ஆலயம் உள்ளது. இதில் மலர்ப்பீட வடிவில் ஆத்மநாதரும் நின்று தொழும் வகையில் மணிவாசகர் திருவுருவமும் உள்ளன. தினப்பூசைகள் நடைபெறுகின்றன.

திருவெண்காட்டு - ஆத்ம நாதர்

மணிவாசகர் சிவயோகத்தில் வீற்றிருந்து சிவபெருமானைக் கண்டு மகிழ்ந்த தலங்களில் திருவெண்காடும் ஒன்றாகும். திருவெண்காட்டில் அவருக்கு அருள்புரிந்து ஞான உபதேசம் செய்த இடம் ஆலயத்தின் நிருதி மூலையாகும். இங்கு அவருடைய இரண்டு திருஉருவங்கள் உள்ளன. ஒன்று இயல்பான வடிவிலும் மற்றது யோக நிலையிலுமாக உள்ளன. இவர் எழுந்தருளியுள்ள மேடைக்கு முன்புறம் அகன்ற பலிபீடம் உள்ளது. இதுவே ஆத்மநாதர் வடிவமாகும்.

நரி-பரி வித்தை

சித்தர்களின் பரிபாஷையில் ஞானம் பெற்றுச் சுகத்தில் இருக்கும் நிலைகளில் ஒன்று நரி–பரி வித்தையாகும். மனிதனுடைய புலன்கள் உயிருக்கு நன்மை செய்வது போல் அதற்கு உலக இன்பங்களை ஊட்டி பிறப்பு–இறப்பு என்னும் வளையத்துள் சிக்க வைக்கின்றன. இதனால் அவை வஞ்சப்புலன்கள் என்றும், விலங்கு குணம் கொண்டவை என்றும் குறிக்கப்பட்டு வஞ்சனை குணம் மிகுந்த நரிகளாக உருவகப்படுத்தப்படுகின்றன. புலன்களுடைய வஞ்சனை குணத்தை மாற்றி உள்முகம் திருப்பிவிட்டால் அது குதிரையைப் போல் தலைவன் மீது விசுவாசமும், தியாகபுத்தியையும் பெற்றுவிடுகிறது. அவற்றின் தலைவனாகிய உயிர் பெருவழியில் பயணம் செய்து முத்தியின்பத்தை அடைகிறது. அப்படிப் பயணம் செய்யும் வேளையில் மாயையை அறுத்து எறியும் ஞானவாளை ஏந்தியவாறு சிவபெருமான் முன்னே செல்கின்றான்.

நரிபரி வித்தை என்பது புலன்களின் நரி போன்ற வஞ்சனை குணத்தை மாற்றி உலக இன்பதுன்பங்களை வென்று புலன்களின் வேகத்தை ஆன்ம சுகத்திற்கு ஏதுவாகத் திருப்பி இறைவன் கருணை என்னும் குதிரை மீது ஏறி மோட்ச உலகை அடைவதேயாகும். ஒன்றின் குணத்தை முழுவதுமாக எதிர் திசையில் திருப்பி மேன்மை பெற வைப்பது சிவபெருமானால் மட்டுமே முடிவதாகும். இதையே தேவாரத்துள் நரியைப் பரி செய்வானும் நரகரைத் தேவு செய்வானும் என்ற தொடரால் அப்பரடிகள் குறிக்கின்றார்.

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

Center for Shaiva Studies, Pondicherry Collection

CC0. In Public Domain. Digitization by Agam Nigam. Funding Tattva Heritage Foundation, Kolkatta

நூல் மலரும் வேளையில்...

திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம் அவர்களிடமிருந்து பதிப்பாசிரியர் திருமதி. எஸ். நாகபூஷணம் சுதர்சன் அவர்கள் அருளாசியுடன் மலரைப் பெற்றுக் கொள்ளுதல். அவருடன் அவரது கணவர் பேரா. டாக்டர். தஞ்சை T.R. சுதர்சன் (டீன், சோபியா பல் மருத்துவக்கல்லூரி, திருச்சி) அவர்கள் மற்றும் பிரம்மஸ்ரீ. பாலசுப்பிரமணிய நம்பியார் அவர்கள்



Center for Shaiva Studies, Pondicherry Collection